Vol.8, Issue 5 | Annual Subscription ₹480
Rotary News, October 2025, Chennai

அக்டோபர் 2025

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org




Rotary

# வாழ்நாள் சாதனையாளர்கள்



PRIP *கல்யாண் பானர்ஜியுடன்* RI *இயக்குநர்கள்* K P *நாகேஷ் (இடது) மற்றும்* M *முருகானந்தம்.*





*மேலே:* PSNA *நிறுவனத்தின் சார்புத் தலைவர்* R S K *ரகுராமுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்.* RI *தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ மற்றும்* RID *முருகானந்தம் ஆகியோரும் உள்ளனர்.*

*இடப்புறம்: ராஜ்யசபா எம்.பி.யும், நடிகருமான கமல்ஹாசனுக்கு* RID *முருகானந்தம் விருது வழங்குகிறார்.* RI *தலைவர் அரேஸ்ஸோ மற்றும் அவரது மனைவி ஆனா ஆகியோரும் உள்ளனர்.*



*காவேரி மருத்துவ மனையின் நிறுவனர் டாக்டர்* S *சந்திர குமாருக்கு* RI *தலைவர் அரேஸ்ஸோ விருதை வழங்குகிறார். இடமிருந்து:* RID *நாகேஷ், தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி,* RID *முருகானந்தம், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரும் உள்ளனர்.*

# உள்ளே




12

சேவைக்கான ரோட்டரியின் பங்களிப்பு உலகிலேயே இந்தியாவில் மிக அதிகம்



22

ரோட்டரி, நம்பிக்கையின் ஒரு உயிர் நாடி



36

கல்வியின் சக்தி



38

ரோட்ராக்டர்களின் நிகழ்ச்சியால் வியப்படைந்த அரேஸ்ஸோ



60

கழிவு மேலாண்மையில் ஒரு பாடம்



72

கிளிமஞ்சாரோவில் ரோட்டரி கொடியை ஏற்றிய ஜோத்பூர் ரோட்டேரியர்



80

ஒருநாளைக்கு 50,000 மரக்கன்றுகள் நடுதல்


Rotary

A publication of Rotary Global Media Network


நம் சுற்றுச் சூழலை பாதுகாக்க மின்பதிப்புக்கு மாறவும்

**மின்னிதழ் கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து **₹324**-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## ஒரு ஊக்கமளிக்கும் பசுமைக் கதை




*'பசுமையான கிரகத்திற்கான வேரூன்றல் என்ற முகப்புக் கட்டுரை எனக்கு மிகவும் ஊக்கமளித்தது. இந்தியா முழுவதும் ஒரு கோடி மரக் கன்றுகளை நடும் 'கோடி நாட்டி திட்டம் ஏற்கனவே 48.2 லட்சம் மரக்கன்றுகளை நட்டு, நிலப்பரப்பை மாற்றி பசுமையான எதிர்கால நம்பிக் கையை உருவாக்கியுள்ளது. DGE ரவிசங்கர் டகோஜு, நீல் ஜோசப் மற்றும் குழுவினரின் அயராத முயற்சிகள் தெளிவாகத் தெரிகின்றன, அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுகள்.*

*கர்னல் (ஓய்வு) விஜயகுமார்*
RC *ஆலப்பி கிரேட்டர்* — D 3211

*அட்டைப்படக் கட்டுரை அருமையாக இருந்தது! நீடித்ததன்மை மற்றும் ஒரு பசுமையான கிரகம் ரோட்டரியின் முக்கிய முன்னுரிமையாகும். புவி வெப்பமயமாதல் ஒரு முக்கியமான பிரச்சினை, மேலும் இத்திட்டம் மற்ற ரோட்டேரியர்களுக்கும் ஒரு தொடர் விளைவை ஏற்படுத்தும். எங்களின்* DGE *டகோஜு அவர்களின் தாராள மனப்பான்மைக்கு நன்றிகள், அவரை 'பிரகிருதி புருஷ் என்று சரியாகவே அழைக்கின்றனர். இந்த அற்புதமான கட்டுரைக்காக ரஷீதாவுக்குப் பாராட்டுகள்.*

*அகில் ரசாய்,* RC *பெங்களூர்* — D 3191

*பசுமைப் போராளிகளான டகோஜு மற்றும் ஜோசப் ஆகியோருக்கு வாழ்த்துகள். போலியோபிளஸ் இயக்கத் திற்குப் பிறகு, அடுத்த பெரிய* RI *திட்டம் "பூமித்தாயைப் பசுமையாக்குதல்" என்பதாக இருக்க வேண்டும்;* 30 *ஆண்டுகள் கழித்து, நாம் மரங்களை நடவில்லை என்று நம் பிள்ளைகள் நம்மைக் குறை கூறக்கூடாது. இந்த நல்ல நோக்கத்திற்காக ரோட்டேரியர்கள் தங்கள் பிறந்தநாள்/திருமண நாட்களில் நன்கொடை அளிக்கக்கூடிய வங்கிக் கணக்கு விவரங்களைக் கொடுக்கலாம்.*

*ரமேஷ் சாரி,* RC *பெங்களூர் ஆர்க்கர்ட்ஸ்* — D 3191

RI இயக்குநர் முருகானந்தத்தின் 1:2:3 சூத்திரம், 12 லட்சம் உறுப்பினர் தடையை உடைப்பதற்கான ஒரு எளிய மற்றும் பயனுள்ள உத்தியாகும்."ஒவ்வொரு ரோட்டேரியருக்கும், இரண்டு ரோட்டராக்டர்களையும் மூன்று இன்டராக்டர் களையும் நமது சங்கங்களுடன் ஈடுபடுத்துவோம்." என அவர் கூறுகிறார்.

R முரளி கிருஷ்ணா, RC பெர்ஹாம்பூர் — D 3262

உணவு வீணாவதைத் தடுப்பதற்கானஆசிரியரின் அறைகூவல் காலத்திற்கேற்றது. இந்தியாவில் மட்டும் குடும்ப மற்றும் சமூகக்கூட்டங்களில் சுமார் 7.8 கோடி கிலோ உணவு வீணாகிறது. உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் பசியால் வாடுகின்றனர். நான் உறுப்பினராக உள்ள 'ஐக்யம் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம், கடந்த 36 வாரங்களில் தேவையுள்ளோருக்கு 2,032 மதிய உணவுகளை வழங்கியுள்ளது. காலை உணவுக்கு ரூ.25 மற்றும் இரவு உணவுக்கு ரூ.50 மட்டுமே செலவாகும். தலையங்கத்தைப் படித்த பிறகு, வீணாகும் உணவை சேகரித்து தேவையுள்ளோருக்கு வழங்க முடியும் என்பதை நான் அறிந்துகொண்டேன். விழிப்புணர்வை ஏற்படுத்திய 'ரோட்டரி நியூஸ் இதழுக்கு நன்றி. ஆனால், ரோட்டரி நிகழ்வு களிலும் கூட நிறைய உணவு வீணாகிறது.

சிவ பெருமாள்சுப்ரமணி
RC வாலாஜாபேட்டை — D 3231

ஆசிரியரின் குறிப்பு சுட்டிக்காட்டுவது போல், நாம் உணவை வீணாக்காமல் சேமிக்க வேண்டும். உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியர்கள் உணவுகளைச் சேகரித்து பசியால் வாடுவோருக்கு விநியோகிப்பது நம் அனைவருக்கும் ஊக்க மளிக்கிறது.

அருண் குமார் டாஷ்
RC பாரிபடா — D 3262

### 'ரோட்டரி நியூஸ் இதழுக்கு நன்றி

பலா மரக்கன்றுகளை விநியோகிக்கும் எங்களின் 'ப்ராஜெக்ட் கிரீன் எர்த்' என்ற சூழலியல் முயற்சியை விவரித்ததற்காக, RC மால்டா சார்பாக 'ரோட்டரி நியூஸ் மற்றும் ஜெயஸ்ரீக்கு எனது மனமார்ந்த நன்றி. எங்கள் சிறிய உள்ளூர் திட்டத்தை ரோட்டேரியர்களுக்கான உத்வேகத்தின் சின்னமாக உயர்த்தியுள்ளீர்கள். ஊட்டச்சத்து, வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் புத்துணர்ச்சி ஆகியவற்றை உறுதி செய்வதற்காக 10,000 பலா மரக்கன்றுகளை நடும் எங்கள் திட்டத்தின் தாக்கத்தை பாபுக் கிராமப் பஞ்சாயத்தின் பசுமையான குக்கிராமங்களையும் தாண்டி நீங்கள் விரிவு படுத்தியுள்ளீர்கள்.

பாஸ்கர் பால்
RC மால்டா — D 3240

சுப்ரோதோ பாக்சி எழுதிய 'தி டே தி சாரியட் மூவ்ட் என்ற புத்தகத்தின் விமர்சனம் நன்றாக எழுதப் பட்டிருந்தது. நம் நாட்டில் திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்துவதால், இது ரோட்டேரியர்களுக்கு மிகவும் ஊக்கமளிக்கும் புத்தகமாக இருக்கும்.

ராதேஷ்யாம் மோடி
RC அகோலா — D 3030

'உலகை மாற்றும் நட்பு' என்ற அழகாக எழுதப்பட்ட கட்டுரை, தெற்கு கலிபோர்னியாவிற்கான எங்கள் பயணத்தின் சாராம் சத்தைப் படம் பிடித்ததோடு, ரோட்டரியின் மதிப்புகளான நட்பு, கலாச்சாரப் பரிமாற்றம் மற்றும் எல்லை கடந்த சேவை ஆகியவற்றைப் பிரதிபலித்தது.

PDG சஞ்சீவ் குப்தா — D 3040

எங்கள் சங்கத்தின் டெங்கு ஒழிப்பு முகாம் பற்றிய முத்துக்குமரனின் செய்தி வெளியீடு, வார்த்தைகளைத் தாண்டி, எங்கள் RC மணிப்பால்

## ஒரு அற்புதமான இதழ்

*செப்டம்பர் இதழின் ஒவ்வொரு பக்கமும் செறிவாக இருந்தது. மேலும், தரமான சேவைத்திட்டங்களின் அழகான புகைப் படங்களால் நிரம்பியிருந்தது. பல்வேறு கட்டுரைகள் ரோட்டேரியர்களுக்கு ஊக்கமளிக்கும் பல நல்ல விஷயங்களை சொல்கின்றன.*

*கடிதங்கள் பகுதியில், RID 3212-ஐ சேர்ந்த PDG V R முத்து உட்பட மூன்று ரோட்டேரியர்கள், RC கொடைக்கானலைச் சேர்ந்த ராஜ்குமார் ராமனின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டியுள்ளனர். அவர் 14 பழங்குடி குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளார். ஆகஸ்ட் இதழில் ஆசிரியர் இந்த சேவைத் திட்டத்தைப் பற்றி வெளியிட்ட செய்தி, PDG முத்துவை இந்த வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக ரூ.1 லட்சம் நன்கொடை அளிக்கத் தூண்டியுள்ளது. இதுபோன்ற புதுமையான திட்டங்களை மற்ற ரோட்டரி சங்கங்களுக்கும் ரோட்டேரியர்களுக்கும் தெரியப்படுத்தி யதற்கு வாழ்த்துகள்.*

*R சீனிவாசன், RC பெங்களூரு J P நகர் — D 3191*

*மாதம் தோறும், ரோட்டரி நியூஸ் இதழ் படிப்பதற்கு பல சுவாரஸ்யமான தகவல்கள் மற்றும் கட்டுரைகளுடன் ஒரு புதிய தோற்றத்தைப் பெறுகிறது. 'மகாராஷ்டிராத்தின் வறண்ட கிராமங்களுக்குத் தண்ணீர் (ஆகஸ்ட் இதழ்) என்ற தலைப்பிலான கட்டுரை, அதன் குறிப்பிடத்தக்க உள்ளடக்கத்தால் வாசகர்களை ஈர்க்கிறது. RC ஹிராநந்தானி எஸ்டேட் செய்த இந்த அவசியமான திட்டத்தை நாங்கள் பாராட்டுகிறோம். 12 அணைகளைக் கட்டுவதன் மூலம், ஜவஹர்-மொகாதாவின் தண்ணீர் பற்றாக்குறையுள்ள பகுதியில் உள்ள 3,000 கிராமவாசிகளுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. சங்கத்தின் உறுப்பினர்களுக்குப் பாராட்டுகள்!*

*பரமேஷ் தேவ் சௌத்ரி, RC கௌஹாத்தி சவுத் — D 3240*

*சமீபத்தில் உங்கள் அலுவலகத்திற்கு வந்தபோது ரோட்டரி நியூஸ் இதழை உருவாக்கும் அர்ப்பணிப்பான முயற்சி களை கண்டு புதிய கண்ணோட்டம் பெற்றோம். ஒவ்வொரு வண்ணமயமான மற்றும் ஊக்கமளிக்கும் பதிப்பிற்கும் பின்னால் உள்ள கடின உழைப்பை நாங்கள் உணர்ந்தோம். இது வெறும் செய்திகளை வெளியிடுவது மட்டு மல்ல, ரோட்டரியின் உணர்வைக் உலகுடன் பகிர்வதாகும். இந்த விஜயம் அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் குழுப்பணியை எங்களுக்குக் காட்டியது.*

*இதுபோன்ற முயற்சிகளை நாம் தொடர்ந்து ஆதரிப்போம், ஏனெனில் அவை நமது ரோட்டரி குடும்பத்தை இணைப்பாகவும் ஊக்கத்துடனும் வைத்திருக்க உதவுகிறது.*

*நாகேஷ் கெஞ்சிகே, RC சிக்மகளூர் காபி லேண்ட் — D 3182*

*உங்களால் திருத்தப்பட்ட, நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் சமநிலையான இதழுக்கு என் பாராட்டுகள். தற்போது நடைபெற்று வரும் திட்டங்கள், RFE திட்டம் போன்ற வாய்ப்புகள், மற்றும் பதவியில் இருக்கும் மாவட்ட ஆளுநர்கள் மற்றும் வரவிருக்கும் மூத்த RI தலைவர்கள் பற்றிய பார்வையை நமக்குத் தருகிறது." ஓரிரு மணி நேரத்தில், ரோட்டரி இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள முடிகிறது, இது சிறிய சாதனை அல்ல! ஒரு சிறிய பரிந்துரை: பத்திரிகையை ஆன்லைனில் அணுக ஒரு QR குறியீட்டை வழங்கவும்.*

*டாக்டர் பிரவீன் சர்தா, RC அகமதாபாத் மெட்ரோ — D 3055*

*உங்கள் பாராட்டுகளுக்கு நன்றி. QR குறியீடு ஏற்கனவே உள்ளது - அறங் காவலர் தலைவர் மற்றும் அறங்காவலர் செய்திகள் தோன்றும் 10 மற்றும் 11-ம் பக்கங்களில்.*

*ஆசிரியர்*

ஹில்ஸ் உறுப்பினர்களின் உணர்வு, தியாகங்கள் மற்றும் மகிழ்ச்சியைப் பிரதிபலித்தது. எங்கள் மன உறுதியை உயர்த்தி, எங்களுக்குப் புத்துணர்ச்சி அளித்தது.

சுபர்ணா ஷெட்டி, RC மணிப்பால் ஹில்ஸ் — D 3182

ஆகஸ்ட் மாத அட்டைப் படத்தில் ஒரு பெண் சிரிக்கும் புகைப்படம், பழங்குடியினருக்காகக் கட்டப்பட்ட வீடுகளைப் பற்றிய அற்புதமான கதையைப் படிக்க வைத்தது. கிராமப் புறப் பெண்களுக்கு அதிகாரமளிப்பது பற்றிய கட்டுரை எனக்குப் பிடித்திருந்தது.

ஆத்மாராம் குப்தா
RC மஹாராஜ்கஞ்ச் — D 3120

ஆகஸ்ட் இதழில் கொடைக்கானல் பழங்குடியினருக்காகக் கட்டப்பட்ட வீடுகள் பற்றிய கட்டுரையைப் பார்த்ததில் மகிழ்ச்சி. 'சர்வே ஜன சுகினோ பவந்து என்ற இந்து தத்து வத்திற்கு ஏற்ப, உலகம் முழுவதும் நல்ல சமூகங்களைக் கட்டி யெழுப்புவதில் ரோட்டரி ஒரு பெரிய பங்கை வகிக்கிறது.

சுரேஷ் குமார் D
RC ராயச்சோட்டி — D 3160

ஆகஸ்ட் இதழில், கொடுப்பதில் உள்ள கருணை என்ற ஆசிரியரின் குறிப்பு அருமை. மேலும் பல கட்டுரைகள் இந்த இதழில் சுவாரஸ்யமாக இருந்தது.

டேனியல் சிட்டிலப்பிள்ளி
RC களூர் — D 3205


RC டின்சுகியா ஏற்பாடு செய்த செயற்கை உறுப்புகள் வழங்கும் முகாம், இளைஞர்களுக்கு அதிகார மளித்தல், மூத்த குடிமக்களுக்குத் தன்னம்பிக்கை அளித்தல், வருதல் மற்றும் நலிவடைந்தவர்களுக்கு நம்பிக்கையூட்டுதல் ஆகியவற்றின் மீது கவனத்தை ஈர்த்துள்ளது. பயனாளிகளின் முகத்தில் தெரியும் மகிழ்ச்சி அனைத்தையும் சொல்கிறது.

கல்பேஷ் மோடி, RC பாலன்பூர் டைமண்ட் சிட்டி — D 3055

அட்டையில்:
RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ மற்றும் அவரது மனைவி ஆனா மரியா.
படம்: ரஷீதா பகத்.

RI தலைவரிடமிருந்து...

# சமூகத்தால் வழிநடத்தப்படும் வளர்ச்சி எப்படி இருக்கும்?



அக்டோபர் மாதம் ரோட்டரியின் சமூக பொருளாதார மேம்பாட்டு மாதம். தலைமைத்துவம் என்பது மக்கள் தங்களின் முன்னேற்றத்தை வழிநடத்திச் செல்ல அதிகாரம் அளிப்பது. ரோட்டரியின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் அதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளன.

சமீபத்தில் தென்னிந்தியாவில் ரோட்டரி மேற்கொண்ட ஒரு முயற்சியை இதற்கு எடுத்துக் காட்டாக கொள்ளலாம். இதில் ரோட்டரி உறுப்பினர்கள் தையல் பயிற்சி மூலம் ஆதிவாசி பழங்குடியின பெண்களின் சக்தியை வெளிக்கொணர்ந்து வாழ்க்கையில் வருமானம் ஈட்டவும், சமூக அந்தஸ்தை பெறவும் உதவினர். வரலாற்று ரீதியாக இந்தப் பகுதியைச் சேர்ந்த விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சமூக அந்தஸ்தை இழந்து, சமூகத்தால் புறக்கணிக்கப்படுகிறார்கள் அல்லது அவர்களின் துரதிருஷ்டத்துக்காக குற்றஞ் சாட்டப்படுகிறார்கள். பெண்கள் தங்களைத் தாங்களே ஆதரிக்கவோ அல்லது பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகும்.

இந்த ஆண்டு ஒன்டாரியோவில் உள்ள விண்ட்ஸர்-ரோஸ்லாண்ட் ரோட்டரி சங்கம், இந்தியாவில் 3203 மற்றும் 3234 மாவட்ட சங்கங்களுடன் கூட்டாண்மை வைத்து மற்றும் இந்தியாவில் உள்ள சேவாலயா அறக்கட்டளையுடன் இணைந்து 80 ஆதிவாசி பெண்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கி பயிற்சியும் அளித்தது. அவர்கள் இரவிக்கைகள், குர்தாக்கள் மற்றும் சல்வார் சூட்ஸ் தைப்பதற்கு கற்றுக் கொண்டனர். இதனால் அவர்கள் வருவாய் பெற்று தங்களையும் தங்கள் குடும்பத்தையும் ஆதரிக்க முடிந்தது. தையல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் தையல் இயந்திரங்களை வழங்கியவர்கள் அதை இலவசமாக பராமரிக்கவும் முன்வந்தனர். விதவையான பிறகு சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்பட்ட பெண்களுக்கு இத்திட்டம் வருவாயை ஏற்படுத்தித் தந்ததுடன் அவர்கள் கண்ணியத்துடன் வாழவும் வழிவகுத்தது.

இந்தக் கதை ரோட்டரி தலைமைத்துவ செயல் பாட்டிற்கான ஒரு எடுத்துக்காட்டுதான். உள்ளூர் மக்கள் தங்கள் சமூகத்தின் தேவையை நிவர்த்தி செய்வதற்கான வழியை காட்டுகிறார்கள். அவர்களுக்கு நிதியுதவி அளிப்பதோ அல்லது அவர்களிடம் வேறு வழிகளைத் திணிப்பதோ எங்கள் வேலை அல்ல. ஆனால், தலைமைத்துவம், திறன் மற்றும் நிலையான நிறுவனத்தில் முதலீடு செய்வதன் மூலம் சுயசார்புத்தன்மையை வளர்ப்பதாகும்.

இந்த அக்டோபரில், உலகெங்கிலும் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள், தங்கள் சமூகத்தில் பொருளாதார தலைமைத்துவத்தை பிரதிபலிக்க நான் அழைப்பு விடுக்கிறேன். உள்ளூர் பொருளாதார மேம்பாட்டுக்கான முயற்சியை மேற்கொள்ள யார் முன்வருகிறார்கள்? பயிற்சி மற்றும் வழிகாட்டுதலுடன் திறமைகளை வெளிக்கொணர யார் தயாராக இருக்கிறார்கள்? உள்ளூர் வர்த்தகம், தொழிற்பயிற்சி நிலையங்கள் அல்லது சேமிப்பு குழுக்களுடன் கூட்டாண்மை மூலம் உங்கள் சங்கம் எப்படி வாய்ப்புகளைப் பயன்படுத்தப் போகிறது?

தலைமைத்துவம் என்பது எளிதில் புலப்படக் கூடியது அல்ல. சில நேரங்கள் அது கேட்பது, இணைந்து செயல்படுவது மற்றும் மற்றவர்களின் குரலை எதிரொலிப்பது ஆகும். அந்த அணுகுமுறை ரோட்டரியின் தத்துவத்தின் மையத்திலும் பொருளாதார வளர்ச்சியில் நாம் ஏற்படுத்தும் நீடித்த தாக்கத்திலும் உள்ளது.

திறன் வளர்ப்பு மூலம்- அது சிறுகடன் குழுக்கள், தொழிற்பயிற்சி பட்டறைகள் அல்லது தொழில் முனைவோர் திட்டங்கள் மூலம்- சமூகத்தினர் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள நாம் உதவுகிறோம்.

ஒன்றாக இருந்து நாம் பொருளாதாரத்தை மேம்படுத்த ஆதரவு தரலாம் மற்றும் நீடித்த சமூக வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தலாம்.

**ஃப்ரான்ஸஸ்கோ அரேஸ்ஸோ**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# சன்டான்ஸ் கிட்டிற்கு பிரியாவிடை

கடந்த சில வாரங்கள் நெஞ்சத்தைப் பிளக்கும் செய்திகளைக் கொண்டுவந்தன. முதலாவது சங்கூ யுன் மறைவு. RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், மோசமான உடல் நலக்குறைவால் பதவி விலகினார். அவரது இழப்பை, அவரை நன்கு அறிந்தவர்களான, RI முன்னாள் தலைவர்களான K R ரவீந்திரன் மற்றும் சேகர் மேத்தா இருவரும் இதயபூர்வமான அஞ்சலியுடன் இந்த இதழில் படம்பிடித்து காட்டியுள்ளனர்.

மற்றொரு சோகமான சம்பவம் ஹாலிவுட் திரைப்பட நட்சத்திரம் ராபர்ட் ரெட்ஃபோர்டின் மறைவு. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி முதல் இப்போதுவரை வெள்ளித்திரையில் அவரது நடிப்பை கண்டு ரசிக்காதவர்களே இல்லை எனலாம். குறிப்பாக பெண்கள் அவர் மீது தனி ஈர்ப்பு கொண்டிருந்தனர். அவரது நடிப்பை புகழாத ஆண்களே இல்லை என்றுகூட சொல்லாம். ஒரு சிலர் அவரது நடிப்பாற்றலைக்கண்டு பொறாமைப்பட்டனர். மற்றொரு ஹாலிவுட் நட்சத்திரமான பால் நியூமேனுடன் அவர் இணைந்து நடித்து 1969-ம் ஆண்டு வெளிவந்த “புட்ச் காஸிடி அண்ட் தி சன்டான்ஸ் கிட்” திரைப்படத்தை யாரால் மறக்க முடியும்?

ரெட்ஃபோர்டு இயற்கையாகவே மென்மையானவர் மற்றும் வசீகரத் தோற்றம் கொண்டவர். ஹாலிவுட் நட்சத்திரமாக அவர் இருந்தபோதும் எல்லோரிடமும் மிகவும் பணிவாக பழகிவந்ததாக அவரது நண்பர்கள் கூறுவர். “The way we were” (த வே வி வேர்) திரைப்படத்தில் அவருடன் இணைந்து நடித்த நடிகை பார்பரா ஸ்ட்ரைசாண்ட் அவர் மீது மிகுந்த காதல் கொண்டிருந்தார். ரெட்ஃபோர்டு புத்திசாலி, கூச்ச சுபாவம் உள்ளவர். ஆனால், மிகுந்த தன்னம்பிக்கை கொண்ட அறிவுசார் கலைஞர் என்று பார்பரா வர்ணித்துள்ளார். அவரது படைப்புகள் நுட்பமாகவும் தொழில்நுட்பத்திறனுடன், கட்டுப்பாட்டுடனும், உணர்ச்சிவசப்படக்கூடியதாகவும் இருந்தன என்றும் அவர் குறிப்பிட்டார். ஆனால், காலப்போக்கில் அவர் சிறந்த நடிகர் என்பதைவிட அதிகமாக நினைவுகூரப்படுவார். ஏனென்றால் அவர், அதற்கும் அப்பாற்பட்டவராக இருந்தார்.

அவர் எதையும் ஆர்வமுடன் கேட்பார். முற்போக்கு சிந்தனையாளர். தீவிரமான சுற்றுச்சூழல் ஆர்வலர் மற்றும் பன்முகத்தன்மையை ஆதரிக்கும் போராளி. பெரும்பாலான சூப்பர் ஸ்டார்களைப்போல அவர் வெற்றியின் உச்சத்தை தொட்டவுடன் ஆடம்பர வாழ்க்கையில் மூழ்கிவிடவில்லை. 1981-ம் ஆண்டு புதிய மற்றும் பழைய கலைஞர்கள் தங்கள் திறமையை வளர்த்துக்கொள்ள உதவும் வகையில் சன்டான்ஸ் நடிப்புக் கல்லூரியை நிறுவினார். திரைக்கலைஞர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டு தங்களுக்கு என தனி பாணியை வகுத்துக்கொண்டு, தங்கள் நடிப்புத்திறனை துணிச்சலாக வெளிப்படுத்த வேண்டும் என அவர் விரும்பினார். ஒவ்வொரு கலைஞர்களும் தங்கள் கதாப்பாத்திரத்திற்கு ஏற்றவாறு இயல்பான முறையில் நடிப்பை வெளிப்படுத்த வேண்டும். நம்மை சுற்றியுள்ள உலகத்தில் வாழும் மனிதர்களின் நிலையை, அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை நடிகர்கள் சொந்த முகபாவத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்பார்.

நமது பாலிவுட் மற்றும் இதர இந்திய திரைத்துறை நட்சத்திரங்கள் போல் அல்லாமல், மனதுக்கு சரி எனப் பட்டதை துணிச்சலுடன் பேசுவதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். எதையும் கீச்சுக்குரலில் பேசாமல், அமைதியாகவும், துணிச்சலாகவும் கட்டுப்பாட்டுடனும் பேசவேண்டும் என்பார். 2002-ம் ஆண்டில் வாழ்நாள் சாதனையாளருக்கான ஆஸ்கர் விருதை அவர் பெற்றபோது, பிரபல நடிகர்கள், இயக்குநர்கள் மற்றும் பார்வையாளர்கள் முன்னிலையில் அவர் பேசினார். திரைத்துறை வளமானதாகவும் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால், வரும் காலங்களில் சில ஆபத்துகளை சந்திக்கும் அதே வேளையில் கலைத்துறையின் சுதந்திரம் வளர்க்கப்படுவதையும் உறுதிசெய்ய வேண்டும். ஏனெனில் பன்முகத்தன்மையை உயிர்ப்புடன் வைத்திருப்பதன் மூலம் திரைத்துறை உயிர்ப்புடன் வைத்திருக்க முடியும் என்று நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்து அவர்கள் வாழ்ந்த உலகத்தின் வேகமான மாற்றம் குறித்த தனது கவலையை அவர் வெளிப்படுத்தினார். நாம் எல்லாம் குழப்பங்கள், பேரழிவுகள், துயரங்களுக்கு இடையே போராடி ஒரு வழியை கண்டுபிடித்து, அதை பிடித்துக் கொண்டு முன்னேற நினைக்கும்போது சுதந்திரம் என்னும் வார்த்தை நம்முள் வெளிப்படும். அது முக்கியமானது, அரிதானது. அதை நாம் பெற்றது அதிர்ஷ்டம். நமக்கு கிடைத்த சுதந்திரம் மிகப்பெரிய பரிசாகும். அதை சாதாரணம் என நினைக்கக்கூடாது. கலைத்துறையின் மகிமை என்னவென்றால், மாற்றம் வரும்போதும் தாங்கிநிற்பது மட்டுமல்லாமல், வழிநடத்துவதும்தான்.

திரையுலகில் மிகவும் செல்வாக்குபெற்ற நிலையில் ரெட்ஃபோர்டு சொன்ன வார்த்தைகளை சிந்தித்துப் பாருங்கள். அவை ஒரு சிந்தனையாளர், ஒரு தலைவர் பேசுவதைப் போல் இருக்கலாம். அவை இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இருக்கலாம். ஆனால், குழப்பமான சூழ்நிலை, பேரழிவு மற்றும் இருளை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கும் இன்றைய உலகிற்கு மிகவும் பொருத்தமானவை.

ரஷீதா பகத்

# நேற்று குப்பை மேடு, இன்று சமூகச் சோலை

ஜெய்ஸ்ரீ

முன்பு குப்பை மேடாகவும் தூய்மையற்ற பகுதியாகவும் இருந்த ஒரு நிலம் இப்போது பசுமையான சோலையாக மாறியுள்ளது. ஸ்ரீகாகுளத்தில் உள்ள ரோட்டரி வனம்தான் அது! நாகவல்லி ஆற்றின் கரையில் 1.3 ஏக்கருக்குப் பரந்து விரிந்திருந்த இந்த நிலம் முன்பு புறக்கணிக்கப்பட்டுக் குப்பை மேடாக இருந்தது. ஸ்ரீகாகுளம் ரோட்டரி சங்கம், RID 3020, அதை முற்றிலுமாக மாற்றியமைத்துள்ளது.

2017ல், இந்த நகரின் நகராட்சி இந்த வீண் நிலத்தை இந்தச் சங்கத்துக்கு ஒதுக்கியது. “அங்கு எல்லாவிதமான குப்பைகளும் நிறைந்திருந்தன: பிளாஸ்டிக்ஸ், பயன்படுத்திய துணிகள், கட்டுமானப் பொருட்கள், மதுப் புட்டிகள், இன்னும் பல” என்று நினைவுகூர்கிறார் முன்னாள் தலைவர் சிவசங்கர் தேவரசெட்டி. இந்த இடம் ஒரு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புக்கு அருகில் இருந்ததால், சிக்கல் இன்னும் பெரிதானது. ரோட்டரியன்கள் இதை மாற்றியமைக்க உறுதி கொண்டார்கள், விவசாய வேதிப்பொருட்களை உருவாக்கும் NACL இன்டஸ்ட்ரீஸ் ஆதரவுடன் எட்டு மாதங்கள் முயன்று இந்த நிலத்தைத் தூய்மைப்படுத்தினார்கள். அதன்பிறகு, நிலத்தை ஒழுங்குபடுத்தி, மூன்று அடிக்குப் புதிய ஆற்று மணலை நிரப்பி அதற்குப் புத்துயிர்ப்பூட்டப்பட்டது.

இங்கு நடுவதற்காக ஆந்திரப் பிரதேசக் காடுகள் துறை இந்தச் சங்கத்துக்கு 500 மரக் கன்றுகளை வழங்கியது, ரோட்டரி வனம் உருவானது. இது குப்பை மேடாக இருந்ததால், இந்தச் சங்கத்தினர் பழ மரங்களை இங்கு நடவில்லை. தொடக்கத்தில் நீரூற்றல் ஒரு சவாலாக இருந்தது. ஆனால், நகராட்சி இதற்கென்று ஒரு தனி நீர் இணைப்பை வழங்கி உதவியது.

முன்னாள் ஆளுநர்கள் MC தாஸ், குட்டட்டி விஸ்வநாத் வழங்கிய நிதியைக் கொண்டு இந்தச் சங்கம் இங்கு ஒரு நடைபாதை, திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், சுற்றுச் சுவரை அமைத்தது, இந்த இடத்தை உண்மையான சமூகப் பூங்காவாக ஆக்கியது. இதன் பராமரிப்பை உறுதிசெய்வதற்காகத் தோட்டக்காரர் மற்றும் காவலர் நியமிக்கப்பட்டார்கள். சங்க உறுப்பினர்கள் இந்தப் பசுமைப் பகுதியில் தங்கள் ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்களை நடத்தத் தொடங்கினார்கள்.

“இந்தப் பூங்கா ரோட்டரியின் பொதுத் தோற்றத்தைப் பெருமளவு மேம்படுத்தியுள்ளது. இந்த இடம் இப்போது இந்நகரின் பெருமைகளில் ஒன்றாகிவிட்டது. நடப்போர், உடற்கட்டு விரும்பிகள், சிறுவர்கள், அமைதி, புத்துணர்ச்சியான காற்றை விரும்பும் எல்லாரும் இங்கு வருகிறார்கள்” என்று மிகுந்த பெருமையுடன் சொல்கிறார் தேவரசெட்டி.

ரோட்டரி வனத்தின் வெற்றியைத் தொடர்ந்து, இந்தச் சங்கம் முழுமையான குப்பை மேலாண்மை அமைப்பு ஒன்றைத் தொடங்கவுள்ளது. ■

*ரோட்டரி வனத்தில் RC ஸ்ரீகாகுளம் உறுப்பினர்கள்.*



# RI இயக்குனர் செய்தி



# உலகிற்கு எப்போதும் ரோட்டரி தேவை

அன்புள்ள ரோட்டரி நண்பர்களே,

காலம் பறந்துகொண்டிக்கிறது. நாம் ஏற்கெனவே அக்டோபரில் இருக்கிறோம். ரோட்டரி ஆண்டில் கால்பகுதி நமக்குப் பின்னால் உள்ளது. அக்டோபர் மாதம் எப்போதும் அர்த்தமுள்ள மாதமாக இருக்கும். ரோட்டரி முழுவதுக்கும் இது பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டு மாதமாகும். மேலும் இந்த மாதம் 24-ம் தேதிதான் உலக போலியோ தினம் கொண்டாடப்படுகிறது.

1985-ம் ஆண்டு முதல் ரோட்டரி, மனித குலத்தின் மிகவும் முக்கியமான பணிகளில் ஒன்றான போலியோவை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தினமும் ஆயிரக்கணக்கானவர்களிலிருந்து போலியோவை ஒழிப்பதற்கான விளிம்புநிலை வரை நாம் பயணத்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது. நாம் 2.5 பில்லியனுக்கும் மேலான குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி போட்டுள்ளோம். 2.7 பில்லியன் டாலருக்கு மேல் பங்களிப்புச் செய்துள்ளோம். பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை உள்பட பலருடன் சக்திவாய்ந்த கூட்டாண்மை அமைத்துள்ளோம். ஆனாலும் போலியோவை முற்றிலுமாக ஒழிக்கும் நம் உறுதிமொழி இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. இந்த ஆண்டு போலியோ ஒழிப்பு தினத்தில், நமது அனைத்து மண்டலங்களிலும் உள்ள ரோட்டேரியன்கள் ஒவ்வொருவரும் போலியோ பிளஸ்க்கு தலா 50 டாலர் நிதிப்பங்களிப்புச் செய்ய அழைப்பு விடுக்கிறேன். கேட்ஸ் அறக்கட்டளையின் 2-க்கு-1 பங்களிப்புடன் உங்கள் பரிசு 150 டாலராக மாறி, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பணியை முடிப்பதற்கு நம்மை நெருங்கி வருகிறது.

நமது பிராந்தியமும் உலகமும் பொருளாதார மேம்பாட்டுக்கு எதிராக சந்திக்கும் சவால்களால் வளர்ச்சி குறைந்து வருகிறது. விலைவாசி உயர்வு, வறுமை, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பின்மை மற்றும் சமத்துவமின்மை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஆனால், ரோட்டரி தனித்துவமாக இந்த சவால்களை சந்திக்க தயாராக இருக்கிறது. வாழ்வாதாரங்களை உருவாக்குதல், மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல், கல்வி மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் நிலையான திட்டங்களை உருவாக்குவதன் மூலம் சவால்களை வாய்ப்புகளாக மாற்ற முடியும். ஒவ்வொரு சேவைச் செயலும் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் நமது சமூகங்களின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கிறது மற்றும் நிலையான வளர்ச்சிக்கான இலக்கை நோக்கி முன்னேறுகிறது.

இந்த ஆண்டின் முதல் காலாண்டு ஊக்கமளிப்பதாக இருந்தது. நமது மண்டலங்கள் முழுவதில் ஏறக்குறைய 12,000 புதிய உறுப்பினர்களை நாம் வரவேற்றுள்ளோம். இது இந்தியாவில் உள்ள ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை 1,80,000-ஆக உயர்த்தியுள்ளது. ரோட்ராக்ட் 38,357 உறுப்பினர்களுடன் தொடர்ந்து செழித்து வருகிறது. நாம் ஒன்றாக இருந்து ரோட்டரி அறக்கட்டளைக்கு 3 மில்லியன் டாலர் பங்களிப்புச் செய்துள்ளோம். நாம் ஒரு நோக்கத்துடன் செயல்படும் போது, நம்மால் என்ன சாத்தியம் என்பது இந்த சாதனைகள் நமக்கு நினைவூட்டுகின்றன.

இந்த உந்துதலை தக்கவைத்துக்கொண்டு நாம் முன்னேற்றப்பாதையை நோக்கிச் செல்ல வேண்டும். உறுப்பினர்களை ஆழமாக ஈடுபடுத்துவது, இதயபூர்வமாக சமூகத்திற்கு சேவை செய்வது மற்றும் CSR கூட்டாளி களுடன் நெருக்கமாகச் செயல்படுவதன் மூலம் நாம் நமது எல்லையை விரிவுபடுத்த முடியும் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

உலகிற்கு ரோட்டரி நிச்சயம் தேவை. நாம் வலுவாக வளர்வோம், தாராளமாக கொடுப்போம் மற்றும் புதுப்பிக்கப் பட்ட நோக்கத்துக்காக சேவை செய்வோம். நன்மைக்காக நாம் ஒன்றுபடுவோம். நீங்கள் ஒவ்வொரு நாளும் எங்களை பெருமைப்படுத்துகிறீர்கள்.

**KP நாகேஷ்**
RI இயக்குநர், 2025–27

**2026**
**RI மாநாடு**

# இளம் குரல்கள் கவனத்தை ஈர்க்கின்றன




convention.rotary.org-ல் இப்போதே பதிவு செய்யுங்கள்.







*ரோட்டராக்டர்களும் இளம் ரோட்டேரியன்களும் RI மாநாடுகளில் தலைவர்களாக உள்ளனர். புதிய தலைமுறை உறுப்பினர்கள் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள், மேலும் சேவைத் திட்டங்களை வழிநடத்துகிறார்கள். ஜூன் 13–வரை தைபேயில் அவர்களின் செயல்பாட்டைப் பாருங்கள்.*

**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| RID 2981 | லியோன் J |
| RID 2982 | சிவசுந்தரம் P |
| RID 3000 | கார்த்திக் J |
| RID 3011 | ரவீந்தர் குக்னானி |
| RID 3012 | அமிதா அனில் மொஹிந்த்ரு |
| RID 3020 | கல்யாண் சக்ரவர்த்தி Y |
| RID 3030 | தியானேஷ்வர் P ஷேவாலே |
| RID 3040 | சுஷில் மல்ஹோத்ரா |
| RID 3053 | நிஷா ஷெகாவத் |
| RID 3055 | நிகம்குமார் L சௌத்ரி |
| RID 3056 | பிரக்யா மேத்தா |
| RID 3060 | அமர்தீப் சிங் புனெட் |
| RID 3070 | ரோஹித் ஓபராய் |
| RID 3080 | ரவி பிரகாஷ் |
| RID 3090 | பூபேஷ் மேத்தா |
| RID 3100 | நிதின்குமார் அகர்வால் |
| RID 3110 | ராஜன் வித்யார்த்தி |
| RID 3120 | அசுதோஷ் அகர்வால் |
| RID 3131 | சந்தோஷ் மதுகர் மராத்தே |
| RID 3132 | சுதீர் V லத்துார் |
| RID 3141 | மணீஷ் மோத்வானி |
| RID 3142 | ஹர்ஷ் வீரேந்திர மகோல் |
| RID 3150 | ராம் பிரசாத் S V |
| RID 3160 | ரவீந்திரா M K |
| RID 3170 | அருண் டேனியல் பண்டாரே |
| RID 3181 | ராமகிருஷ்ண P கண்ணன் |
| RID 3182 | பலாக்ஷா K |
| RID 3191 | ஸ்ரீதர் B R |
| RID 3192 | எலிசபெத் செரியன் பரமேஷ் |
| RID 3203 | தனசேகர் B |
| RID 3204 | பிஜோஷ் மானுவல் |
| RID 3205 | ரமேஷ் G N |
| RID 3206 | செல்லா K ராகவேந்திரன் |
| RID 3211 | டினா ஆண்டனி குன்னும்கல் |
| RID 3212 | தினேஷ் பாபு J |
| RID 3231 | சுரேஷ் V |
| RID 3233 | தேவேந்திரன் D |
| RID 3234 | வினோத்குமார் சரோகி |
| RID 3240 | காமேஸ்வர் சிங் எலங்பம் |
| RID 3250 | நம்ரதா |
| RID 3261 | அமித் ஜெயஸ்வால் |
| RID 3262 | மனோஜ்குமார் திரிபாதி |
| RID 3291 | ரமேந்து ஹோம்சௌதுரி |

அச்சு மற்றும் பதிப்பாளர் **PT பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

M முருகானந்தம் RID 3000
RI Director &
Chairman, Rotary News Trust

KP நாகேஷ் RID 3191
RI Director

Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF Trustee

ராஜேந்திர K சாபூ RID 3080

கல்யாண் பானர்ஜி RID 3060

சேகர் மேத்தா RID 3291

அசோக் மகாஜன் RID 3141

P T பிரபாகர் RID 3234

Dr மனோஜ் D தேசாய் RID 3060

C பாஸ்கர் RID 3000

கமல் சங்வி RID 3250

Dr மகேஷ் கோட்பாகி RID 3131

A S வெங்கடேஷ் RID 3234

ராஜு சுப்ரமணியன் RID 3141

அனிருதா ராய்சௌத்ரி RID 3291

குலாம் A வானதி RID 3141

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2025–26)

ரோஹித் ஓபராய் RID 3070
தலைவர், ஆளுநர் குழு

தியானேஷ்வர்
ஷேவாலே RID 3030
துணைத்தலைவர், ஆளுநர் குழு

M K ரவீந்திரா RID 3160
செயலாளர், ஆளுநர் குழு

செல்லா
K ராகவேந்திரன் RID 3206
பொருளாளர், ஆளுநர் குழு

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

TRF
**தலைவரிடமிருந்து...**



# நட்பில் பிறந்தது

ரோட்டரியில் நட்பு என்பது பெரும்பாலும் உலகையே மாற்றக்கூடிய பலனைத் தருகிறது. நான் ரோட்டரித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, நைஜீரியாவைச் சேர்ந்த அப்போதைய துணைத் தலைவர் ஓலாயின்கா "யின்கா" ஹக்கீம் பாபலோலாவுடன் இயக்குநர்கள் குழுவில் பணியாற்றினேன். என் மனைவி சூசன், யின்காவின் மனைவி பிரெபா "பிரெசி" பாபலோலாவுடன் நேரத்தை செலவிட்டார். யின்காவும் பிரெசியும் ரோட்டரி அறக்கட்டளையை ஆதரிக்கிறார்கள். அவர்கள் AKS உறுப்பினர்கள்.

சூசன் மற்றும் பிரெசியின் நட்பு அவர்களின் சங்கங்கள் ஒன்றிணைவதற்கு வழிவகுத்தது. அக்டோபர் மாதம் ரோட்டரியின் சமூகப் பொருளாதார மேம்பாட்டு மாதத்தை குறிக்கும் வேளையில், பிரெசி பாபலோலாவின் ஒத்துழைப்பினால் ஏற்பட்ட தாக்கத்தை அவரது சொந்த வார்த்தைகளில் சிறப்பாக வெளிப்படுத்த முடியும் என நினைத்தேன்.

"நைஜீரியாவில், ஒபுவாமா, கோவிட்-19 தொற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டது. பல குடும்பங்கள், குறிப்பாக பெண்கள், இளைஞர்கள் நிலையான வருமானம் அல்லது வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருந்தனர். சமூகத்திற்கு உடனடி ஆதரவும், நீண்டகாலத் தீர்வுகளும் தேவைப்பட்டன. நான் சார்ந்த போர்ட் ஹார்கோர்ட் பாஸ்போர்ட் ரோட்டரி சங்கம் இதற்கு பதிலளிக்க முடிவு செய்தது. நம்பிக்கையையும் கண்ணியத்தையும் மீட்டெடுக்கும் திறன்களுடன் மக்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் உலகளாவிய மானியத் திட்டத்தை தொடங்க ஹாம்பர்க்-கனெக்ட் ரோட்டரி இ-சங்கம் மற்றும் எங்கள் மாவட்ட சங்கங்களுடன் நாங்கள் கூட்டு சேர்ந்தோம்.

250-க்கும் மேலான பெண்கள் மற்றும் இளைஞர்கள் மீன் பண்ணை, கோழிப்பண்ணை மற்றும் நத்தை வளர்ப்பு மற்றும் மணிகள் தயாரிப்பதில் பயிற்சி பெற்றனர். உள்ளூர் பிரமுகர்கள் நேரடி பட்டறைகளை வழிநடத்தினர். பங்கேற்பாளர்களுக்கு நிறுவனங்களைத் தொடங்குவதற்கான திறன்களை வழங்கினர்.

இப்போது குடும்பங்கள் வருமானம் ஈட்டுகின்றன. மேலும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதில் ஆர்வமாக உள்ளனர். இளைஞர்கள் சம்பாதிக்கின்றனர்.

ஒருகாலத்தில் செய்வதறியாமல் தவித்த பெண்கள் இப்போது தங்கள் சொந்த தொழில்களை வழிநடத்துகிறார்கள், இந்த திட்டம் ஒருவித அலையை ஏற்படுத்தியுள்ளது. அர்ப்பணிப்புள்ள ரோட்டேரியன்கள், ரோட்டரி அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படும்போது இதுபோன்ற மாற்றங்கள் உருவாகின்றன.

சமூகப் பொருளாதார மேம்பாடு என்பது பல காரணங்களுக்காக சக்திவாய்ந்த திட்டங்களில் ஒரு பகுதியாகும். இத்தகைய திட்டங்களை எங்குவேண்டுமானாலும் செயல்படுத்த முடியும். பெரும்பாலும் அவை வெற்றியின் ஆரம்ப அறிகுறிகளையே காட்டுகின்றன."

இரவு உணவின்போது உரையாடலாகத் தொடங்கியது வாழ்க்கையை மாற்றும் உலகளாவிய மானியத் திட்டத்திற்கு வழிவகுத்தது. ரோட்டரியில் நாம் உருவாக்கும் நட்புறவுகள் மூலம் தலைமுறை தலைமுறையாக வாழ்க்கையை மாற்றும் வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது அல்லவா?

**ஹோல்கர் நாக்**
TRF அறங்காவலர் தலைவர்

# சேவைக்கான ரோட்டரியின் பங்களிப்பு உலகிலேயே இந்தியாவில் மிக அதிகம்:

## ரோட்டரி சர்வதேச தலைவர்

ரஷீதா பகத்



**RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ மற்றும் அவரது மனைவி ஆனா மரியா.**




எந்த ஒரு இத்தாலிய ஆணிடமும் நீங்கள் வசீகரத்தை எதிர்பார்ப்பீர்கள்... ஏனெனில் வசீகரம் என்பது இத்தாலிய DNA-வின் ஒரு பகுதி. RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ வசீகரமானவர்... ஆனால் அவரிடம் வசீகரத்தை மேலும் சில விஷயங்கள் இருக்கின்றன... அவர் அறிவாளியாகவும், நகைச்சுவை உணர்வுடனும் இருக்கிறார், அதே நேரத்தில் தனது அதிகாரத்தை எளிதாகக் கையாள்வதால் அவரிடம் பேசுவது மிகவும் எளிது. கடினமான ஆங்கில வார்த்தைகளைத் தேடும்போது அல்லது நீண்ட வார்த்தைகளை உச்சரிக்கும்போது சற்றுத் தடுமாறலாம்... ஆனால் அவரது கபடமற்ற புன்னகையும் இயல்பான சிரிப்பும் அதை ஈடுசெய்துவிடுகின்றன. அவர் ஒரு உரை ஆற்றும்போது, அவரது கனமான இத்தாலிய உச்சரிப்பைக் கடந்து செல்ல சில நிமிடங்கள் ஆகும், ஆனால் அதைக் கடந்ததும், அவரது பேச்சின் உள்ளடக்கம் உங்களை சிந்திக்க வைக்கும்.

ரோட்டரி நியூஸ்களுக்கான நேர்காணலுக்காக, சென்னையில் நடைபெற்ற LEAD 25 மாநாட்டின் போது அரெஸ்ஸோவையும், அவரது கனிவான, எப்போதும் புன்னகைக்கும் துணைவியார் அன்னாவையும் சந்தித்தேன். நேர்காணலுக்கு அளிக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள், ஆனால் அவர்கள் தங்கள் ரோட்டரி பயணம் பற்றி 55 நிமிடங்கள் விவாதித்ததுடன், தங்களின் ஹோட்டல் அறையில் இருந்த குறைந்த இடத்திலும் புகைப்படங்களுக்கு போஸ் கொடுத்தனர்!

ஐரோப்பா, துருக்கி மற்றும் வட ஆப்பிரிக்கா முழுவதும் பல ஆலிவ் எண்ணெய் தயாரிப்பு மையங்களுக்குச் சென்றுவந்ததால், இத்தாலியில் உள்ள சிசிலியில் 200 ஆண்டுகளாக ஆலிவ் எண்ணெய் உற்பத்தி செய்யும் அவரது குடும்ப பண்ணை பற்றி அவரிடம் கேட்டேன். “அந்தப் பண்ணை என் மனதிற்கு

ரஷீதா பகத்

மிகவும் நெருக்கமானது, ஏனெனில் என் தாய், என் தாயின் தந்தை, என் தாயின் தாத்தா… ஆகியோர் அந்த உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இன்று, என்னை விட, அன்னா தான் அனைத்து கடின உழைப்பையும் செய்கிறார்.”

அரெஸ்ஸோ சிசிலியில் வளர்ந்தார், அங்கு அவரது குடும்பம் 800–900 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறது. “நாங்கள் முழுமையாக சிசிலியர்கள். நான் 70,000 மக்கள் கொண்ட ஒரு சிறிய நகரத்தில் பிறந்தேன். என் குழந்தைப்பருவம் மிகச் சிறப்பாக இருந்தது; 1960கள் மற்றும் 70கள் இத்தாலியில் வாழ்வதற்கு ஒரு அற்புதமான காலம்.”

அவருக்கு 10 வயதாக இருந்தபோது, கதிரியக்க நிபுணரான அவரது தந்தையை இழந்தார், பின்னர் தாயுடன் வளர்ந்தார். இத்தாலியில் வேறு நகரத்தில் பல் மருத்துவராகப் பயிற்சி பெற்ற பிறகு, தனது பல் மருத்துவமனையை நிறுவ அவர் வீடு திரும்பினார். அவர் அன்னாவை எப்போது, எப்படி சந்தித்தார்? “நான் அவளைச் சந்திக்கும்போது எனக்கு 2 வயது,” என்று அவர் புன்னகைக்கிறார். “எங்கள் குடும்பங்கள் மிகவும் நெருக்கமானவை, நாங்கள் இருவரும்





சென்னையில் நடைபெற்ற Lead25 மாநாட்டில்.





2017-ல் ஒரு உணவு வங்கி திட்டத்தில் உதவி செய்கிறார்.



இடது: ஆனா (வலது) மற்றும் RI தலைவர் அரேஸ்ஸோ RC மால்டாவின் மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டத்தில் பணிபுரிகின்றனர்.





Lead25 கான்க்ளேவில் உள்ள ஒரு ஸ்டாலில் அவரது உதவியாளர் ஜான் டி ஜியோர்ஜியோ மற்றும் அவரது மனைவி மோனிக் சேம்பர்ஸுடன்.

ஒன்றாக வளர்ந்தோம்!"

அப்படியானால், யார் முதலில் காதலைத் தெரிவித்தார்கள்? அரெஸ்ஸோவின் கண்களில் ஒரு குறும்பான ஒளி மின்ன, அவர் சொல்கிறார், "சரி, நான் என்ன சொல்வது; அவர்தான் ஒரு மிக வலிமையான பிரச்சாரத்தைச் செய்தார்!" அவர்கள் அக்டோபர் 1979-ல் திருமணம் செய்து கொண்டனர், அவர்களுக்கு இரண்டு மகள்கள் மற்றும் இரண்டு பேரக்குழந்தைகள் உள்ளனர், ஒருவருக்கு அவரது பெயரும், மற்றவருக்கு அன்னா பெயரும் சூட்டப்பட்டுள்ளது. "இந்தியாவில் நீங்கள் செய்வது போல," என்று அன்னா நகைச்சுவையாகச் சொல்கிறார்.

இந்தியாவிற்கும் இத்தாலியிற்கும் இடையே பல ஒற்றுமைகள் உள்ளன, குடும்ப பாசம், உணவகங்களில் சாப்பிடும்போது உணவைப் பகிர்ந்துகொள்வது போன்றவை என்று நான் குறிப்பிட்டேன். "இரண்டு நாடுகளுக்கும் நீண்ட வரலாறு மற்றும் கலாச்சாரம் உள்ளது, எனவே நாங்கள் மிகவும் ஒத்தவர்கள்... ஆனால் சில அம்சங்களில் நாங்கள் மிகவும் வித்தியாசமானவர்களும் கூட," என்றார்.

ரோட்டரியில் எப்போது, ஏன் சேர்ந்தீர்கள் என்று கேட்டதற்கு, அரெஸ்ஸோ, தனது கல்வி முடிந்தவுடன் வீடு திரும்பிய சிறிது காலத்திலேயே, அவரது தந்தையின் நண்பர்கள், ரகூசா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள், 1989-ல் அவரது பெயரை முன்மொழிந்ததாகக் கூறுகிறார். "நான் ரோட்டரியில் சேர்ந்தபோது, ரோட்டரி என்றால் என்ன என்று எனக்குத் துல்லியமாகத் தெரியாது. ஆனால் என் தந்தையின் நண்பர்கள் மற்றும் எனக்குத் தெரிந்த நகர மக்கள் பலரும் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்ததால் அதில் சேர்வது ஒரு நல்ல காரியமாகத் தோன்றியது. ஆனால் வழக்கம்போல், நீங்கள் ஒரு சங்கத் தலைவராக

# ஒரு பார்வையில்

**நீங்கள் ஒரு உணவுப் பிரியரா? உங்களுக்குப் பிடித்த உணவு வகை**

*அது மிகவும் எளிமையானது. நான் சிசிலியின்... பாஸ்தா உணவு வகைகளை விரும்புகிறேன். நாங்கள் நிறைய மீன் மற்றும் பல பாரம்பரிய உணவுகளை சாப்பிடுகிறோம். இத்தாலியில் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு விடுமுறைக்கும் ஒரு பாரம்பரிய உணவை நாங்கள் வைத்திருக்கிறோம்... கிறிஸ்துமஸ், புனித ஜான் தினம், ஈஸ்டர், மற்றும் பல. நான் அந்த உணவுகள் அனைத்தையும் விரும்புகிறேன்!*

**நீங்கள் சமைப்பீர்களா, உங்களுக்கு சமைக்கத் தெரியுமா?**

*அருகில் அமர்ந்திருந்த அன்னா, பின்னால் சாய்ந்து, தலையை வேகமாக அசைத்து, ‘ஓ! தயவுசெய்து அதை கேட்காதீர்! அவர் ஒரு பெரிய குழப்பத்தை ஏற்படுத்துவார்... அவருக்கு சமைக்க மிகவும் பிடிக்கும், ஆனால் நான் தான் சுத்தம் செய்ய வேண்டும்!" என்று கூறினார். ஜான் டி ஜார்ஜியோ மகிழ்ச்சியுடன் இடைமறித்து: அவர் ஒரு சமையல்காரராக இருப்பதை விட ஒரு சிறந்த தலைவர்! என்றார்.*



**இந்திய உணவு, காரத்தை பொறுத்துக்கொள்ளும் தன்மை:** *எனக்கு இந்திய உணவு மிகவும் பிடிக்கும். காரம் பிடிக்கும், ஆனால் அதிகமாக இல்லை!*

**மதம்:** *நான் ஒரு கத்தோலிக்கர் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்திற்குச் செல்கிறேன். ஆனால் நான் மற்ற மதங்களைப் பற்றி படிக்க விரும்புகிறேன். பகவத் கீதை போன்ற உங்கள் புத்தகங்களைப் பற்றி எனக்கு ஓரளவு தெரியும்.*

**வாசிப்பு; பிடித்த எழுத்தாளர்:** *எனக்கு வாசிக்க மிகவும் பிடிக்கும்... நான் சிசிலியைச் சேர்ந்த ஒரு எழுத்தாளரான பிரண்டெல்லோவை அதிகம் படிக்கிறேன். நான் துருக்கிய எழுத்தாளர் ஓர்ஹான் பாமுக் (2006 இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்), மற்றும் ரஷ்ய எழுத்தாளர் அன்டன் செக்கோவ் ஆகியோரை வாசிக்க விரும்புகிறேன். பாமுக்கின் புத்தகங்கள் அனைத்தும் என்னிடம் வீட்டில் உள்ளன; மை நேம் இஸ் ரெட் என்பது மற்றொரு சிறந்த புத்தகம்... கொஞ்சம் விசித்திரமானது ஆனால் மிகவும் அழகானது!*

**இசை:** *ஓபரா. எனக்கு கிளாசிக்கல் இசையும் பிடிக்கும்.*

**இசைக் கருவிகள்:** *இல்லை, ஆனால் என் குடும்பத்தில் என் அம்மா, பாட்டி மற்றும் அத்தை ஆகியோர் பியானோ வாசித்தார்கள்... என் அண்ணன் எல்லாவற்றையும் வாசிப்பார் - ட்ரம்பெட், கிதார்... நீங்கள் எதைக் கேட்டாலும்! நான்... வீட்டின் காலிங் பெல் மட்டுமே வாசிப்பேன்! (மனதார சிரிக்கிறார்).*

**பிடித்த சுற்றுலாத் தளம்:** *கடற்கரை அல்ல; என் வீட்டில் அருகிலேயே கடற்கரை உள்ளது. நான் நிறைய வரலாறு மற்றும் கலாச்சாரம் உள்ள இடங்களுக்குப் பயணிக்க விரும்புகிறேன். நான் இந்தியாவில் உள்ள கோவில்களுக்குச் செல்ல விரும்புகிறேன், ஏனென்றால் அங்கு நீங்கள் அந்த இடத்தின் கலாச்சாரத்தைப் பற்றி அறிந்துகொள்ள முடியும். சிசிலி, இந்தியாவுடன் ஒப்பிடும்போது சிறியது, ஆனால் அது கலாச்சாரத்திற்கான ஒரு கண்டம். இங்கு நீங்கள் கிரேக்கர்கள், ரோமானியர்கள், அரேபியர்கள், பைசண்டைன்கள், நார்மன்களின் பழைய கட்டிடங்களை காணலாம். நீங்கள் நகரத்தின் வழியாக நடக்கும்போது அந்த வரலாற்றையெல்லாம் படிக்க முடியும்.*

**உலகில் மிகவும் பிடித்த நகரம்:** *நேபிள்ஸ்; அது ஒரு அற்புதமான நகரம்... அது ஒரு பெரிய நகரம், அவ்வளவு பணக்கார நகரம் அல்ல, சற்று கைவிடப்பட்டது போல் இருக்கும் ஆனால் அதன் அழகு அதில் உள்ள பழமையான உணர்வு... அதன் சூழல். மேலும், அங்குள்ள மக்கள் மிகவும் அன்பானவர்கள் மற்றும் விரும்பத்தக்கவர்கள். இங்கு உணவு மிகவும் சுவையாக இருக்கும்; பிட்சா இங்குதான் பிறந்தது, மேலும் நேபிள்ஸில் உள்ள இசை சிறப்பானது. இத்தாலியின் அழகு என்னவென்றால், யாருக்கும் தெரியாத ஒரு நகரத்திலும் கூட, நீங்கள் ஒரு அழகான தேவாலயத்தைக் காணலாம்! அழகு நாடு முழுவதும் பரவியுள்ளது... அது ஒரு இடத்தில் குவியவில்லை, உதாரணமாக, பிரான்சில், அது பாரிஸில் குவிந்துள்ளது.*

**ரோட்டரிக்கான கனவு:** *என் கனவு எளிமையானது... போலியோவை ஒழிக்கும் பிரச்சாரத்தை முடிப்பது, மற்றும் நோபல் பரிசின் ஒரு பகுதியாகப் பங்கேற்பது... அதை வெல்வது மிகவும் கடினம், ஆனால் குறைந்தபட்சம் அந்த செயல்முறையில் பங்கேற்பது மிகவும் நன்றாக இருக்கும்.*

**போலியோவிற்குப் பிறகு என்ன:** *நேபிள்ஸ் எனக்கு பிடிக்கும் என்று நான் உங்களிடம் சொன்னேன். நேபிள்ஸில் உள்ள மக்கள் மிகவும் மூடநம்பிக்கை கொண்டவர்கள்... அதனால் போலியோவிற்குப் பிறகு என்ன செய்வது என்று இப்போது சிந்திப்பது துரதிர்ஷ்டமானது!*

ஆகும்போது தான் ரோட்டரி உண்மையில் என்ன என்பதைப் புரிந்துகொள்ளத் தொடங்குகிறீர்கள். அப்போதுதான் ரோட்டரி சமூகத்திற்கு எவ்வளவு அழகான மற்றும் பயனுள்ள ஒரு அமைப்பு என்பதைப் புரிந்துகொள்கிறீர்கள்."

அவர் சங்கத்தலைவராக 10 ஆண்டுகளும், ஆளுநராக மேலும் 10 ஆண்டுகளும் இருந்தார், படிப்படியாக "சிசிலி, இத்தாலி மற்றும் உலகம் முழுவதும் ஒரு பிணையத்தை" உருவாக்கினார். "நான் மிகவும் சுவாரஸ்யமான, மிகவும் ஆர்வமுள்ள மற்றும் என் ஆன்மாவுக்கு மிகவும் நெருக்கமான பலரைச் சந்தித்தேன்! இப்போது என் சிறந்த நண்பர்கள் பலர் ரோட்டரியிலிருந்து வந்தவர்கள். ஆனால் "ஒரே ஒரு விஷயம் தவறாகப் போய்விட்டது; நான் ஜானைச் (டி ஜார்ஜியோ) சந்தித்தேன்," என்று அறையில் அமர்ந்திருந்த அவரது உதவியாளரை சுட்டிக்காட்டிச் சொல்கிறார்.

அப்படியென்றால் அவர் இவரை துன்புறுத்துகிறார் அல்லது மிரட்டுகிறாரா, என்று நான் குறிப்பறிந்து கேட்டேன். "ஆம், அவர் தினமும் முயற்சி செய்கிறார்," என்று அரெஸ்ஸோ சிரிக்கிறார், மேலும் தான் ஆளுநராக இருந்தபோது, அதே ரோட்டரி சர்வதேச மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த RC மால்டாவின் தலைவராக இருந்த டி ஜார்ஜியோவைச் சந்தித்ததாகக் கூறுகிறார். "நாங்கள் மிக விரைவாக நல்ல நண்பர்களானோம்!"

அவரது ஆண்டைத் திட்டமிட அவருக்கு நேரமில்லை என்றாலும், ரோட்டரி சர்வதேச தலைவராக அவரது பார்வை மற்றும் முன்னுரிமைகள் என்னவென்று நான் அரெஸ்ஸோவிடம் கேட்டேன்: "நான் தலைவராவதற்கு சில நாட்களுக்கு முன்புதான் எனக்குத் தெரிந்தது... தயாராவதற்கு மிகக் குறைந்த நேரமே கிடைத்தது. ரோட்டரிக்கு மிக முக்கியமான சில விஷயங்கள் உள்ளன, அவற்றில் இரண்டு வரலாற்றுச் சிறப்புமிக்கவை. ஒன்று, போலியோவை ஒழிப்பது. இது நமது அமைப்புக்கு மிகவும் இன்றியமையாதது. உலகம் முழுவதும் சாத்தியமில்லை என்று கூறிய ஒரு காரியத்தைச் செய்து, இந்தியாவால் போலியோவை ஒழிக்க முடிந்தது!



*RI தலைவர் அரேஸ்ஸோ மற்றும் அவரது குடும்பத்தினர். முன் வரிசையில் (இடமிருந்து): அரேஸ்ஸோ, பேரன் பிரான்செஸ்கோவைத் தூக்கிக் கொண்டு; மற்றும் ஆனா பேத்தி ஆனா மரியாவைத் தூக்கிக் கொண்டு. நிற்கிறார். (இடமிருந்து): அரேஸ்ஸோவின் மகள் எலெனா; அவரது மருமகன் மேக்னஸ்; மற்றும் மகள் ஃபேலா.*

இது அற்புதமான வேலை" என அவர் பதிலளிக்கிறார்

ஆனால் இப்போது ரோட்டரி அந்த வேலையை முடிக்க வேண்டும், ஏனெனில் போலியோ நோயாளிகள் இன்னும் இரண்டு நாடுகளில் – ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் – உள்ளனர், "நாம் அந்த வேலையை முடிக்க வேண்டும்."

இரண்டாவது விஷயம், உறுப்பினர் சேர்க்கை பிரச்சனை, "நீங்கள் (இந்தியா) வளர்ந்து கொண்டிருப்பதால் அதை நீங்கள் பொருட்படுத்தாமல் இருக்கலாம். நாளை (சென்னையில் நடைபெறும் LEAD25 மாநாட்டில்) அவர்கள் 250 புதிய சங்கங்களை அறிமுகப்படுத்தப் போகிறார்கள், இது ஐரோப்பாவில் சாத்தியமற்றது. உலகெங்கிலும் உறுப்பினர் சேர்க்கை ஒரு பெரிய பிரச்சனை, எனவே அது எனது இரண்டாவது முன்னுரிமை."

அவருக்கு இருக்கும் மற்றொரு முன்னுரிமை, அல்லது கவலை, "போரினால் ஏற்படும் துன்பம்" தொடர்பானது. "போரிடும் இரண்டு நாடுகளுக்கு இடையே அமைதியைக் கொண்டுவருவது நமக்குக் கடினம், ஆனால் அமைதிக்காகப் பாடுபடுவது எனது நோக்கம்." இதை ரோட்டரி பல்வேறு வழிகளில் செய்ய முடியும்; "நாம் மக்களுக்கு சுத்தமான குடிநீர், சுகாதாரம், தூய்மையான சுற்றுச் சூழல், கல்வி ஆகியவற்றைக் கொடுக்கும் போது அமைதிக்காகப் பாடுபடுகிறோம்... இவை அனைத்தும் அமைதியை நோக்கிய சிறிய ஆனால் உறுதியான படிகள். உலகெங்கிலும் உள்ள மக்களிடையே சிறந்த புரிதலை மேம்படுத்தக்கூடிய ரோட்டேரியர்களின் ஒரு பெரிய பிணையத்தை நாம் ஒன்றாக உருவாக்க முடியும், மேலும் நாம் உருவாக்கி வருகிறோம்."

ரோட்டரி சர்வதேச தலைவர் இந்தியாவுக்கு வந்த தனது பயணத்தை உதாரணமாகக் கூறுகிறார், அங்கு அவர் ஏற்கனவே இருந்த நண்பர்களை மட்டுமல்லாமல், புதிய நண்பர்களையும் சந்தித்துள்ளார். "என்னை பொறுத்தவரை, இந்தியா என்பது என் நண்பர்கள் வாழும் ஒரு நாடு. உலகெங்கிலும் உள்ள லட்சக் கணக்கான மக்கள், அவர்களுக்கு அருகிலுள்ள மற்ற நாடுகளில் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் உணர்வுகள்,

பிரச்சனைகள், சவால்கள் ஆகியவற்றை புரிந்துகொண்டால், அது அமைதியை நோக்கிய மற்றொரு சிறிய படியாகும். மக்களிடையே உள்ள புரிதலை நாம் மேம்படுத்த வேண்டும்… அதுவே எனது நோக்கம்.”

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் பற்றி கேட்டதற்கு, அவர் கூறுகிறார், “அது மற்றொரு பெரிய பிரச்சனை. நம்மால் போரை நிறுத்த முடியாது, ஆனால் மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவும், பேசவும், ஒரு சிறந்த புரிதலை அடையவும் நாம் உதவ முடியும், ஏனெனில் பெரும்பாலும் போர் என்பது பயத்தின் விளைவு, பயம் என்பது அறியாமையின் விளைவு. ஏனென்றால் மற்றொரு நாட்டைப் பற்றி நான் அறியாதவனாக இருப்பதால், அதையும் அதன் மக்களையும் பார்த்து நான் பயப்படுகிறேன்.

ஆனால் நாம் ஒருவருக்கொருவர் அறிந்துகொள்ளவும், தொடர்பு கொள்ளவும் முடிந்தால், அவர்களுக்கும் நம்மைப் போலவே அதே கனவுகள், அதே பிரச்சனைகள், அதே ஆன்மாக்கள் உள்ளன என்பதை நாம் உணர்வோம். நாம் சந்தித்து, ஒன்றாக அமர்ந்து பேசினால், ஒருவருக்கொருவர் சிறந்த புரிதலை நாம் பெற முடியும். நாம் சிறிய காரியங்களைச் செய்யலாம், ஆனால் நாம் அவற்றைச் செய்ய வேண்டும்.”

இந்த மூன்றுமே இந்த ஆண்டிற்கான அவரது முக்கிய இலக்குகள்…. “அல்லது மீதமுள்ள மாதங்கள் என்று சொல்ல வேண்டுமா? ஏனென்றால் ஒரு ரோட்டரி சர்வதேச தலைவருக்கு பொதுவாக ஒன்றரை ஆண்டுகள் திட்டமிட நேரம் இருக்கும். ஆனால் நான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள இரண்டு மாதங்கள் செலவிட்டேன்!”

அவர் பாதகமாக உணர்ந்தாரா அல்லது அழுத்தமாக உணர்ந்தாரா என்று நான் அவரிடம் கேட்டேன். அவரது பதில், அவர் ஏன் ரோட்டரி சர்வதேச அமைப்பில் உயர்ந்த பதவிக்கு வந்தார் என்பதை நமக்குச் சொல்கிறது. “இல்லை, நான் உண்மையில் உற்சாகமாக இருந்தேன்… மேலும் செய்ய கடினமான ஒன்று இருக்கும்போது, நீங்கள் மேலும் ஊக்கமடைவீர்கள்.”

ஆனால் அவர் ஒப்புக்கொள்கிறார், “இப்போது எனது பதவிக்காலம் தொடங்கிவிட்டதால், தயாராவதற்கு ஒரு வருடம் இருந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். ஆனால் என்னால் முடிந்ததை நான் செய்ய வேண்டும்!”

குறைந்த கால அவகாசம் அவரது வேலையை இன்னும் கடினமாக்குகிறதா? “அது அதிக வேலை நேரத்தைக் குறிக்கிறது. எந்த ஒரு ரோட்டரி சர்வதேச தலைவரின் வாழ்க்கையும் மிகவும் பரபரப்பானது; நீங்கள் உலகம் முழுவதும் பயணிக்க வேண்டும், ரோட்டேரியர்களுடன் புகைப்படம் எடுக்க வேண்டும். (மனதார சிரிக்கிறார்!) அது தலைவரின் முக்கிய வேலைகளில் ஒன்று! நான் RID நாகேஷ் மற்றும் MMM இடம், நான் ரோட்டேரியர்களுக்காக இங்கு இருக்கிறேன், அவர்களுடன் பேசவும், அவர்களைச் சந்திக்கவும் மற்றும் அவர்களுடன் புகைப்படம் எடுக்கவும். நான் அவர்களை ஊக்குவிக்க வேண்டும், எனவே நான் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியவனாக

## ரோட்டராக்டர்கள் பற்றி தலைவரின் கருத்து




ரஷீதா பகதி

*இளம் உறுப்பினர்களை ரோட்டரிக்கு எப்படி ஈர்க்க முடியும்? ஐரோப்பாவை உதாரணமாக எடுத்துக்கொள்ளுங்கள்; நாம் பெரும்பாலும் ரோட்டரியில் தனிமையாக செயல்படுகிறோம். நாம் ரோட்டராக்ட் சங்கங்களை உருவாக்கிவிட்டு, பின்னர் அவற்றைக் கைவிடுகிறோம். அவர்கள் மிகவும் இளமையாக இருப்பதால், நாம் அவர்களுடன் கலக்க விரும்புவதில்லை. ஆனால் நாம் அவர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். ஏன் அவர்கள் ரோட்டேரியர்களாக மாறவில்லை? ஏனென்றால் அவர்கள் ரோட்டரியை நம்புவதில்லை. அவர்கள் நம்மை நம்புவதில்லை, ஏனென்றால் நாம் ஒன்றாக வேலை செய்வதில்லை, மேலும் நாம் ஒருவருக்கொருவர் அறிந்துகொள்வதில்லை. நாம் ஒருவருக்கொருவர் மதித்து, புரிந்துகொண்டு, ஒன்றாக வேலை செய்தால், அதிக ரோட்டராக்டர்களை ரோட்டேரியர்களாக மாற்ற முடியும்.*

*ஒவ்வொரு திட்டத்திலும் அவர்கள் நம்முடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும், மேலும் இன்று நடப்பதை விட அதிகமாக அவர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். இது இன்டராக்டர்களுக்கும் பொருந்தும்.*

*உதாரணமாக, நாளை நான் 2,000 ரோட்டராக்டர்களை சந்திக்கப் போவதாக எனக்குச் சொல்லப்பட்டுள்ளது; ஒரே அறையில் இத்தனை ரோட்டராக்டர்களை கற்பனை செய்து பாருங்கள்! ஐரோப்பா முழுவதும் கூட எங்களிடம் இத்தனை ரோட்டராக்டர்கள் இல்லை. அது ஒரு நம்ப முடியாத எண்ணிக்கை! ஆனால் அதே நேரத்தில், நீங்கள் அவர்களை ஈடுபடுத்த வேண்டும், மேலும் அவர்கள் ரோட்டரியின் ஒரு பகுதி என்று உணர வைக்க வேண்டும். ரோட்டராக்டை உயர்த்துவது மட்டும் போதாது, நாம் அவர்களை ஈடுபடுத்தி ஒன்றாக வேலை செய்ய வேண்டும்.*

## அரெஸ்ஸோவின் ரோட்டரி பயணத்தில் ஆனாவின் பங்கு

*அவரது ரோட்டரி பயணத்தில் ஆனாவின் பங்கு குறித்தும், ரோட்டரி அவரது நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்வது குறித்து அன்னா வருத்தப்பட்டாரா என்றும் கேட்டபோது, தலைவர் அரெஸ்ஸோ கூறுகிறார், "உங்கள் துணை மற்றும் குடும்பத்தின் ஆதரவு இல்லாமல் ஒரு திறமையான ரோட்டரி சர்வதேச தலைவராக இருப்பது, மற்றும் இந்த நிலையை அடைவது சாத்தியமற்றது. இது ஒரு பெரிய அர்ப்பணிப்பு, மற்றும் அதிக நேரத்தை எடுத்துக்கொள்வது. எனவே பல வழிகளில் அவரது ஆதரவு எனக்குத் தேவை, அந்த ஆதரவை நான் அவரிடம் பெற்றுள்ளேன்."*

*அன்னா குதூகலத்துடன் மேலும் கூறுகிறார், "நான் அவரது பயணப் பைகளை ஒழுங்குபடுத்துவேன்." அரெஸ்ஸோ பதிலளிக்கிறார்: "நான் இங்கும் அங்கும் செல்ல வேண்டும், மேலும் ஒரு சிறிய பயணப்பையில் அவர் நிறைய பொருட்களை வைப்பது ஆச்சரியமாக இருக்கிறது, நான் திரும்பி வரும் போது மீண்டும் பையை அடைக்கும் போது, அவர் எப்படி இத்தனை பொருட்களை அங்கு வைத்தார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை."*

*அரெஸ்ஸோ ரோட்டரிக்கு இவ்வளவு நேரம் ஒதுக்குவது குறித்து அன்னா, வருத்தப்பட்டாரா? "ஆம், ஏனென்றால் நான் வீட்டில் தனியாக இருக்கிறேன், சில சமயங்களில் எல்லாவற்றையும் சமாளிப்பது எனக்கு கடினமாக இருக்கும். அதிகாரப்பூர்வமாக, எனக்கு எந்த தொழிலும் இல்லை, ஆனால் நான் உண்மையில் நிறைய வேலை செய்கிறேன், முழு குடும்பத்திற்காகவும் நான் வேலை செய்கிறேன்." அரெஸ்ஸோ இடைமறித்து: "நான் எப்போதும் என்னை ஒரு ஆலிவ் எண்ணெய் உற்பத்தியாளர் என்று சொல்வேன், ஆனால் உண்மையில் அவர்தான் ஆலிவ் எண்ணெய் உற்பத்தியாளர், பண்ணையை கவனித்துக்கொள்ள எனக்கு நேரம் இல்லாததால் அவர்தான் அதை கவனித்துக்கொள்கிறார். எங்களிடம் ஒரு சிறிய ஹோட்டல் உள்ளது; அந்த ஹோட்டலை நடத்துவதும் அவர்தான். அவர் நிறைய விஷயங்களைச் செய்கிறார்...."*

*இப்போது அவர் ரோட்டரியில் உச்ச பதவியை அடைந்துவிட்டதால், அன்னா மகிழ்ச்சியாக இருக்கிறாரா? "நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன், ஆனால் இந்த நேரத்தில் நான் கொஞ்சம் குழப்பமாக இருக்கிறேன். செய்ய வேண்டிய நிறைய விஷயங்கள் உள்ளன, பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டும்... ஏனென்றால் இது மிக விரைவாக நடந்தது, எங்களுக்குத் தயாராவதற்கு நேரம் கிடைக்கவில்லை," என்று அன்னா பெருமூச்சு விடுகிறார்.*

*அரெஸ்ஸோ மேலும் கூறுகிறார், "நாங்கள் எங்கள் வீடு, பண்ணை மற்றும் எனது அலுவலகத்தை விட்டு, மிக வேகமாக வெளியேற வேண்டியிருந்தது... எங்களிடம் தயாராவதற்கு முற்றிலும் நேரமில்லை. அதிர்ஷ்டவசமாக, அலுவலகத்தில், எனது மூத்த மகள் இருக்கிறார், அவரும் ஒரு பல் மருத்துவர் மற்றும் என்னுடன் வேலை செய்கிறார்... நான் ரோட்டரி சர்வதேச தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்று சொன்னபோது... அவர் அழத் தொடங்கினார். மகிழ்ச்சியால் தானா என்று நான் கேட்க: ஆம், ஆனால் இப்போது அவர் தனியாக அலுவலகத்தை கையாள வேண்டும் என்பதாலும் என்றார்!"*

*கடைசி வார்த்தை அவரது உதவியாளர் டி ஜார்ஜியோவிடமிருந்து வந்தது, அவர் அரெஸ்ஸோவை "ஒரு மிகவும் மனிதநேயமுள்ள நபர்" என்று வர்ணிக்கிறார். "மக்களுடன் அவரது உறவு மிகவும் நன்றாக உள்ளது, அது ரோட்டேரியர்களால் பாராட்டப்படுகிறது. அதே நேரத்தில், அவர் ஒரு நபராக மிகவும் பணிவானவர்... ஒரு நல்ல கலவை."*

*"நாங்கள் 15 ஆண்டுகளாக நண்பர்களாக இருக்கிறோம்... மேலும் எங்களுக்கு ஒரே பிரச்சனை உள்ளது - எங்களிடம் ஒரே வயதில் இரண்டு மகள்கள் உள்ளனர்," என்று அரெஸ்ஸோ புன்னகைக்கிறார்.*

இருக்கிறேன். ரோட்டரி குடும்பத்தைச் சேர்ந்த மக்களைச் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என கூறியுள்ளேன்."

இது அன்னா மற்றும் அரெஸ்ஸோவிற்கு இந்தியாவுக்கான மூன்றாவது வருகை; முதல் வருகை அவர் லக்னோவில் ஒரு கூட்டத்தில் ரோட்டரி சர்வதேச தலைவரின் பிரதிநிதியாக இருந்தபோது, இரண்டாவது கொல்கத்தாவில் நடந்த ரோட்டரி நூற்றாண்டு இந்திய கொண்டாட்டங்களின் போது. அன்னாவுக்கு ஷாப்பிங் செய்ய நேரம் கிடைக்காததால் ஏமாற்றமடைந்தார். "நாங்கள் இருவரும் இந்தியாவின் கலாச்சாரம், வரலாறு மற்றும் உணவு ஆகியவற்றை விரும்புகிறோம், இந்த நவம்பரில் மண்டல மாநாட்டிற்காக நாங்கள் வரும்போது, இதற்கெல்லாம் எங்களுக்கு சிறிது நேரம் கிடைக்கும் என்று நம்புகிறோம்," என்று அவர் கூறுகிறார்.

"ஆம், நான் இந்தியாவில் ஷாப்பிங் செய்ய மிகவும் விரும்புகிறேன், அடுத்த வருகையின்போது எனக்கு ஷாப்பிங் செய்ய சிறிது நேரம் ஒதுக்க வேண்டும் என்று நான் அவரிடம் சொல்லிவிட்டேன்," என்று அன்னா உறுதியாகச் சொல்கிறார்!

இந்தியாவில் ரோட்டரி மற்றும் ரோட்டேரியர்கள் இங்கு செய்யும் சமூக சேவைத் திட்டங்களைப் பற்றிப் பேசிய அரெஸ்ஸோ, "தொடங்கப் பட்ட திட்டங்களின் எண்ணிக்கை நம்ப முடியாதது, மேலும் பல வெவ்வேறு துறைகளில் உள்ளது. பெண்களுக்கு 100 பிங்க் ஆட்டோக்களைப் பார்த்தோம்... இதன் மூலம் நீங்கள் 100 பெண்களுக்கு சம்பாதிக்கவும், தங்கள் வாழ்வாதாரத்தை பராமரிக்கவும் ஒரு வாய்ப்பை வழங்குகிறீர்கள். இது ஒரு சிறந்த திட்டம், மிகவும் மனதை நெகிழ செய்தது. ஹவுஸ் ஆஃப் ஃப்ரெண்ட்ஷிப்பில் உடல்நலம், நீர், சுகாதாரம் குறித்த பல திட்டங்கள் இருந்தன. இந்தியாவில் ரோட்டேரியர்கள் செய்யும் சேவையின் அளவு உலகிலேயே மிக அதிகமாக இருக்கலாம். இது ஆச்சரியமாக இருக்கிறது."

மற்றொரு விஷயம், இந்தியாவில் உள்ள ரோட்டேரியர்கள் ரோட்டரி அறக்கட்டளைக்கு அளிக்கும் பணம்;

அது மிக அதிகம். “நேற்று எங்களுடன் 29 புதிய AKS உறுப்பினர்கள் இருந்தனர்; அது ஆச்சரியமானது, அமெரிக்காவில் இது சாத்தியமாக இருக்கலாம். ஆனால் இது உலகின் பிற பகுதிகளில் சாத்தியமற்றது. ஐரோப்பாவில் இது முற்றிலும் சாத்தியமற்றது. இந்தியாவில் நிறைய நல்ல திட்டங்கள், நிறைய உற்சாகம் மற்றும் ரோட்டேரியர்கள் மத்தியில் ஒரு ஆர்வம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு துடிப்பான ரோட்டரி உள்ளது.”

கடந்த சில ரோட்டரி சர்வதேச தலைவர்கள் பேசி வந்த எதிர்மறை அம்சங்கள் என்ன? “இந்தியாவில் என்ன கெட்ட விஷயம்? சில இடங்களில் ரோட்டேரியர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடுகிறார்கள். நாங்கள் ஒரு குழு கூட்டத்தில் இருக்கும்போது, தேர்தல்கள் குறித்து நிறைய புகார்களைப் பெறுகிறோம். எவான்ஸ்டனில், 10 புகார்கள் வந்தால், எட்டு இந்தியாவிடம் இருந்து வருகின்றன. இது ஒரு பிரச்சனை. இந்தியாவில் ரோட்டரியில் உள்ள உள் சண்டையின் அளவைக் குறைக்க நாம் ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். இது ஒரு அவமானகரமான விஷயம், ஏனென்றால் இங்குள்ள ரோட்டேரியர்கள் மிகவும் சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும், ஆர்வமாகவும் இருக்கிறார்கள்.”


ரஷீதா பகத்


ஆனா, RI தலைவர் அரெஸ்ஸோ மற்றும் டி ஜியோர்ஜியோ.

சாத்தியமான ஒரு தீர்வைக் கேட்டதற்கு, அரெஸ்ஸோ தோளைக் குலுக்கி, “எனக்குத் தெரியாது. ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. இது ஒரு கலாச்சாரப் பிரச்சனை, மேலும் அனைவருக்கும் இடம் இருக்கிறது என்பதை ரோட்டேரியர்களை நம்பவைக்க நாம் பாடுபட வேண்டும். இந்த ஆண்டு நீங்கள் ஒரு சங்கத் தலைவராக அல்லது ஆளுநராக ஆகவில்லை என்றால், நீங்கள் காத்திருக்கலாம். அது அவ்வளவு பெரிய பிரச்சனை அல்ல. ஆனால் ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பது எளிதல்ல. ஒரே வழி, ரோட்டேரியர்களிடம் பேசி அவர்களை நம்பவைப்பதுதான்!” ■

# ரோட்டரி, நம்பிக்கையின் ஒரு உயிர் நாடி

ரஷீதா பகத்



*தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ நினைவுப் பரிசை வழங்குகிறார். இடமிருந்து: பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, PDG I S A K நாசர் மற்றும் மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் RI இயக்குநர் M முருகானந்தம் ஆகியோரும் உள்ளனர்.*



"சிறு வயதிலிருந்தே ரோட்டரி செய்து வரும் சேவையை நான் பார்த்து வியந்துள்ளேன். பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மக்களின் மேம்பாட்டிற்காக ரோட்டேரியர்கள் செயல்படும் விதம் சாதாரணமானது அல்ல. வாழ்த்துகள்," என்று சென்னை Lead 25 மாநாட்டைத் தொடங்கி வைத்த போது தமிழ்நாடு துணைமுதல்வர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறினார். இந்த மாநாடு ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குனர் M முருகானந்தத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒரு வருடத்தில் செய்யப்பட உள்ள ரூ.250 கோடி மதிப்பிலான பிரம்மாண்டமான சமூக சேவைத் திட்டங்களின் ஒரு தொகுப்பை அவர் தொடங்கி வைத்தார். இதில் சில திட்டங்கள் தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளன. அன்று காலை அவர் தொடங்கி வைத்த ஒரு மகளிர் மேம்பாடு தொடர்பான திட்டம் தனக்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகக் கூறினார். "இன்று நாங்கள் 100 பிங்க் ஆட்டோக்களை பெண் ஓட்டுநர்களுக்காகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தோம். இது மகளிர் அதிகாரமளித்தலுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. 250 புதிய ரோட்டரி சங்கங்கள் தொடங்கப்பட்டிருப்பதைக் காண்பதும் அருமையாக உள்ளது. இவை ரோட்டரியின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்பைப் பற்றிப் பேசுவதற்கு உதவும் சிறந்த மைல்கற்கள்."

ரோட்டரியின் வரலாறு "ஈர்க்கக்கூடியதாகவும், தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும்" இருக்கிறது; 1905ல் சிகாகோவில் நிறுவப்பட்டதிலிருந்து, அது 220 நாடுகளில் 1.4 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட உலகளாவிய குடும்பமாக வளர்ந்துள்ளது. "சுமார் 10,000 பங்கேற்பாளர்கள் நிரம்பியிருக்கும் இந்த அரங்கை பார்க்கும் போது, ரோட்டரியை வரையறுக்கும் சேவை மற்றும் தோழமைக்கான உற்சாகத்தையும், நாட்டத்தையும், உணர்வையும் என்னால் உணர முடிகிறது. அதே நேரத்தில் ரோட்டரியின் உலகளாவிய உணர்வு எப்படி நம் சென்னைக்கு வந்திருக்கிறது என்பதையும் உணர்கிறேன். கல்வி மற்றும் சுகாதாரம் முதல் சமூக மேம்பாடு வரை பல்வேறு திட்டங்கள் மூலம் ரோட்டரி சமுதாயத்திற்கு ஆற்றும் சேவையை நான் பாராட்டு கிறேன். நீங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறீர்கள்," என்றார்.

அதன் "மனிதாபிமானத்திற்கான மிகப் பெரிய பங்களிப்புகளில்" ஒன்று உலகத்தில் போலியோவை முடிவுக்குக் கொண்டுவர அது செய்த பணிதான் என்று உதயநிதி குறிப்பிட்டார். 1980கள் முதல், இந்த அமைப்பு "போலியோவை ஒழிக்க முன்னணியில் இருந்து வழிநடத்தி, 2.7 பில்லியன் டாலர்களை முதலீடு செய்து, லட்சக்கணக்கான தன்னார்வ மணிநேரங்களைச் செலவிட்டது. உலகளவில் போலியோ பாதிப்புகளை 99.9 சதவீதம் குறைக்க ரோட்டேரியர்கள் உதவியுள்ளனர். இது ஒரு பெரிய சாதனை. இந்தியா போலியோ இல்லாத நாடாக மாறியதில் ரோட்டரியின் பங்கை அங்கீகரிக்காமல் முழுமை அடையாது," என்றார்.

போலியோவை ஒழிக்க தனது தாத்தாவும், முன்னாள் தமிழக முதல்வருமான மு கருணாநிதி ரோட்டரியுடன் இணைந்து எவ்வாறு பணியாற்றினார் என்பதை அவர் பெருமையுடன் நினைவு கூர்ந்தார். "தமிழக அரசும்,

தமிழக ரோட்டேரியர்களும் எடுத்த நடவடிக்கைகளால், போலியோவை ஒழித்த இந்தியாவின் முதல் மாநிலமாக நாங்கள் ஆனோம். இதற்கான முழு பெருமையும் ரோட்டரிக்குச் சேரும். கோவிட் தொற்றுநோய்களின் போதும், ரோட்டரியின் பணி மிகவும் சிறப்பாக இருந்தது. மருத்துவ உபகரணங்கள், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் தமிழக அரசுக்கு முழு ஆதரவு அளிப்பதில் அவர்கள் சிறந்து விளங்கினர். தொற்றுநோய்களின் போது TRF உடன் கைகோர்த்து முகமூடிகள், சுகாதாரப் பொருட்கள் மற்றும் பிற மருத்துவ உதவிகளை வழங்கியபோது ரோட்டரியுடன் நெருக்கமாகப் பணியாற்றிய தனிப்பட்ட அனுபவம் எனக்கு உள்ளது.”


*இடமிருந்து: பள்ளிக் கல்வி அமைச்சர் பொய்யாமொழி, PDG நாசர், RI தலைவர் அரேஸ்ஸோ, தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் RID முருகானந்தம்.*

ரோட்டரி வழங்கும் மற்ற சேவைகளில், பின்தங்கிய பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு ஆதரவு, ஆயிரக்கணக்கான மக்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் பயனளிக்கும் டயாலிசிஸ் மையங்களை அமைத்தல் போன்றவையும் அடங்கும். “ரோட்டரி ஒரு சேவை அமைப்பு மட்டுமல்ல, நம்பிக்கையின் ஒரு உயிர் நாடி,” என்று அவர் கூறினார்.

RI இயக்குனர் முருகானந்தம், தமிழக அரசுடன் இணைந்து செயல் படுவதற்கான சில திட்டங்களை தன்னிடம் பகிர்ந்து கொண்டதாக துணை முதல்வர் கூறினார். “இன்று, நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டம் மற்றும் பெண்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க மாநில அளவிலான கருப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் தடுப்பூசித் திட்டம் ஆகியவற்றுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதன் மூலம் நாங்கள் தொடங்கினோம்.” சிறந்த ரோட்டேரியர்களுக்கு மாநில அளவில் சமூக சேவை விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்திருந்தார். “அவர்களை எங்கள் அரசு கவனித்துள்ளது. அவர்களை முன்னோக்கி கொண்டு செல்ல வழிகளை நாங்கள் ஆராய்வோம் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.”


*பிங்க் ஆட்டோ திட்ட பயனாளிகளுடன் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்.*

தற்போதைய தமிழக அரசு “விளையாட்டு மேம்பாட்டிலும் அர்ப்பணிப்புடன் இருப்பதால், நமது இளைஞர்களுக்கு அதிகாரமளிக்க விளையாட்டுகளிலும் ரோட்டரியுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் உற்சாகமாக இருக்கிறோம்,” என்று உதயநிதி மேலும் கூறினார்.

“இத்தகைய கூட்டங்கள் உண்மையான தலைமைத்துவத்தை வரையறுக்கின்றன. அது பதவி அல்லது அதிகாரம் பற்றியது மட்டுமல்ல, சேவை, தியாகம் மற்றும் பொறுப்பு பற்றியது. ரோட்டரி கொண்டிருக்கும் அதே மதிப்புகளுடன் நாங்களும் அரசில் சமூக சமபங்கு மற்றும் பாலின நீதியின் அடிப்படையில் ஒரு சமூகத்தை உருவாக்க பணியாற்றுகிறோம். ரோட்டரி போன்ற கூட்டாளிகளுடன் நாங்கள் அதிக தாக்கத்தை ஏற்படுத்த முடியும்,” என்று அவர் கூறி தனது உரையை முடித்தார்.

திறப்பு விழாவில் உரையாற்றிய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தின் கீழ் 1,000 அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக தமிழக அரசுக்கும் ரோட்டரிக்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வரவேற்றார். அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்தும் இத்திட்டம் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினால் டிசம்பர் 2022ல் தொடங்கப்பட்டது என்று அவர் கூறினார். “அவர் ரூ.5 லட்சம் முதல் பங்களிப்பைச் செய்தார்; இன்று இந்தத் திட்டம் ரூ.800 கோடியாக வளர்ந்து வெளிப்படையாக நடத்தப்படுகிறது. இந்த பள்ளிகளின் சீரமைப்புக்கு முன் மற்றும் பின் உள்ள நிலைமைகளை நீங்கள் பார்க்க வேண்டும்.”

கூட்டு முயற்சியாக மேலும் 1,000 பள்ளிகளை புதுப்பிக்க முன்வந்த ரோட்டரிக்கு நன்றி தெரிவித்த அவர், முருகானந்தம் செய்துவரும் சிறப்பான பணிக்கு அவரைப் பாராட்டினார். “அவர் வகிக்கும் பதவியால் அவர் சிறப்பு வாய்ந்தவர் அல்ல, மாறாக அவர் பின்தங்கிய, நசுக்கப்பட்ட மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வலியை அறிந்த ஒரு ரோட்டேரியர் என்பதால் அவர் சிறப்பு வாய்ந்தவர் என்று கூறினார்.

கல்விக்கு தமிழக அரசு அதிக முக்கியத்துவம் கொடுப்பதால், 1,000 பள்ளிகளில் சுகாதாரம் மற்றும் துப்புரவை மேம்படுத்துவதில் ரோட்டரியின் உதவி மிகவும் மதிக்கப்படுகிறது என்று அவர் கூறினார். “கல்வி என்பது வாழ்க்கைக்காக” என்ற காந்தியடிகளின் வாசகத்தை மேற்கோள் காட்டி, மாநில அரசு சமீபத்தில் T N ஸ்பார்க் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என்று அவர் கூறினார். இத்திட்டத்தின் கீழ், மாணவர்கள் AI கருவிகள், ரோபாட்டிக்ஸ், கணினி அறிவியலின் அடிப்படைகள் மற்றும் பிற ஆன்லைன் கருவிகளைக் கையாள்வது பற்றி உயர் தொழில்நுட்ப ஆய்வகங் களைப் பயன்படுத்தி கற்றுக் கொடுக்கப்படுவார்கள்.

பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, “சலுகை பெற்றவர்கள் மட்டுமின்றி ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும்

## PRIP கல்யாண் பானர்ஜி கௌரவிக்கப்பட்டார்




*தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்நாள் சாதனையாளர் விருதை PRIP கல்யாண் பானர்ஜிக்கு வழங்குகிறார். இடமிருந்து: RID முருகானந்தம், RI தலைவர் அரேஸ்ஸோ, PRID C பாஸ்கர் மற்றும் மாநாட்டுத் தலைவர் PDG ஜான் டேனியல் ஆகியோரும் உள்ளனர்.*

*முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி லீட் 25-ன் தொடக்க அமர்வில் கௌரவிக்கப்பட்டார். அவரை அறிமுகப்படுத்திய முன்னாள் RI இயக்குனர் C பாஸ்கர், “1972 முதல் ரோட்டரியில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் வழங்கிய முன்மாதிரியான சேவை மற்றும் தலைமைத்துவத்திற்காக” அவர் அங்கீகரிக்கப்படுவதாகக் கூறினார். அதில் TRF நூற்றாண்டின் போது அவர் அறங்காவலர் தலைவராக இருந்ததும் அடங்கும்.*

*“ரோட்டரி மற்றும் அதன் மதிப்புகளுக்கான அவரது அர்ப்பணிப் பால் நாங்கள் அனைவரும் நெகிழ்ந் திருக்கிறோம்,” என்று அவர் கூறி, “கூட்டு விருப்பமும் இரக்கமுள்ள தலைமைத்துவமும் எப்படி அற்புதங் களைச் சாதிக்க முடியும்” என்று தான் கண்ட ஒரு தனிப்பட்ட அனுபவத்தை விவரித்தார்.*

*2018ல் கேரளா மற்றும் கர்நாடகாவில் ஏற்பட்ட பேரழிவுகரமான வெள்ளத்தில் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தபோது, அப்போதைய RI இயக்குனராக இருந்தவர் பாஸ்கர். சென்னையில் நடைபெற்ற ரோட்டரி இன்ஸ்டிடியூட் நிகழ்வில், பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் DGக்கள் அவசர உதவி கோரிய போது, “சில வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் வீடுகளையும் வாழ்க்கையையும் மீண்டும் கட்டியெழுப்ப ரோட்டரி சங்கங்கள் மற்றும் தாராளமான நன்கொடையாளர்களிடமிருந்து உடனடியாக நிதி திரட்டுவதற்கான” ஒரு முயற்சி உருவாக்கப்பட்டது. இந்த முயற்சிக்கு தலைமை தாங்குமாறு பானர்ஜியிடம் கேட்கப் பட்டது. “அவர் உடனடியாகச் செயல் பட்டு ஒவ்வொரு கூட்டத்திலும் பங்கேற்றார் எங்களுக்கு வழிகாட்டி, ஊக்கமளித்து, திட்டம் சரியான பாதையில் சென்று நிறைவடைவதை உறுதி செய்தார். 60 வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.”*

*தனது உரையில், இந்த கௌரவத் திற்காக ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி தெரிவித்த பானர்ஜி, அரை நூற்றாண்டாக ரோட்டரி காலை உணவும், மாலை தேநீரும் போல் தன் வாழ்வில் ஒருங்கிணைந்ததாகக் கூறினார். “கடந்த 50 ஆண்டுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை இன்று நான் கடந்த அரை நூற்றாண்டை திரும்பிப் பார்க்கும்போது, நாம் அனைத்தும் சரியாகச் செய்தோமா? நாம் நமது நகரம், சமூகம், அமைப்பு மற்றும் உலகிற்கு நன்மை செய் கிறோமா? நாம் என்ன செய்கிறோம், ரோட்டரி எதை நிலைநிறுத்துகிறது என்பது மக்களுக்குத் தெரியுமா?” என்று நான் அடிக்கடி யோசிக்கிறேன், என்றார்.*

# சேவை திட்டங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்



தலைவர் அரேஸ்ஸோ, HoF-ல் உள்ள ப்ராஜெக்ட் ஆரஞ்சு ஸ்டாலில் கண் பரிசோதனை செய்து கொள்ளும்போது, அவரது மனைவி ஆனா மரியா புகைப்படம் எடுக்கிறார்; RI இயக்குநர்கள் முருகானந்தம், K P நாகேஷ், மற்றும் PDG S முத்துபழனியப்பன் ஆகியோர் இதைப் பார்க்கிறார்கள்.

Lead 25 மாநாட்டில், அகில இந்திய அளவில் ரூ.250 கோடி மதிப்பிலான சேவைத் திட்டங்கள் தொடங்கப்பட்டன மற்றும் பல்வேறு காரணங்களுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், தமிழக அரசுடன் இணைந்து 'நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி' திட்டத்தின் கீழ் ரோட்டரி சங்கங்களால் தமிழகம் முழுவதும் 1,000 அரசுப் பள்ளிகளை மேம்படுத்துதல்; மாநிலத்தில் ஐந்து இடங்களில் பசுமைப் பரப்பு மற்றும் பூர்வீக சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுக்க ஒரு மியாவாக்கி வன முயற்சியில் மார்ட்டின் அறக்கட்டளையுடன் மூன்று ஆண்டு கால ஒப்பந்தம்; எல்லப்பாளையம் ஆறுமுகம் அறக்கட்டளையுடன் மூன்று ஆண்டு கூட்டாண்மை மூலம் 50,000 மரங்களை நடுதல்; குழந்தைகளுக்கான இதய பராமரிப்புக்காக காவேரி மருத்துவமனைகளின் குழுமத்துடன் ஒரு ஆண்டு கால கூட்டாண்மை; மற்றும் இளைஞர்களுக்கு தலைமைத்துவம், குடிமை மற்றும் தொழில்சார் திறன்களை மேம்படுத்தவும், தொழில்முனைவு மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கவும் கமல் பண்பாட்டு மையத்துடன் ஒரு ஆண்டு கால ஒப்பந்தம் ஆகியவை அடங்கும்.

நிகழ்வில் தொடங்கப்பட்ட சேவை திட்டங்களில் பள்ளி உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், வயது வந்தோருக்கான கல்வியறிவுக்கான நடமாடும் வகுப்பறைகள், இரத்த வங்கிகள், நடமாடும் கிளினிக்குகள் மற்றும் ஆம்புலன்ஸ்கள், காசநோய் மற்றும் புற்றுநோய் சிகிச்சை, மனித பால் வங்கிகள் மற்றும் பார்வையற்றவர்களுக்கு ஸ்மார்ட் கண்ணாடிகள் வழங்குதல்; குறைந்த விலையுள்ள வீடுகள், சமூகங்களுக்கான தடுப்பணைகள் மற்றும் கழிப்பறைகள், மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள் கட்டுதல்; மற்றும் மியாவாக்கி காடுகளை உருவாக்குதல் போன்ற சுற்றுச் சூழல் பாதுகாப்பு முயற்சிகள் ஆகியவை அடங்கும்.■



*இடமிருந்து:* RID 3234 DG வினோத் சரோகி, RI தலைவர் அரேஸ்ஸோ, ஆனா, RID முருகானந்தம், மோனிக் சேம்பர்ஸ் (RI தலைவரின் உதவியாளர் ஜான் டி ஜியோர்ஜியோவின் மனைவி) மற்றும் RID நாகேஷ் பிங்க் ஆட்டோ பயனாளிகளுடன்.

பிற பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் கூட IIT, IIM, சட்டப் பல்கலைக்கழகங்கள் போன்ற சிறந்த கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டும்" என்பதே அரசின் நோக்கம்.

Lead 25 ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம், ரோட்டேரியர்கள், குறிப்பாக ரோட்டராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்கள், இத்தகைய ரோட்டரி நிகழ்வுகளில் பங்கேற்க வாய்ப்பளிப்பதற்காக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். இந்த இரண்டு நாள் நிகழ்வில் ரூ.250 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கப்படுவதாகவும், சேவைத் திட்டங்களுக்கான பல கூட்டாண்மைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத் திடப்படுவதாகவும் கூறினார். (பெட்டியைப் பார்க்கவும்). பள்ளிகளில் RYLA திட்டத்தை அறிமுகப்படுத்துமாறு, மேலும் NCC மற்றும் NSS மாணவர்களுக்குப் பயன்படுத்தப்படும் அதே அளவுகோல்களைப் பயன்படுத்தி இன்டராக்டர்கள் மற்றும் ரோட்டராக்டர்களுக்கும் சலுகைகள் மற்றும் மதிப்பெண்களை நீட்டிக்குமாறு அவர் தலைமை விருந்தினரான தமிழக துணை முதல்வரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.



*இடமிருந்து: RI தலைவர் அரெஸ்ஸோ, ஆனா, RI இயக்குனர் கிறிஸ்டின் புரிங் மற்றும் TRF அறங்காவலர் பரத் பாண்டியா.*

சுதந்திர தின மற்றும் குடியரசு தினங்களில் சிறந்த ரோட்டேரியர்களை அங்கீகரிக்க மாநில அளவில் சமூக சேவை விருதுகளை அறிமுகப் படுத்துமாறும் அவர் தமிழக அரசிடம் கோரினார். "ரோட்டரிக்கு சென்னையில் அல்லது திருச்சியில் ரோட்டரி பேரிடர் நிவாரண மற்றும் சமூக மையத்தை அமைப்பதற்கு நிலம் ஒதுக்குமாறும் நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம்," என்றார்.

RI தலைவர் ஃபிரான்செஸ்கோ மற்றும் அவரது மனைவி அன்னா, துணை ஒருங்கிணைப்பாளரும் RI இயக்குநருமான K P நாகேஷ், RI இயக்குநர் கிறிஸ்டின் புயூரிங், TRF அறங்காவலர் பரத் பாண்டியா, முன்னாள் RI இயக்குநர்கள் அசோக் மகாஜன், P T பிரபாகர், C பாஸ்கர், A S வெங்கடேஷ், ராஜு சுப்ரமணியன் மற்றும் அனிருதா ராய்சௌதுரி ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

மாநாட்டின் தலைவர் ஜான் டேனியல் பிரதிநிதிகளை வரவேற்றார் மற்றும் நிகழ்வின் செயலாளர் Y குமணன் நன்றியுரை ஆற்றினார். முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி; நடிகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கமல்ஹாசன், காவேரி மருத்துவமனைகளின் நிறுவனர் டாக்டர் S சந்திரன் மற்றும் சென்னை PSNA பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் இணைத் தலைவர் RSK ரகுராம் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.■



*பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பொய்யாமொழி, தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் RID முருகானந்தம்.*




# ரோட்டரியில் கொடுப்பது ஒரு கொண்டாட்டம்

**V முத்துகுமரன்**

"இந்தியாவில் தாராள மனப்பான்மை என்பது நம் அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்தது. ஏழைகளுக்கு உணவு வழங்குதல் முதல் குருத்வாராக்களில் மிகப்பெரிய சமூக சமையலறைகளில் உணவு சமைத்து வழங்குவது வரையிலான கருணைச் செயல்கள் மக்களை ஒன்றிணைக்கின்றன" என்று சென்னையில் ரோட்டரி இந்தியா தலைமைத்துவ மாநாட்டுக்கு முந்தைய நிகழ்வில் ரோட்டரி தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ கூறினார்.

இந்திய ரோட்டரி தலைவர்கள், இந்தியா, இலங்கை மற்றும் நேபாள மண்டலங்களைச் சேர்ந்த ரோட்டரி மாவட்ட ஆளுநர்கள், AKS உறுப்பினர்கள், அறக்கட்டளைக்கு நிதிவழங்கும் நன்கொடையாளர்கள் என திரண்டிருந்த கூட்டத்தினரிடையே அவர் உரையாற்றினார். TRF-க்கு நன்கொடை அளிப்பது என்பது பண உதவி மட்டுமல்ல, உலகம் முழுவதும் 46,000 சங்கங்களில் உள்ள 1.4 மில்லியன் ரோட்டேரியன்களுடன்



*இடது மேஜையில்:* RID *நாகேஷ்,* PRIP K R *ரவீந்திரன்,* PRID P T *பிரபாகர், அறங்காவலர் பாண்டியா,* PRIDs *ராஜு சுப்பிரமணியன் மற்றும் அசோக் மகாஜன்,* PDG *ராஜா சீனிவாசன் மற்றும்* Lead 25 *செயலாளர்* PDG Y *குமணன்.*
*வலதுபுற மேசையில் (வலமிருந்து இடம்):* PRID A S *வெங்கடேஷ்,* RID *முருகானந்தம், சுமதி, மாலா,* PRID C *பாஸ்கர்,* RI *தலைவரின் உதவியாளர் ஜான் டி ஜியோர்ஜியோ, அவரது மனைவி மோனிக் சேம்பர்ஸ், ஆனா மரியா மற்றும்* RI *தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ.*

*கான்க்ளேவ் இணை ஒருங்கிணைப்பாளர் RID K P நாகேஷ் மற்றும் RID கிறிஸ்டின் பியூரிங் ஆகியோர் விளக்கை ஏற்றி வைக்கின்றனர், (வலமிருந்து) TRF அறங்காவலர் பரத் பாண்டியா, ஆனா மரியா, RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ, கான்க்ளேவ் ஒருங்கிணைப் பாளர் RID M முருகானந்தம், சுமதி மற்றும் Pre-Lead 25 தலைவர் PDG J ஸ்ரீதர் ஆகியோரும் உள்ளனர்.*

வலையமைப்பை ஏற்படுத்தி இணைகிறீர்கள். தாராளத்தன்மையை நிலையானதாக்கி, திட்டங்கள் மூலம் தாக்கத்தை ஏற்படுத்தி நீடித்த மாற்றத்தை ஏற்படுத்துகிறீர்கள்.

2024–25 ரோட்டரி ஆண்டில், இந்தியா TRF அறக்கட்டளைக்கு $38.2 மில்லியன் நிதி திரட்டி கொடுத்துள்ளது. “மேலும் இந்த ஆண்டு இந்திய சங்கங்கள் கடந்த ஆண்டைவிட அதிக நிதி திரட்டித்தர உறுதியேற்றுள்ளன” என்று அரெஸ்ஸோ குறிப்பிட்டார். இந்திய பிராந்தியத்தில் சாதனை அளவாக கடந்த ஆண்டு 47 AKS உறுப்பினர்கள் இருந்தனர். மேலும் முதல் முறையாக 13 RI மாவட்டங்கள் TRF-க்கு நிதி கொடுப்பதில் $1 மில்லியனைத் தாண்டியுள்ளது. RID 3141 அதிக AKS உறுப்பினர்களுடன் முன்னிலை வகிக்கிறது. AKS உறுப்பினர்கள் எண்ணிக்கையில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது, என்றார்.

### கூட்டாளிக்கு நன்மை செய்பவர்

ரோட்டேரியன்கள் தங்கள் வளங்களை மட்டுமல்ல, “தங்கது நேரம், கவனம் மற்றும் முயற்சியையும் அளிக்கிறார்கள். நாம் பயனாயிலிருந்து கூட்டாளியாகிறோம். நாம் பெறும் பரிசு, நாம் கொடுப்பதைவிட அதிகமானது என்றும் அவர் கூறினார்.

அன்பு, கருணை, சேவையின் செயலில் ஈடுபட்டு நம்மை நாமே மெய்மறந்துவிடும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. துறவிகள் இதைத்தான் ‘ஆனந்தம்’ என்று குறிப்பிடுகின்றனர். கொடுப்பதில் கிடைக்கும் மகிழ்ச்சி வேறு எதிலும் கிடைக்காது. ரோட்டரியில் கொடுப்பது வெறும் கடமை மட்டுமல்ல, அது ஒரு கொண்டாட்டம்.

“இந்தியாவில் உள்ள 1.75 லட்சம் ரோட்டேரியன்களுக்கான மினி RI மாநாடாக இது வடிவமைக்கப் பட்டது. நாடு முழுவதும் உள்ள ரோட்டேரியன்களை ஒரே குடும்பமாக ஒரே மேடைக்கு அழைத்து வருவதுதான் எங்கள் நோக்கமாக இருந்தது” என்று RI இயக்குநர் M முருகானந்தம் கூறினார். உறுப்பினர் சேர்க்கை மற்றும் TRF நிதி பங்களிப்பில் இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது. நடப்பு ஆண்டில் $ 50 மில்லியன் டாலர் நிதியளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 100 AKS உறுப்பினர்களையும், 100 அறக்கட்டளை நன்கொடையாளர் களையும் சேர்க்கவும் திட்டமிட்டுள் ளோம். 16 வயது ரோட்ராக்டராக நான் ரோட்டரியில் சேர்ந்தேன். “சுயநலமற்ற சேவையில் எனது 36 ஆண்டுக்கால பயணத்தை தொடர்கிறேன்” என்று அவர் கூறினார்.

இயக்குநர்களானதிலிருந்து கடந்த 18 மாதங்களை நினைவுகூர்ந்த RI இயக்குநர் K P நாகேஷ், நீண்ட உரையாடலுக்குப் பிறகு, “நானும் முருகானந்தமும் 10 திட்டங்களுக்கு இலக்கு நிர்ணயித்தோம். ஆனால், காலப்போக்கில் அது 16-ஆக விரிவடைந்துவிட்டது” என்று குறிப்பிட்ட அவர், 1:2:3 சூத்திரமும், சிவப்பு-மஞ்சள்-பச்சை நிற உத்திகள் மூலம் ரோட்டரி, இந்தியாவில் அற்புதங்களை நிகழ்த்த முடியும் என்றார். இந்த ஆண்டு இறுதிக்குள்



உறுப்பினர்கள் எண்ணிக்கையை 2 லட்சமாக உயர்த்துவதே எங்கள் நோக்கமாகும். CSR நிதியை அதிகம் பெற நான்கு மண்டலங்களிலும் ரோட்டரி-CSR விருதுகள் வழங்கப்படும். அதைத் தொடர்ந்து தில்லியில் உள்ள ரோட்டரி கழகத்தில் இறுதி நிகழ்வு நடைபெறும் என்றும் அவர் கூறினார். பிரதான மாநாட்டுக்கு முந்தைய நிகழ்வை நடத்துவதற்கு காரணமே முன்னாள் ஆளுநர்கள், தற்போதைய மாவட்ட ஆளுநர்களுக்கு வழிகாட்டி, அவர்களின் செயல்களை ஊக்குவிப்பதற்குதான் என்றார் நாகேஷ். "புதிதாக ரோட்ராக்ட் மற்றும் இன்டராக்ட் சங்கங்களைத் தொடங்க உதவுமாறு நாங்கள் அவர்களை வலியுறுத்தியுள்ளோம். எங்கள் மண்டலங்களில் கடந்த ஒரு மாதத்தில் 1,000 இன்டராக்ட் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் 400 ரோட்ராக்ட் சங்கங்களும் பட்டயப்படுத்தப்பட்டு வருகின்றன" என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.


"ரோட்டேரியன்கள், ரோட்டரியின் இதயம் என்றால், TRF அதன் முதுகெலும்பாகும். வெளிஉலகத்திற்கு நாங்கள் சாளரமாக செயல்பட்டு மக்கள் மனதைத் தொட்டு அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறோம்" என்று அறங்காவலர் பரத் பாண்ட்யா கூறினார். அமெரிக்காவில் உள்ள நோட்ரே டாம் பல்கலைக்கழகம், தாராளமனப்பான்மை குறித்த அறிவியல் ஆராய்ச்சி மூலம், "நமது நேரம், பணம், திறமை உள்ளிட்டவை மூலம் இலவசமாக வழங்கப்படுவது எதுவும் மனிதகுலத்திற்கு பெருமளவு பயனளிக்கும்" என்று கண்டறிந்துள்ளது.

TRF, தனது அமைதி காப்பாளர்கள் மூலம் உலகில் அமைதியை நிலை நாட்ட செயல்பட்டு வருகிறது. மேலும் அடுத்த ரோட்டரி அமைதி மையம் 2026, ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் புனேயில் உள்ள சிம்பியோஸிஸ் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்படும். அதன் பிறகு பயிற்சிக்கான வகுப்புகள் தொடங்கப்படும் என்றார். "TRF நம் குழந்தைகளுக்கும் அவர்களின் குழந்தைகளுக்குமான ஒரு முதலீடாகும். எப்படி நாம், நமது முன்னோர்களால் நடப்பட்ட மரங்களிலிருந்து பழங்களை அனுபவிக்கிறோமோ அதுபோன்றது, என்றார்.

ஜெர்மனியிலிருந்து வந்திருந்த RI இயக்குநர் கிறிஸ்டியன் புரிங், "உலகில் மாற்றத்தை ஏற்படுத்தி வரும் நமது அறக்கட்டளைமீது நம்பிக்கைவைத்து நன்கொடை அளித்து வரும் AKS உறுப்பினர்களுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்," என்றார்.

பிரதான மாநாட்டுக்கு முன்னர் நடைபெற்ற இந்த மாநாட்டில், RI தலைவர் அரெஸ்ஸோ, இந்திய மண்டலங்களிலிருந்து 475 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். 29 புதிய AKS உறுப்பினர்கள் மற்றும் 31 அறக்கட்டளை நிதி நன்கொடையாளர்களை கௌரவித்து பாராட்டினார். இந்த இரண்டு நாள் மாநாட்டில் சென்னை பிராந்தியத்தைச் சேர்ந்த 10,000-த்துக்கும் மேலான ரோட்டேரியன்கள் மற்றும் 2,850 ரோட்ராக்டர்கள் (RID 3233 மற்றும் 3234) தங்கள் பெயரை பதிவு செய்தனர். மநாட்டு தலைவராக PDG J ஸ்ரீதர் (RID 3234), செயலாளராக PDG ராஜசேகர் ஸ்ரீனிவாசன் (RID 3201) செயல்பட்டனர். ■

## 2026–27 RI தலைவராக ஒலயின்கா ஹகீம் பாபலோலா தேர்ந்தெடுக்கப்பட்டார்



RIPE *யின்கா பாபலோலா.*

நைஜீரியாவில் உள்ள டிரான்ஸ் அமாடி ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான ஒலயின்கா ஹகீம் பாபலோலாவை 2026–27க்கான RI தலைவராக இயக்குநர்கள் வாரியம் தேர்ந்தெடுத்துள்ளது. அவருடைய பொறுப்புக் காலம் ஜூலை 1, 2026 அன்று தொடங்கும்.

தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த சங்கூ யுன் தன் ரோட்டரி பொறுப்புகளிலிருந்து விலகி கொள்ளவும் தன் சமீபத்திய புற்றுநோய்ச் சிகிச்சையிலிருந்து மீளுதலில் கவனம் செலுத்தவும் தீர்மானித்த பிறகு, RI கொள்கை நெறிமுறைகளின்படி இந்த வாரியம் இவ்வமைப்பின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்தியது, (சங்கூ செப்டம்பர் 5 அன்று இறந்துவிட்டார்.)

பாபலோலா 1984ல் ரோட்டராக்டராகத் தன் ரோட்டரி பயணத்தைத் தொடங்கினார். 10 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தன் சங்கத்தில் சேர்ந்தார். அவர் சேவையாற்றிய தலைமைப் பொறுப்புகளில் சில, DG (2011-12), RI துணைத்தலைவர் (2019-20), RI வாரிய உறுப்பினர் (2018-20) மற்றும் நைஜீரியாவின் தேசியப் போலியோப்ளஸ் குழு (2013-இன்று வரை, அறிவுறுத்துநர் 2016-இன்று வரை) தலைமை வகித்துள்ளார்.

பாபலோலா 1988-ல் பொறியியல் துறையில் பல்கலைக்கழகப்பட்டம் பெற்றார். 25 ஆண்டுகள் எண்ணெய், எரிவாயுத்துறையில் பணியாற்றினார்.

பாபலோலா-வும் அவருடைய மனைவி பிரேபா-வும் போர்ட் ஹர்கோர்ட் நகரத்தில் வசிக்கிறார்கள். இவர் ஒரு பெயருள்ள நன்கொடை நிறுவலின் மூலமும், AKS உறுப் பினராகவும் TRF-ஐ ஆதரிக்கிறார். ஷெல்டர்பாக்ஸ் UK-ன் அறங் காவலரான இவர் ஆப்பிரிக்கக் கண்ட நாயகர்கள் விருது, இளம்பிள்ளைவாதம் இல்லாத உலகுக்கான பகுதிச் சேவை விருது, RI தனக்கு மேல் சேவை விருது, தகுதியுள்ள சேவைக்கான ரோட்டரி அறக்கட்டளை மேற்கோள் ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.

*Rotary.org*

# சென்னை பள்ளிகளுக்கு ஸ்டெம் ஆய்வகம்

ரோட்டரி செய்திக்குழு

சென்னை, வித்யோதயா மகளிர் மேனிலைப் பள்ளியில் மாணவிகள் டிரோன்களை பறக்கவிடவும், ரோபாட் திட்டத்தை செயல்படுத்தவும் 3-D பிரின்டரில் தங்கள் எண்ணங்கள் பிரதிபலிப்பதை பார்க்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஹால்மார்க் சென்னை ரோட்டரி சங்கத்தால் (RID 3234) பள்ளியில் நிறுவப்பட்ட ரோட்டரி ஹால்மார்க் சிருஷ்டி ஸ்டெம் ஆய்வகத்துக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

இந்த உயர் தொழில்நுட்ப ஆய்வகம் கடந்த ஜூன் மாதம் PDG J ஸ்ரீதரால் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் ஸ்டெம் மாதிரிகள், ரோபாடிக்ஸ், செயற்கை நுண்ணறிவு, டிரோன் மற்றும் 3-D பிரின்டர் வசதிகள் உள்ளன. இதன் மூலம் மாணவர்களிடம் சிறுவயதிலேயே அறிவியல் மனநிலையைத் தூண்டி எதிர்காலத்தில் கண்டுபிடிப்பாளர்கள், பொறியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களாக உருவாக அவர்களை தயார்படுத்துவதே சங்கத்தின் நோக்கமாகும் என்கிறார் சங்கத்தின் IPP-யான S அனில்குமார்.



*PDG J ஸ்ரீதர் (வலமிருந்து இரண்டாவது), RC சென்னை ஹால்மார்க்கின் IPP அனில் குமார் (இடமிருந்து இரண்டாவது) மற்றும் திட்டத்தலைவர் S ரமா (வலம்), STEM ஆய்வகத்தின் தொடக்க விழாவில்.*

“புதுமைகள் வகுப்புறையிலிருந்து தொடங்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இளம் வயதிலேயே குழந்தைகள், நிஜ உலக புதுமை தொழில்நுட்பங்களை வெளிப்படுத்துவதன் மூலம் வித்தியாசியமாக சிந்திக்கவும், பிரச்னைகளை ஆக்கப்பூர்வமாக தீர்க்கவும் அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கிறோம்” என்று சங்கத்தின் பட்டயத் தலைவர் S ரமா தெரிவித்தார். அவர்தான் இந்த ஸ்டெம் ஆய்வக திட்டத்தை வடிவமைத்து செயல் படுத்தியவர். இது சங்கத்தின் இரண்டாவது ஸ்டெம் ஆய்வகமாகும். மேலும் அதிக பள்ளிகளில் இத்திட்டத்தை செயல்படுத்தவும் திட்டம் உள்ளது என்றார்.



*ஆய்வகத்தில் பல்வேறு ஆய்வு மாதிரிகளைப் பற்றி படிக்கும் மாணவர்கள்.*

இந்த முயற்சிக்கு இம்பீரியல் கிரானைட்ஸ் மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த N சங்கர், சென்னையைச் சேர்ந்த கல்விசாலா இன்ஸ்டிடியூட் ஆஃப் எஜுகேஷன் அண்ட் ஸ்கில் டெலவப்மென்ட் ஆகியோர் ஆதரவு அளித்து ஆய்வகத்தையும், பயிற்சிக்கான ஏற்பாடுகளையும் செய்தனர்.

ரோபோடிக் கருவிகளை இயக்கி பிரின்டரில் முதல் மாதிரியை அச்சில் பார்த்தபோது குழந்தைகளின் முகத்தில் உற்சாகம் துள்ளியது.■

# ரோட்டரி கிழக்கு நோக்கிப் பார்க்கவேண்டும்: RI தலைவர்

ரஷீதா பகத்



RI தலைவர்
பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ.

சென்னை லீட்25 மாநாட்டின் தொடக்க அமர்வில் உரையாற்றிய RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ "நாடு கடத்தப்பட்டு, விரக்தியில் இருந்த தீர்க்கதரிசி பருக், தன் மக்களை கிழக்கு நோக்கிப் பாருங்கள் எனச் சொன்னார்" என்ற பைபிள் வாசகத்தை நினைவுகூர்ந்து, "இந்தத் தருணத்தில் ரோட்டரியும் உருவகமாக மட்டுமல்லாமல், உண்மையிலேயே கிழக்கு நோக்கிப் பார்க்க வேண்டிய ஒரு காரணத்தை அளிக்கிறது என்று நான் நம்புகிறேன்" என்றார்.



*HoF-ல் உள்ள Project Orange ஸ்டாலில்* RI *தலைவர் அரேஸ்ஸோ.* RID-*கள்* M *முருகானந்தம் (இடது),* K P *நாகேஷ் மற்றும்* HoF *தலைவர்* PDG S *முத்துபழனியப்பன் (வலது) ஆகியோரும் உள்ளனர்.*

அவர் இவ்வாறு கூறியதற்குக் காரணம், அண்மைய ஆண்டுகளில், "நமது வலுவான மற்றும் துடிப்பான உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி ஆசியாவிலிருந்து வந்துள்ளது, குறிப்பாக இங்கு இந்தியாவில் நாம் அசாதாரணமான வளர்ச்சி ஒன்றைக் காண்கிறோம். இது வெறும் எண்ணிக்கை வளர்ச்சி மட்டுமல்ல, சமூகத்திற்கு சேவை செய்வதில் ஒரு அர்த்தமும் தெளிவும் அதிகரிப்பதைக் குறிக்கிறது."

உறுப்பினர்கள் மற்றும் அவர்களைத் தக்கவைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி RI "சங்கம் அல்லது திட்டங்களுக்காக மட்டும் உருவாக்கப்படவில்லை. இது மக்களால் ஆனது. கடமையை விட ஆழமான ஒரு உணர்வை மக்கள் உணரும்போதும் சங்கத்துடன் மட்டுமல்லாமல் ஒருவருக்கொருவர் இணையும்போது அவர்கள் தங்குகிறார்கள்" என்று அவர் கூறினார்.

கடந்த தசாப்தம் முழுவதும் "ஒவ்வொரு ஆண்டும் உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்களை நாம் வரவேற்கிறோம், ஆனால் கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையிலான மக்கள் வெளியேறுகிறார்கள். வருடம் முழுவதும். வளர்ச்சிக்கும் வெளியேற்றத்திற்கும் இடையிலான இந்த முரண்பாடு ரோட்டரியின் பிரச்சினை மட்டுமல்ல, நாம் வாழும் உலகின் ஒரு கண்ணாடி. மக்கள் அர்த்தத்திற்காக ஏங்குகிறார்கள், ஆனால் அவர்கள் அதைக் கண்டு பிடிப்பதில்லை. ரோட்டரி எதற்காக நிற்கிறது என்பதைப் போற்றுவதால் அவர்கள் இணைகிறார்கள், ஆனால் ரோட்டரி வெறும் நேரத்தைச் செலவழிக்கும் ஒரு அமைப்பாக மாறும் போது அவர்கள் வெளியேறுகிறார்கள்" என்று RI தலைவர் வருந்தினார்.

அதற்குத்தான், இந்த ஆண்டு "நன்மைக்காக ஒன்றுபடுவோம்" என்ற அழைப்பு வெறும் முழக்கம் அல்ல ஒவ்வொரு உறுப்பினரின் உரிமையுணர்வையும் வலுப்படுத்து வதற்காக நாம் நன்மை செய்ய ஒன்றுபடுகிறோம்," என்று அவர் கூறினார்.

நாம் வாழும் சமூகங்களுக்குப் பங்களிப்பதன் மூலம் மற்றும் நீடித்த மாற்றத்தை எவ்வாறு உருவாக்குவது என்பதை ஒருவருக்கொருவர் கற்றுக் கொள்வதன் மூலம் நன்மைக்காக ஒன்றிணைகிறோம். மேலும், அமைதிக்கு அடித்தளம் இடுவதன் மூலமும், நம்பிக்கையைப் பெறுவதன் மூலமும், நட்பை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும் நன்மைக்காக ஒன்றிணைகிறோம். ரோட்டரி அல்லது ரோட்டராக்ட் சங்கம் மட்டுமே இந்த வாய்ப்பை வழங்க முடியும்."

12000 பங்கேற்பாளர்கள் பதிவு செய்திருந்த மாபெரும் கூட்டத்தில் சங்கத் தலைவர்களிடம் உரையாற்றிய அரேஸ்ஸோ "உங்கள் உறுப்பினர்கள் என்ன விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள அவர்களுடன் பேசி, அவர்களின் இலக்குகள் மற்றும் விருப்பங்களைப் பற்றி விவாதிக்கத் தொடங்குங்கள், உங்களால் முடிந்தவரை தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் சங்கங்கள் அவர்களுக்கு ஒரு நேர்மறையான வித்தியாசத்தை ஏற்படுத்த மேலும் என்ன செய்ய முடியும் என்பதைக் கண்டறிய உங்கள் சமூகத்தில் உள்ள மக்களை அணுகுங்கள்" என்றார்.

அவ்வாறு அவர்கள் செய்தவுடன், சேவைத் திட்டங்களைச் செய்ய அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். சமூக நிகழ்வுகளை நடத்துவதும், அர்த்தமுள்ள உரையாடல்களை மேற்கொள்வதும் அதே அளவுக்கு முக்கியமானது.

RI தலைவர் பிரதிநிதிகளிடம் "அமைதிக்கான ஒரு கருவியாக"

ரோட்டரியைப் பயன்படுத்தவும் அறிவுறுத்தினார்.

அமைதி என்பது மக்களை "வறுமை, நோய் மற்றும் சுற்றுச்சூழல் அழிவிலிருந்து அசுத்தமான நீர் மற்றும் மோசமான சுகாதாரம் மற்றும் கல்வி வாய்ப்புகள் இல்லாத நிலையில் இருந்து விடுவிப்பதாகும்" என்று அவர் நம்புகிறார். "மோசமான மருத்துவ சிகிச்சை மற்றும் போலியோவிலிருந்து விடுவிப்பதும் கூட. அமைதி என்பது நாம் சிறப்பாகச் செய்வது, அதை நாம் ஒவ்வொரு நாளும் செய்கிறோம். ஒரு இளம் அறிஞரை அமைதி மையத்திற்கு அல்லது மற்றொரு நாட்டிற்கு ஒரு இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் அனுப்புவதும் அமைதிதான்," என்று அரெஸ்ஸோ மேலும் கூறினார்.

அஹிம்சை என்பது பலவீனரின் வழி அல்ல, வலுவானோரின் வழி. எண்ணிக்கையில் வலிமை உள்ளது, கருணையில் வலிமை உள்ளது, பேராசையால் அல்ல, அன்பால் கட்டியெழுப்பப்படும் உலகமே நிலைத்து நிற்கும் என காந்திஜி கூறியிருந்தார். "நம் சமூகங்களிலும் நாம் சேவை செய்யும் சமூகங்களிலும் அன்பு மற்றும் நட்பின் புதிய உலகத்தை உருவாக்க நன்மைக்காக ஒன்றிணையுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்." என்று அவர் கூறினார்.

சிந்திக்கவும் பிரதிபலிக்கவும் ரோட்டரியர்களை மென்மையாக வலியுறுத்தி, RI தலைவர் ரோட்டரியும் ரோட்டேரியர்களும் இன்று பல கேள்விகளையும் சவால்களையும் எதிர்கொள்கிறார்கள் என்றார். "இவை அதிகாரத்துவமான கேள்விகள் அல்ல, மனித கேள்விகள். அது டெல்லியாகவோ, மும்பையாகவோ அல்லது லண்டனாகவோ இருந்தாலும், டிஜிட்டல் மற்றும் நவீனமயமாக்கல் தொடர்பான சவால்கள் உள்ளன. இதுபோன்ற நேரங்களில், நிறுவனங்கள் உயிரற்றதாக உணர்கின்றன."

ரோட்டரி இன்னும் பெரியதாக இருக்க முடியும் என்று அவர் நம்பிக்கையுடன் இருந்தார்;



அங்கு மனிதர்கள் சாதனைகளால் அளவிடப்படுவதுமில்லை, சூழ்ச்சியால் இயக்கப்படுவது மில்லை, உரையாடலுக்காக அன்புடன் வரவேற்கப்படுவார்கள். "ஆனால் இதற்காக நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். பெரும்பாலும் நாம் தலைவர்கள் அல்லது ஆளுநர்களின் பதவிக் காலத்துடன் முடிவடையும் திட்டங்களைச் செய்கிறோம்; நம் பதவிக் காலத்தில் செய்யப்படும் திட்டங்களை நாள்காட்டி வரையறுக் கிறது. சங்கத்தலைவர்கள், ஆளுநர்கள் மற்றும் RI தலைவர் உட்பட, நம் அனைவருமே நமது ஒரு வருட பதவிக் காலத்தில், நம்மால் முடிந்த அனைத்தையும் சாதிக்க, சிறப்பாகச் செய்து, பின்னர் அடுத்தவர்களிடம் ஒப்படைக்கிறோம். ஆனால் அமைதி அல்லது கல்வி அல்லது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது போன்ற உண்மையிலேயே முக்கியமான வேலைக்கு நேரமும் தொடர்ச்சியும் தேவை."

சங்கத் தலைவர்கள் தனிநபர்களாக அல்ல, குழுக்களாகப் பணியாற்ற வேண்டும் என்று RI தலைவர் அறிவுறுத்தினார். "நாம் வேகமாகச் செல்வதை விட அதிகமாகச் செய்ய வேண்டும், நாம் அழகாகவும் அர்த்த முள்ளதாகவும் செல்ல வேண்டும். அடுத்த தலைவர் வெற்றிபெற உதவ தயாராக இருக்க வேண்டும்."

திசையுணர்வும் சமநிலையும் இருப்பது முக்கியம். "நாம் எங்கு செல்ல விரும்புகிறோம் என்பது நமக்குத் தெரியாவிட்டால், எந்தத் திசையும் முக்கியமில்லை." ஒரு தலைவராக உங்கள் ஆண்டின் நாள்காட்டியை மட்டும் கடைப்பிடிப்பது முக்கியமல்ல, "ஆனால் நீண்ட காலத்திற்கு வழிநடத்துவதும், நமக்கு பின் வருபவர்களுக்கு இடத்தைத் தயார் செய்வதும் முக்கியம்."

இந்திய வரலாறு, கலாச்சாரம் மற்றும் தத்துவத்தின் தீவிர ரசிகரான RI தலைவர், உங்கள் ரோட்டரி சங்கங்கள் நோக்கங்களை தக்கவைக்கின்றன. அதனால்தான் இங்கு இத்தகைய இயற்கையான நல்லிணக்கம் உள்ளது 'உலகம் ஒரு குடும்பம்' என்ற பண்டைய இந்தியத் தத்துவத்தில் பிரதிபலிக்கும் தன்னலமற்ற சேவையின் உணர்வு" என்று கூறினார்.

"இந்தியாவை உள்ளிருந்து புரிந்துகொண்டவன் என்கிற நிலைப்பாட்டில் அல்ல, அதிலிருந்து கற்றுக்கொள்கிற ஒருவராகவே நான் உங்களிடம் பேசுகிறேன். உங்கள் விருந்தோம்பலை, உங்கள் நெறித் தெளிவை, உங்கள் தாராளத்தன்மையை நான் போற்றுகிறேன். ஆனால் ஒரு கேள்வியை முன்வைக்கிறேன்: புதிய தலைமுறையை நாம் எப்படி உள்ளே கொண்டு வருவது? வழிதவறாமல் எப்படித் மாற்றம் கொண்டு வருவது? இவை ரோட்டரி உலகம் முழுவதும் நாம் கேட்க வேண்டிய கேள்விகளாகும்." என்று அரெஸ்ஸோ வெளிப்படையாகக் கூறினார்.

நமது சங்கங்களை வலுப்படுத்த முடிந்தால், நான்கு வழி சோதனையை ஒரு அனிச்சை செயலாகப் பயிற்சி செய்தால், சேவைக்காக மட்டுமல்லாமல் ஒரு குடும்பமாக இருக்க பிறரை ரோட்டரிக்கு அழைக்க முடிந்தால், நாம் உறுப்பினர்களைத் தக்கவைத்து ஒரு கலங்கரை விளக்க மாகவும், ஒரு ஒன்றுகூடும் இடமாகவும் மாற முடியும். இதுதான் இந்த ஆண்டு நமது 'நன்மைக்காக ஒன்றுபடுவோம் என்ற கருப்பொருளின் உண்மையான முக்கியத்துவம்."■

# 80ஐத் தொட்டு முன்னேறும் RC அஜ்மெர்

V முத்துகுமரன்

RC அஜ்மெர், RID 3053, ஜெய்ப்பூருக்கு 130 கிமீ தெற்கில் உள்ள இந்தப் பக்திப் பயண நகரத்தில் நெடுங்காலமாகச் சேவை புரியும் 80 ஆண்டுச் சங்கமாகும். இதன் வெற்றிப் பயணம் இன்னும் தொடர்கிறது. “எங்கள் 80 ஆண்டுச் சமூகச் சேவை நிறைவைக் கொண்டாடுவதற்காக ஜூலை மாதத்தில் இனாலி அறக்கட்டளை, RC பூனா டௌன்டவுனுடன் இணைந்து எங்கள் ரோட்டரி பவனில் இரண்டு நாள் எலக்ட்ரானிக் செயற்கைக் கையைப் பொருத்தும் முகாமை நடத்தினோம்” என்கிறார் இந்தச் சங்கத்தின் தலைவர் ஷலப் அகர்வால்.

முகாமில் 61 எலக்ட்ரானிக் கைகள் பொருத்தப்பட்டன, என்றார் திட்டத்தலைவர் ராஜீவ் டொஷ்னிவால். “இதில் 3 பேர் இரண்டு கைகளும் நீக்கப்பட்டவர்கள்.” இனாலி கை ஒவ்வொன்றின் விலை சுமார் ரூ.30,000. இந்தத் திட்டத்துக்கான நிதி NHPC நிறுவனத்தின் ரூ.25 லட்சம் CSR நல்கையின்மூலம் பெறப்பட்டது.

அகர்வால் அஜ்மெரில் உள்ள மூன்று சங்கங்களின் நிதியளித்தல் மற்றும் CSR நல்கை மூலம் ரோட்டரி பவனில் ஒரு இரத்த வங்கியை (ரூ.1 கோடி) அமைக்க விரும்புகிறார். “நாங்கள் ஜூன் 2026க்குள் இந்த வசதியை அமைப்போம்.” இரண்டாவதாக, மார்பகப் புற்றுநோய் கண்டறிதல் வேன் ஒன்று (CSR நல்கை: ரூ.75 லட்சம்) தொடங்கப்படும். அது அஜ்மெர் நகரத்திலிருந்து 100 கிமீ தொலைவிலுள்ள தொலைதூரக் கிராமங்களுக்குச் சென்று “குறைந்தது 1,000 பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை நடத்தும்.” புறநகர்ப் பகுதிகளில் அஜ்மெர் DFO குறிப்பிட்டுள்ள ஒரு பகுதியில் 5,000 மரங்களை நடுவதன்மூலம் ஓர் ஆக்சிஜன் பகுதி உருவாக்கப்படும்.



முன்னதாக இந்தச் சங்கம் அரசுப் பள்ளிகளுக்கு ரூ.35 லட்சம் மதிப்புள்ள அறைக்கலன்களைக் கொடையளித்துள்ளது, எட்டு கழிப் பறைத் தொகுதிகளைக் (ரூ.15 லட்சம்) கட்டியுள்ளது, அஜ்மெர் அரசு ஜனானா மருத்துவமனைக்கு மருத்துவக் கருவி, நோய் கண்டறிதல் பொதிகளை வழங்கியுள்ளது, “கோவிட் நாட்களில் ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக (ரூ.27 லட்சம்) மருத்துவமனைக்கு PPE பொதிகள், BiPAP இயந்திரங்கள், சிறு இன்குபேட்டர்களை வழங்கி யுள்ளது” என்கிறார் இந்தச் சங்கத்தின் உறுப்பினரான DG நிஷா செகாவத்.

இந்த GG திட்டம் RC பிகானேர், RC டென்வர், US உடன் இணைந்து செய்யப்பட்டது.

இந்தச் சங்கத்தின் தொடக்க நாட்களை நினைவுகூர்ந்த DG நிஷா, பதிவுத் தலைவரான பாக்சந்த் சோனியை எல்லாரும் நகர் சேத் (அஜ்மெரின் மிகப் பெரிய பணக்காரர் என்பதால், அதன் முதல் குடிமகன்) என்று அன்பாக அழைப்பார்கள் என்றும், அவருடைய முன்னெடுப்பால் 1945 ஜூன் 18 அன்று RC அஜ்மெர் நிறுவப்பட்டது என்றும் சொன்னார். இதன் இன்னொரு புகழ் பெற்ற உறுப்பினர், பிரிட்டிஷ்காரர்கள் தொடங்கிய, 150 ஆண்டு வயதான உண்டுறை பள்ளியான மாயோ கல்லூரியின் தலைவர் J T M கிப்சன்.■



*முகாமில் புனே ரோட்டரியன் ஷேக் ஹசன் பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கிறார். DG நிஷா ஷெகாவத், செயலாளர் மனோஜ் தப்ரால், திட்டத் தலைவர் ராஜீவ் தோஷ்னிவால் மற்றும் சங்கத் தலைவர் ஷலப் அகர்வால் ஆகியோர் அங்கு அமர்ந்துள்ளனர்.*

# கல்வியின் சக்தி

ஜெய்ஸ்ரீ

“இன்டராக்ட் மற்றும் ரோட்ராக்டில் நான் செலவழித்த ஆண்டுகள், ‘சேவை’ என்பது திட்டங்களுக்கு அப்பாற்பட்டவை என்பதை எனக்கு கற்றுக்கொடுத்தன. அது உங்கள் இதயத்தை திறந்து, மிகவும் தேவைப்படுவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட தயாராக இருப்பது பற்றியது” என்று மாற்றம் அறக்கட்டளையின் நிறுவனர் சுஜித்குமார், மாநாட்டில் பேசுகையில் கூறினார். அந்த அனுபவங்கள்தான் வாழ்க்கையை கல்வி மற்றும் அதிகாரமளித்தலுக்காக, குறிப்பாக பெண்களுக்காக வாழ்க்கையை அர்ப்பணிக்க அடித்தளமாக அமைந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தக் காலங்களில்தான் சேவையுடன் எனது பேச்சுத்திறனும் மெருகுபெற்றது. இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் PDG C S ராமச்சந்திரன் (அப்போது இருந்த RID 3230). இந்த ஆற்றல்தான் என்னை வகுப்பறைகள், மேடைகளுக்கு அழைத்துச் சென்றது. நானும் எந்தவித கட்டணமும் இல்லாமல் மாணவர்களின் எதிர்காலத்துக்கு வழிகாட்ட முடிந்தது. இதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்தில்தான் 2013-ம் ஆண்டு, மதுரையில் மலர் என்ற பெண்ணை நான் சந்தித்தேன். அவள்தான் எனது பாதையை மாற்றியமைத்தாள். அவள் நிகழ்ச்சி நடந்த மண்டபத்திற்குள் வராமல், வெளியிலேயே தயங்கி நின்றாள். நான் வெளியே சென்று அவளை சந்தித்துப் பேசி அவளது கதையை கேட்டபோது, நான் நெகிழ்ந்துபோனேன். “அன்று நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன். நான் சம்பாதிக்கும் பணத்தில் என்னால் ஒரு குழந்தையின் கல்விக்கு உதவ முடியும்” என்று. ஆனாலும் என்னுள் எழுந்த மற்றொரு கேள்வி: அவளைப் போன்ற நூற்றுக்கணக்கான குழந்தைகளின் நிலை என்ன ?

அந்த கேள்விதான் மாற்றம் அறக்கட்டளை உருவாகக் காரணமாக இருந்தது. நான் ஒரு கல்லூரியின் தலைவரிடம் ஒரு மாணவரின் கல்விக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டேன். ஆனால், அவர் ஆண்டுக்கு 20 மாணவர்களுக்கு கட்டணமின்றி இலவசக் கல்வி அளிக்க முன்வந்தார். பின்னர் நலம் விரும்பிகளின் உதவியுடன் அந்த இடங்களை நிரப்பினேன். அன்று ஒரு செயலாகத் தொடங்கிய விஷயம் ஒரு இயக்கமாக விரிவடைந்துள்ளது.

இன்று இந்த அறக்கட்டளை தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் மற்றும் பெங்களூருவில் உள்ள 52 கல்வி நிறுவனங்கள் மூலம் 4,000 மாணவர்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது. முதல் மாணவியான மலர், இப்போது சான்பிரான்சிஸ்கோவில், அமேசான் ஊழியராகப் பணியாற்றி வருகிறார். தனது குடும்பத்துக்கு வீடு கட்டிக் கொடுத்து, உடன் பிறந்தவர்களையும் படிக்கவைத்துள்ளார். சில முன்னாள் மாணவர்கள் இப்போது அறக்கட்டளையின் குழுவில் இடம்பெற்றுள்ளனர். வேறு சிலர் சேவை நிறுவனங்களைத் தொடங்கியுள்ளனர். “அதுதான் சமுதாயத்துக்கு நாம் திருப்பிக் கொடுப்பதற்கான உண்மையான சுழற்சி முறையாகும்”, என்று பெருமையுடன் கூறினார் சுஜித்குமார்.

*இடமிருந்து: RID கிறிஸ்டின் பியூரிங், சுமதி முருகானந்தம், திரைப்பட கலைஞர் அபிராமி, உமா நாகேஷ், மாற்றம் அறக்கட்டளை நிறுவனர் சுஜித்குமார் மற்றும் PRID A S வெங்கடேஷ்.*



## சேவை, உள்ளடக்கம் மற்றும் ரோட்டரியின் எதிர்காலம்

*PRID A S வெங்கடேஷ், சுஜித்குமார், ஜெர்மனியைச் சேர்ந்த முதல் RI பெண் இயக்குநர் கிறிஸ்டைன் ப்யூரிங், திரைப்பட கலைஞர் அபிராமி ஆகியோரை ஒரு கேள்வி-பதில் அமர்வில் ஈடுபடுத்தினார்.*

*“நான் சமூகத்திற்கு சேவை செய்யத் தொடங்கினால், எனது வருவாய் குறைந்துவிடாதா? சேவை மற்றும் எதிர்காலத்தை எப்படி சமநிலைப்படுத்துவது? என்று வெங்கடேஷ் கேட்டார். அதற்கு சுஜித் அளித்த பதில்: “வேலை மற்றும் சேவை இரண்டும் வெவ்வேறானவை. அவற்றை குழப்பிக்கொண்டால் இரண்டிலும் தோல்விதான் ஏற்படும்.” அவர், நான்கு அடுப்பு கோட்பாட்டை சுட்டிக்காட்டினார். அங்கு தொழில், குடும்பம், ஆரோக்கியம் மற்றும் சேவை என எல்லாம் ஒரே எரிவாயு சிலிண்டரிலிருந்து பெறப்படுகின்றன. சில நேரங்களில் உங்கள் கோப்பை காலியாக இருக்கும். நீங்கள் எப்போதும் கொடுத்துக் கொண்டிருப்பவராக இருக்க முடியாது. அப்போது நீங்கள் என்னால் முடியாது என்று சொல்லிவிட்டு தேவையான விவகாரத்தில் கவனம் செலுத்தலாம்.”*

*மகிழ்ச்சியை வரையறுக்க முடியுமா என்று கேட்டபோது, அவர் கூறியது: “எனது குழந்தைகள் வெற்றிபெறுவதை பார்க்கும்போது”. நான் குழந்தைகள் என குறிப்பிடுவது அறக்கட்டளையின் ஆதரவில் படிக்கும் அந்த 4,000 மாணவர்களை. அவர்களில் 99 சதவீதம் பேர் முதல் தலைமுறை பட்டதாரிகள். 80 சதவீதம் பேர் பெண்கள். ஏறக்குறைய 1,000 பேர் அனாதைகள். நீங்கள் யாராவது ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு முன்னேற உதவினால் அதுதான் மகிழ்ச்சி” என்கிறார் இன்ஃபோஸிஸ் நிறுவனத்தில் மனிதவளப் பிரிவில் இணை துணைத் தலைவராக இருக்கும் சுஜித்குமார்.*

*நீங்கள் கடைப்பிடித்த உத்தி கைகொடுத்ததா என்று கேட்டதற்கு, நன்கொடையாளர்களை நம்பியிருக்கும் திட்டங்கள் கோவிட் போன்ற நெருக்கடியான காலகட்டத்தில் சரிந்துவிடும் என்று அவர் விளக்கினார். ஆனால், அதற்கு பதிலாக மாணவர்களுக்கு இடம் தர முன்வந்த கல்வி நிறுவனங் களுடனான நீண்டகால கூட்டாண்மையை விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். இதனால் செலவு இல்லை மற்றும் உச்சத்தை தொடமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*அவர்களின் உரையாடல், ரோட்டரியில் உள்ளடக்கம், பல்வேறு அடையாளங்கள் கொண்ட மக்களை எப்படி வரவேற்பது என்பது பற்றி திரும்பியது. கிறிஸ்டைன் ப்யூரிங் கூறுகையில், “பாலினத்தை பார்க்காதீர்கள். அந்த நபரை பாருங்கள். பாலினம் தனிப்பட்டது. தனிப்பட்ட நபரின் மதிப்புதான் இங்கு முக்கியம்”. சங்கங்கள் மக்களை சமமாகப் பார்க்கவேண்டும். அவர்களை கண்ணாடிபோல பார்க்கக்கூடாது. “யாரும் தங்களை காட்சிப்படுத்த விரும்புவதில்லை. அவர்கள் அவர்களாக இருக்கவே விரும்புகிறார்கள்”.*

*பாலின பாகுபாடு குறித்து கிறிஸ்டைன் குறிப்பிடுகையில், ஜெர்மனியில் ரோட்டரியில் இப்போது 14 சதவீத பெண்களே இருக்கிறார்கள். போருக்குப்பின் மேற்கு ஜெர்மனி பெண்கள் வீட்டுவேலைகளுக்கு திரும்புவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. அதேநேரத்தில் கிழக்கு ஜெர்மனி, குழந்தைகள் பராமரிப்பு முறையை அறிமுகப்படுத்தியது. இதனால் பெண்கள் அந்த தொழிலில் ஈடுபட்டார்கள். “குடும்ப பராமரிப்பு மாறும்போது சமூகத்திலும் மாற்றம் ஏற்படுகிறது. அதுதான் என்னை பொருத்தவரையில் சமத்துவம்” என்றார்.*

*பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர் ரோட்டரியை எங்கே பார்க்கிறார்? மக்கள் தொடர்புகொள்ள கற்றுக்கொள்ளாத உலகில் ரோட்டரி மக்களை ஒருங்கிணைக்கிறது. ஒரு புதிய சமூகத்திற்கான காரணியாக நாம் இருக்க முடியும். பன்முகத்தன்மை கொண்ட, படைப்பாற்றல் மிக்க, மரியாதைக்குரிய ரோட்டரியின் சிறப்புத்தன்மையே மனிதத் தொடர்புதான். 10,000 பேர் தனிப்பட்ட முறையில் சந்திக்க விரும்பினால், மெய்நிகர் சந்திப்பால் மட்டுமே சாத்தியம். அதுதான் நம் பலம்.”*

*அபிராமி, எதிர்காலத்தை திட்டமிட்டது பற்றியும், எதிர்கொண்ட சவால்கள் குறித்தும் பேசினார். “உண்மையாக நடந்துகொண்டு, ஒவ்வொரு அனுபவத்தின் மூலமும் வளரவேண்டும். திட்டமிட்டு செயல்பட்டு, எழுச்சி பெற்றால்தான் வெற்றி காண முடியும்.” என்று அவர் குறிப்பிட்டார்.*

அனாதைகள், தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் மாணவர்களுக்கு அறக்கட்டளை முன்னுரிமை அளிக்கிறது. “எனது பயணம் பணத்தால் அல்ல, மன உறுதியால் தொடங்கப்பட்டது. “நான் படித்துவிட்டு, சம்பாதிப்பேன். ஓய்வு பெற்ற பின், என்னால் முடிந்ததை திருப்பிக் கொடுப்பேன்” என்று மக்கள் அடிக்கடி சொல்வார்கள். ஆனால், ரோட்டரி எனக்கு வித்தியாசமான ஒன்றை கற்றுக்கொடுத்தது. நீங்கள் 60 வயதாகும் வரை காத்திருக்கத் தேவை யில்லை. 25 வயதிலும் நீங்கள் திருப்பிக் கொடுக்க தொடங்கலாம்” என்றார்.

இன்று மாற்றம் கல்விக்காக மட்டுமல்ல, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகவும் குரல் கொடுத்து வருகிறது. இந்தியாவின் முதல் திருநங்கை மாணவி ஒருவர் நர்சிங் படிக்கும் உரிமைக்காக உச்சநீதிமன்றம் உள்பட 7 ஆண்டுகள் போராடியதை அவர் சுட்டிக்காட்டினார். அவர் பெற்ற வெற்றியின் காரணமாக இப்போது நர்சிங் கல்லூரிகளில் திருநங்கைகளுக்காக ஒரு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்போது அவர், நர்சிங்கில் மேற்படிப்பு படித்து வருகிறார். விதிகளை மாற்றிய கல்வியின் சக்தியை அவர் வெளிப்படுத்துகிறார்.

கல்வியை மிகவும் சக்திவாய்ந்த சேவை வடிவமாக கருதுமாறு அவர் பார்வையாளர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். “ஒரு மரத்தை நட்டு வளர்த்தால் அது நாம் இல்லாவிட்டாலும் உயிருடன் இருக்கும். ஆனால், நீங்கள் ஒரு குழந்தைகளுக்கு கல்வி கற்பித்தால், அது அந்த குடும்பத்திலேயே மாற்றத்தை ஏற்படுத்தும். கல்விக்கு எல்லையோ அல்லது பாலினமோ இல்லை. அதேபோல திறமைக்கும் பாலினத்துக்கும் சம்பந்தம் இல்லை. நீங்கள் தரமான கல்வியைக் கொடுக்க வழிசெய்தால் அற்புதங்களை நிகழ்த்த முடியும்”.■

# ரோட்ராக்டர்களின் நிகழ்ச்சியால் வியப்படைந்த அரேஸ்ஸோ

**V முத்துகுமரன்**

சென்னை வர்த்தக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை காலையில் RID 3234 மாவட்டத்தைச் சேர்ந்த 3,000 ரோட்ராக்டர்கள், கின்னஸ் சாதனை முயற்சியாக போலியோவை முற்றிலும் ஒழிப்போம் (End Polio Now) நிகழ்வை நடத்திக்காட்டியபோது ரோட்டரி தலைவர் பிரான்சிஸ்கோ அரெஸ்ஸோ அதைக்கண்டு வியந்துபோனார். இந்தியாவில் தான் துடிப்பான ரோட்ராக்டர்களை நான் பார்க்கிறேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சாதனை முயற்சிக்காக 5,000-த்துக்கும் மேலான ரோட்ராக்டர்கள் கூடியிருந்தனர். "இத்தாலி முழுவதும் கணக்கிட்டால்கூட 3,000 ரோட்ராக்டர்கள் இருக்க மாட்டார்கள். ஆனால், இந்தியாவில் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த ரோட்ராக்டர்கள் மிகப்பெரிய அளவில் திரண்டு கின்னஸ் சாதனையாக இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். ரோட்ராக்டர்கள் திட்டங்களைச் செயல்படுத்து புதுவழிகளையும் யோசனைகளையும் கண்டுபிடிக்கின்றனர். இது ரோட்டேரியன்களுக்கு சாத்தியமற்றதாக தோன்றலாம். அனைத்து ரோட்ராக்டர்களும் விரைவில் ரோட்டரி சங்கத்தில் சேர வாழ்த்துகிறேன்," என்றார்.

"உலகத்தை மாற்றியமைக்கும் வல்லமைபடைத்தவர்கள் இளைஞர்கள். சமூக ஊடகங்களில் அவர்கள் போடும் ஒரு பதிவு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இளைஞர்களின் சக்தியும், அவர்கள் செயல்படும் வேகமும் மாற்றத்தை உருவாக்கும். நான் ஒரு ரோட்ராக்டராக இருந்து ரோட்டரிக்கு வந்ததால், அதை ரசிக்கிறேன்" என்று RI இயக்குநர் M முருகானந்தம் கூறினார்.

"உலகில் மாற்றத்தை விரும்பினால், நீங்கள் முதலில் மாறுங்கள்" என்ற மகாத்மா காந்தியின் வார்த்தைகளை அவர் மேற்கோள் காட்டினார். ரோட்டரி என்னும் சக்கரம் மேலும் நூறாண்டுகளுக்கு நகர வேண்டுமானால், அதற்கு ரோட்ராக்டர்கள் மிக முக்கியம். பொறுப்புகளை கையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

நானும் முருகானந்தமும் இந்திய மண்டலங்களின் சார்பாக இந்த ஆண்டு போலியோ ஒழிப்பு நிதியாக $5 மில்லியன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளோம் என்று RI இயக்குநர் K P நாகேஷ் தெரிவித்தார். இதற்கு நிதி திரட்ட ரோட்டரி ப்ரீமியர் லீக் என்ற பெயரில் நான்கு மண்டலங்களுக்கும் இடையே கிரிக்கெட் போட்டி நடத்தப்படும் என்றார். இது RID 3234-க்கு பெருமை அளிக்கும் நேரம் என்று மாவட்ட ஆளுநர் வினோத் சாரோகி தெரிவித்தார். இந்த நிகழ்வின் தொடக்க அமர்வில் ரூ.250 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கிவைக்கப்பட்டன. இதில் ரூ.40 கோடியிலான திட்டங்களை




*இடமிருந்து: RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ, RI இயக்குநர் M முருகானந்தம், RID 3234 DG வினோத் சரோகி, RI இயக்குநர் K P நாகேஷ் மற்றும் RI தலைவர் அரேஸ்ஸோவின் உதவியாளர் ஜான் டி ஜியோர்ஜியோ.*




ஆனா மரியா அரேஸ்ஸோ, உஷா சரோகி, RID நாகேஷ், DG சரோகி, டி ஜார்ஜியோ, தலைவர் அரேஸ்ஸோ, RID முருகானந்தம், PDG J ஸ்ரீதர் மற்றும் DRR சதீஷ் குமார் ஆகியோர் என்ட் போலியோ நவ் உருவாக்கத்தை உற்சாகப்படுத்துகிறார்கள்.

RID 3234 செயல்படுத்தும். 100 பெண்களுக்கு பிங்க் நிற ஆட்டோக்கள் வழங்கும் திட்டமும் அடங்கும். இந்த பெண்களுக்கு ஆட்டோ ஓட்டுவதற்கு மட்டும் பயிற்சி அளிக்கப்படவில்லை. தற்காப்புக்கலை, தகவல் தொடர்பு மற்றும் ஆளுமைத் திறனிலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

1968-ம் ஆண்டு, அமெரிக்காவின் வடகரோலினாவில் உள்ள RAC நார்த் கரோலினாவில் ரோட்ராக்ட் உருவாக்கப்பட்டதை நினைவுகூர்ந்த IPDG N S சரவணன் (RID 3234), “ரோட்ராக்டர்களுக்கு இருக்கும் திறன் மற்றும் ஆற்றல் நாம் எல்லோரும் அறிந்ததே. ரோட்டேரியன்களுக்கு அவர்கள்தான் ஊக்கசக்தியாக இருக்கின்றனர்.” கடந்த ஆண்டு (2024–25) RID 3234 ரோட்ராக்ட் சங்கங்கள் TRF-க்கு $30,500 நிதிப்பங்களிப்புச் செய்துள்ளன என்று குறிப்பிட்டார்.




PRID C பாஸ்கர் பேசுகையில், “இந்திய மக்கள் தொகையில் 65 சதவீதம் பேர் 35 வயதுக்கு குறைந்தவர்கள். நமது நாடு இளைஞர்களையே பெரிதும் நம்பியுள்ளது. இளைஞர்கள்மீது சுவாமி விவேகானந்தர் வைத்திருந்த நம்பிக்கையை, போலியோவை முற்றிலும் ஒழிப்போம் விழிப்புணர்வு நிகழ்வு மூலம் நமது ரோட்ராக்டர்கள் நிரூபித்துள்ளனர்.” என்று அவர் குறிப்பிட்டார்.

DRR சதீஷ்குமார், “மாவட்ட ரோட்ராக்டர்கள், ரோட்டரி தலைவர் அரெஸ்ஸோவின் முன்பாக நிகழ்ச்சி நடத்துவது என்பது வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் வாய்ப்பாகும்” என்று கூறினார். மேலும் இந்த நிகழ்வுக்கு சிறப்பாக ஏற்பாடு செய்த DG வினோத் சாரோகிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

போலியோவை முற்றிலும் ஒழிப்போம் சின்ன நிகழ்ச்சி மாவட்ட சங்கங்களுக்கு விளம்பர பயிற்சியாகும். போலியோவை ஒழிப்பதில் ரோட்டரியின் உலகளாவிய முயற்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வாகும் என்று இந்த நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீனிவாசன் பலராமன் (RID 3234) கூறினார். “மாவட்ட ரோட்ராக்டர்கள் அனைவரும் இந்நிகழ்வில் பங்கேற்றது ஒரு சிறந்த அனுபவமாகும்” என்று இந்நிகழ்வை ஒருங்கிணைத்து ரோட்ராக்டர்களுக்கு வழிகாட்டிய பிரிட்டோ மனோகர் கூறினார். லயோலா கல்லூரி ரோட்ராக்ட் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான அவர், இரண்டு கின்னஸ் சாதனை முயற்சிக்கான நிகழ்ச்சிகளுக்கு தலைமையேற்று அரங்கேற்றியிருக்கிறார். ஒன்று 7,000 உறுப்பினர்கள் ஒன்றாக கைகோர்த்து சாதனை படைத்தனர். மற்றொன்று 50,000 ரோட்ராக்டர்கள் மற்றும் தன்னார்வலர்கள் “எனது கொடி, எனது இந்தியா” நிகழ்வில் பங்கேற்றது.■

# சென்னையில் ரோட்டரி தலைமையகம்

V முத்துகுமரன்

சென்னையில் நடைபெற்ற மாநாட்டின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் சிகாகோவின் எவன்ஸ்டனில் உள்ள ரோட்டரி தலைமையகம் போல் மாநாட்டின் முகப்பில் 'நட்பு இல்லம்' வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்த நட்பு இல்லத்தை திறந்துவைத்த RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, ரோட்டரி தலைமையகத்தைப் போலவே நட்பு இல்லத்தை இங்கு வடிவமைத்து உருவாக்க மேற்கொண்ட முயற்சிகளுக்காக பாராட்டுத் தெரிவித்தார். "ரோட்டரி சர்வதேச மாநாடு நடைபெறும் இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்ட இந்த நட்பு இல்லத்தை நான் பார்வையிட்டிருக்கிறேன். ஆனால், நான் பார்த்ததிலேயே இது மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது" என்று கூறிய அவர், RI இயக்குநர்கள் M முருகானந்தம், K P நாகேஷ் மற்றும் நட்பு இல்ல மாநாட்டுத்தலைவர் S முத்துபழனியப்பன் ஆகியோருடன் அங்கு அமைக்கப் படிருந்த ரோட்டரி ஸ்டால்களையும் பார்வையிட்டார்.



*நட்பு இல்லத்தில் உள்ள AKS கேலரியில் RI இயக்குனர் M முருகானந்தம், RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ மற்றும் ஆனா மரியா.*



*RI தலைவர் அரேஸ்ஸோ மற்றும் ஆனா ஒரு ஸ்டாலில். RI இயக்குனர் முருகானந்தமும் இருக்கிறார்.*

நட்பு இல்லம் (HoF-House of Friendship) இரண்டு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டது. முதலாவது "எங்கள் மண்டலங்களைச் சார்ந்த ரோட்டேரியன்களுக்கு ரோட்டரி தலைமையகத்தில் இருப்பதைப் போன்ற உணர்வை ஏற்படுத்துவது". இரண்டாவது "பல்வேறு காரணங்களால் ரோட்டரி சர்வதேச மாநாட்டில் பங்கேற்க முடியாத உறுப்பினர்களுக்கு RI மாநாட்டில் என்ன நடக்கிறது என்பதை காண்பிப்பதற்காகவும் இது உருவாக்கப்பட்டது" என்று PDG முத்துபழனியப்பன் விளக்கினார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகமான One Rotary Centre மாநாட்டின் முகப்பில் வடிவமைக்கப்பட்டது. ரோட்டரி செயல்படும் பகுதி முன்னுரிமைகள் மற்றும் சமூக முன்முயற்சி களை வெளிப்படுத்துவது போல் காட்சிப் படுத்தப்பட்டது. ரோட்டரி எப்படி ஆரம்பிக்கப்பட்டு முழுவடிவம் பெற்றது என்பதை நினைவுபடுத்தும் அறை 711 மீண்டும் உருவாக்கப்பட்டது என்று அவர் கூறினார். சிகாகோவில் ஒற்றுமை இல்லத்தின் அறை எண் 711-ல் தான் அதன் நிறுவனர் பால் ஹாரிஸ்,



கஸ்டாவஸ் லோஹர், சில்வஸ்டர் ஷீலே மற்றும் ஹிரம் ஷோரி ஆகியோர் அடங்கிய நால்வர் குழு 1905-ம் ஆண்டு பிப்ரவரி, 23-ம் தேதி ரோட்டரியின் முதல் கூட்டத்தை நடத்தினர். அப்போது அந்த இடம் லோஹரின் அலுவலகமாக இருந்தது. 1980-ல் சிகாகோவில் நடைபெற்ற மாநாட்டின் போது, உள்ளூர் ரோட்டேரியன்கள் அந்த இடத்தை வாடகைக்கு எடுத்து 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதுப்பொலிவுடன் மாற்றியமைத்தனர்.

1989-ம் ஆண்டில் ஒற்றுமை இல்லம் முற்றிலுமாக இடிக்கப்பட்டது. ஆனால் ரோட்டேரியன்கள் அறை எண் 711-ஐ அகற்றி அதே போன்ற அறையை இல்லினாய்ஸில், எவான்ஸ்டனில் ரோட்டரி தலைமையகம் அமைந்த போது மீண்டும் உருவாக்கினர். ரோட்டரி மையத்துக்கு வருகை தந்த ரோட்டேரியன்கள் அறை எண் 711-க்குள் காலடி எடுத்துவைத்து, 1905-ல் முதல் சந்திப்பு நடந்த இடத்தை பார்வையிட்டு மகிழ்ச்சி அடைந்தனர்.

ரோட்டரி தலைமையகத்தில் இருப்பது போலவே அமைந்துள்ள நட்பு இல்லத்தில் உள்ள AKS அரங்கம், ரோட்டரிக்கு பல தசாப்தங் களாக நன்கொடையளித்த பெரு நன்கொடையாளர்கள் பற்றிய ஒரு விரிவான பார்வையை வழங்கியது. ரோட்டரி இந்தியாவைச் சேர்ந்த நான்கு மண்டலங்களில் உள்ள மாவட்டங்கள் மூலமான 20 திட்ட அரங்குகள் மற்றும் 200 வர்த்தக அரங்குகள் நட்பு இல்லமான ஒருலட்சத்துக்கும் மேலான சதுர அடி பரப்பில் விரிந்து கிடந்தது. 10,500-க்கும் மேலான பார்வையாளர்கள் அதை கண்டு களித்தனர். ஆரஞ்சு திட்ட அரங்கில் 300-க்கும் மேலான பார்வையாளர்கள் கண்ணில் ஏற்பட்ட கோளாறுகளுக்காக பரிசோதனை செய்துகொண்டனர். இந்த திட்டம் முத்துபழனியப்பன் 2020-21-ல் அவர் மாவட்ட ஆளுநராக (RID 3232) இருந்த போது இத்திட்டம் உருவாக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் 15 மருத்துவமனைகளின் ஆதரவுடன் 160 கண்பார்வை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

பொழுது போக்கு பிரிவில் இடைவிடாத நடனம், இசை, மந்திரஜாலம் மற்றும் ஆடை அணிவகுப்பு ஆகியவை இடம் பெற்றன. போலியோவை ஒழிப்போம் விளையாட்டுப் பகுதி பரபரப்பாக இருந்தது. உள்ளரங்க கிரிக்கெட் விளையாட்டு (பாக்ஸ் கிரிக்கெட்), மேஜை கால்பந்து (வீரர்களின் உருவங்களைக் கொண்டு மேஜையில் விளையாடப்படும் கால்பந்து), மினி பௌலிங் (ஒருவகை பந்துவீச்சு விளையாட்டு) இடம் பெற்றது. மாநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அதிக ஆர்வம் காட்டினர்.■

# பெண்கள் மேம்பாட்டுக்கான கண்காட்சித் திருவிழா

ரோட்டரி செய்திக்குழு

திருப்பூர் பயனீர்ஸ் ரோட்டரி சங்கத்தினர், (RID 3203) பெண்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும், அவர்களின் வாழ்க்கைக்கு மேம்பாடு அளிக்கும் இரண்டுநாள் திருவிழாவுக்கு திருப்பூரில் ஏற்பாடு செய்திருந்தனர்.




*கண்காட்சியில் பங்கேற்பாளர்களுடன் DG B தனசேகர் (நடுவில்) மாவட்ட ஒருங்கிணைப்பாளர் S லோகநாதன் (இடமிருந்து 4வது) மற்றும் சங்கத் தலைவர் A விவேகானந்தன் (வலமிருந்து 2வது).*

இந்த நிகழ்வில் 100-க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர் கலந்துகொண்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் முதல் முறையாக கண்காட்சியில் பங்கேற்றனர். சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அரங்குகள் மூலம் தங்கள் தயாரிப்புகளை அவர்கள் காட்சிப்படுத்தினர்.

இந்த கண்காட்சியின் ஒரு பகுதியாக ஒரு நடமாடும் இதய பராமரிப்பு முகாமுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும் நடமாடும் கண் பரிசோதனை முகாமும் நடத்தப் பட்டது. பெண் தொழில்முனைவோர் 6 பேருக்கு அவர்களின் சேவையை அங்கீகரிக்கும் வகையில் “பயனீர் மங்கை” விருதுகள் வழங்கப்பட்டன. 25 சாலை வியாபாரிகளுக்கு மேஜைகள், குடைகள் மற்றும் 100 பெரிய குடைகளும் வழங்கப்பட்டன. மரக்கன்றுகள் நடுதல், தாய்ப்பால் நன்கொடை மற்றும் ரோட்டரியின் இதர திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த கண்காட்சியை சுமார் 5,000 பேர் கண்டு ரசித்தனர். இதற்கான திட்டச்செலவு ரூ.15.41 லட்சம். திருப்பூர் நகர மேயர் N தினேஷ், மாவட்ட ஆளுநர் B தனசேகர் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.■

# கான்க்ளேவ் நினைவுகள்




*மேலே:* RI *தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ மற்றும் அவாது மனைவி ஆனா மரியா ரோட்டரி நியூஸ் பத்திரிகையுடன் போஸ் கொடுக்கின்றனர்.*

*கீழே:* RI *தலைவர் அரேஸ்ஸோவின் உதவியாளர் ஜான் டி ஜியோர்ஜியோ* RI *இயக்குனர் கிறிஸ்டின் பியூரிங், அவாது மனைவி மோனிக் சேம்பர்ஸ் மற்றும் தலைவர் அரேஸ்ஸோவுடன் செல்ஃபி எடுக்கிறார்.*







*இடது: தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விளக்கேற்றுகிறார். (வலமிருந்து) பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி,* Lead25 *இணை ஒருங்கிணைப்பாளர்* RID K P *நாகேஷ் மற்றும் நிகழ்வுத் தலைவர்* PDG *ஜான் டேனியல் ஆகியோர் உள்ளனர்.*

*வலது:* RI *தலைவர் அரேஸ்ஸோ மற்றும் ஆனா* Lead25 *கன்வீனர்* RI *இயக்குநர்* M *முருகானந்தம் மற்றும் சுமதி உடன்.* PDG *டேனியல் பின்னால் காணப்படுகிறார்.*

*கீழே:* RID 3234-*ன் பிங்க் ஆட்டோ திட்டத்தின் தொடக்க விழாவில்,* RI *தலைவர் அரேஸ்ஸோ ஆட்டோரிக்ஷாவில் இருந்து இறங்குகிறார்.*





*இடது:* (இடமிருந்து) TRF *அறங்காவலர் பரத் பாண்டியா,* PRID A S *வெங்கடேஷ்,* RID *கிறிஸ்டின் மற்றும் வினிதா வெங்கடேஷ்.*



PRID C *பாஸ்கர் மற்றும் அவரது மனைவி மாலா.*



*மேலே:* Lead25 குழு உறுப்பினர்களுடன் RIDகள் முருகானந்தம் மற்றும் நாகேஷ்.

*வலது:* RI தலைவர் அரேஸ்ஸோ நட்பு இல்லத்தில் கிரிக்கெட் விளையாடுகிறார்.







RID முருகானந்தம், RI தலைவர் அரேஸ்ஸோ, ஆனா, RID நாகேஷ், அவரது மனைவி உமா, மற்றும் சுமதி. டி ஜியோர்ஜியோ மற்றும் மோனிக் ஆகியோரும் உள்ளனர்.

கீழே: உமா மற்றும் RID நாகேஷ்.

வலது: RID முருகானந்தம் மற்றும் சுமதி. PDG J ஸ்ரீதர் மற்றும் வினிதா வெங்கடேஷ் பின்னால் காணப்படுகின்றனர்.







இடது: அறங்காவலர் பாண்டியா RI தலைவர் அரேஸ்ஸோ மற்றும் ஆனாவை வாழ்த்துகிறார்.

வலது: RI தலைவர் அரேஸ்ஸோ மற்றும் ஆனா RC கொடைக்கானல் முன்னாள் தலைவர் ராஜ்குமார் ராமன் மற்றும் அவரது மனைவி மீரா பழங்குடியினருக்கு வீடுகள் கட்டியதற்காக அவர்களைப் பாராட்டுகிறார்கள்.



வடிவமைத்தவர் கிருஷ்ண பிரதீஷ் S

அடுத்த இதழில் இன்னும் சில மாநாட்டு கட்டுரைகள்.

# என் அன்பு நண்பர் சங்கூ யூனின் நினைவாக

**KR ரவீந்திரன்**

இன்று ரோட்டரி அழுது கொண்டிருக்கிறது. உலகமானது மகத்தான ஆற்றல் வாய்ந்த ஒரு தலைவரை மட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் மேலாக, அரிதான நற்குணமும் அருளும் கொண்ட ஒரு மனிதரையும் இழந்துள்ளது.

சங்கூ என்னுடைய அருமை நண்பர். அவருடைய வாழ்வின் இறுதி நெருங்கி கொண்டிருந்தபோது நான் அவருடைய குடும்பத்தினருடன் தொடர்பில் இருந்தேன். அன்று காலை நான் மீண்டும் தொலைபேசியில் அழைத்தபோது, அவருடைய மகன், சங்க்கூ பத்து நிமிடங்களுக்கு முன்புதான் காலமானார் என்ற மனதை நொறுக்கும் செய்தியை என்னிடம் தெரிவித்தார். அத்தருணத்தின் வலியை என்னால் ஒருபோதும் மறக்கமுடியாது.

அவர் 2026–27-ம் ஆண்டிற்கான ரோட்டரி சர்வதேசத் தலைவராகப் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார், ஆனால் விதி அதற்கு மாறாக அமைந்தது. அவர் இப்போது அந்தப் பதவியை வகிக்கப் போவதில்லை, ஆனால் சங்க்கூ தனது உதாரணம், தொலைநோக்குப் பார்வை, பணிவு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் ஏற்கனவே நம் அனைவரையும் வழிநடத்தியுள்ளார்.

அவரது தந்தை கொரியாவின் முதல் அதிபர், அத்தகைய உயர்குடி குடும்பத்தில் பிறந்தவர் அவர். அந்தக் குடும்பப் பாரம் பரியத்தை ஒழுக்கத்துடன் கடைப்பிடித்தார், ஒருபோதும் ஆணவத்துடன் இருந்ததில்லை. அமெரிக்காவில் கல்வி பயின்ற அவர், சிராக்கூஸ் பல்கலைக்கழகத்தில் கட்டிடக்கலையில் முதுகலைப் பட்டமும், எடின்பரோவில் இருந்து கௌரவ டாக்டர் பட்டமும் பெற்றார். மேலும் கட்டுமானப் பொருட்கள் மற்றும் பொறியியல் துறையில் மிகவும் வெற்றிகரமான ஒரு நிறுவனத்தை உருவாக்கினார். பிரிட்டன் சாம்ராஜ்யத்தின் சிறந்த அதிகாரிக்கான விருதினை, ராணி இரண்டாம் எலிசபெத் அவருக்கு வழங்கினார். மங்கோலியாவின் அதிபரால் நட்பு பதக்கம் அளித்தும், அவரது சொந்த நாட்டின் அதிபர் மற்றும் பிரதமரால் சிறப்புப் பாராட்டு அளித்தும் அவர் கௌரவிக்கப்பட்டார். தனது நாட்டிற்காக அவர் இராணுவத்தில் பணியாற்றினார் மற்றும் அண்டோங் பிரஸ்பைடீரியன் தேவாலயத்தில் மூத்த போதகராகவும் பணியாற்றினார்.

இந்த மரியாதைகளுக்குப் பின்னால் ஒரு அபூர்வமான எளிமை கொண்ட மனிதர் இருந்தார். ஒரு கிராமத்தில் பாயில் அமர்ந்து எளிய உணவைப் பகிர்ந்து கொள்ளவும், அல்லது அதே இயல்புடன் அரசர்கள் மற்றும் தலைவர்கள் முன் ஒரு நேர்த்தியான கோட்டில் ஒரு பெரிய மேடையில் பேசுவதற்கும் அவரால் முடிந்தது. மேலும் அவர் எங்கு சென்றாலும், மக்கள் தாங்கள் கவனிக்கப்பட்டதாகவும், மதிக்கப்பட்டதாகவும், கௌரவிக்கப் பட்டதாகவும் உணர்ந்தனர்.

ரோட்டரிக்கு அவர் செய்த சேவை அளப்பரியது. திட்டங்கள் செயல்படுத்தப்படுவதையும், அவை நீடித்திருப்பதையும் உறுதி செய்வதற்காக அவர் தனிப்பட்ட முறையில் 36 நாடுகளுக்குப் பயணம் செய்தார். இலங்கையில் எங்களுடைய மிகவும் வெற்றிகரமான மார்பகப் புற்றுநோய் திட்டத்தை நாங்கள் விரிவாக்கியபோது, சங்க்கூ தனது ஆதரவுக் கரத்தை நீட்டினார். மேலும், அந்த திட்டத்தின் முன்னேற்றத்தைப் பார்ப்பதற்காக தனிப்பட்ட முறையில்



PRIP K R *ரவீந்திரன் (வலது) சங்கூ யுனுடன்.*

வந்தார். ரோட்டரிக்கு வெளியே உள்ள கொரிய நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டத்தை நேரில் காண்பதற்காக, இலங்கையின் வடக்குப் பகுதிக்கு ஆறு மணி நேரம் ரயிலில் பயணிக்கவும் தயாராக இருந்தார். சேவை என்பது வெறும் நிதி அல்லது அறிக்கைகள் வழங்குவது மட்டுமல்ல, சேவை செய்பவர்களுடனும், துன்பப்படுபவர்களுடனும் சேர்ந்து நடப்பதும் ஆகும் என்று அவர் நம்பினார்.


PRIP ரவீந்திரன், TRF அறங்காவலர் தலைவர் ஹோல்கர் க்னாக், சூசேன் க்னாக் மற்றும் வானதி ரவீந்திரன் (இடமிருந்து மூன்றாவது, முன் வரிசையில்) ஆகியோருடன் சங்கூ.

அவர் ரோட்டரிக்குத் தனது தொழில்முறை திறமையையும் கொண்டு வந்தார். கொரியாவில் நடைபெற்ற ரோட்டரி சர்வதேச மாநாட்டின் உள்நாட்டு ஏற்பாட்டுக் குழுவின் தலைவராக இருந்தபோது, அவர் அதை மிகவும் திறமையுடன் நிர்வகித்து $2.5 மில்லியனுக்கும் அதிகமான லாபத்தை ஈட்டினார். அது அதற்கு முன்போ அல்லது பின்போ நிகழ்த்தப்படாத ஒரு சாதனையாகும். அதுதான் சங்க்கூ: கொள்கையாளர், திறமையானவர், உறுதியானவர் மற்றும் பெருந்தன்மையானவர். அவர் எப்போதும் ரோட்டரி மற்றும் மனிதகுலத்தின் நன்மைக்காகவே உழைத்தார். நான் அவருக்கு மாநாட்டில் முழு சுதந்திரம் அளித்திருந்தேன், மூன்று ‘சிறிய நிபந்தனைகளுடன் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி-மூன் அவர்களை அழைத்து வர வேண்டும், கொரிய பாப் நட்சத்திரம் சை (Psy)-ஐ நிகழ்ச்சி நடத்தச் செய்ய வேண்டும், மற்றும் பால் ஹாரிசின் முப்பரிமாண பிம்பத்தை மேடையில் உருவாக்க வேண்டும். அவர், “இதுவா மூன்று சிறிய விஷயங்கள்,”! என்று சிரித்துக் கொண்டே கூறினார். ஆனால் அவர் அதைச் செய்து முடித்தார்.


சங்கூ மற்றும் PRIP ரவீந்திரன் தங்கள் பேத்திகளுடன்.

அவருடைய இந்த அடக்க முடியாத மன உறுதி, அவரைப் பாதித்து வந்த புற்றுநோயை வெல்ல உதவும் என்று நான் நினைத்தேன். ஆனால், அது நடக்கவில்லை.

அவருடைய போராட்டங்களையும் வெற்றிகளையும் அசைக்க முடியாத பக்தியுடன் தாங்கிய அவரது அன்பு மனைவி யூன்சன்-க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரை உலகத்துடன் பகிர்ந்து கொண்ட அவரது குழந்தைகளுக்கும் குடும்பத்தினருக்கும், அவர் ஒரு நோக்கத்துடன் வாழ்ந்தார் என்பதையும், ஒரு சிலரால் மட்டுமே சமமாக இருக்கக்கூடிய ஒரு பாரம்பரியத்தை விட்டுச் சென்றார் என்பதையும் அறிந்து நீங்கள் ஆறுதல் அடையலாம். மேலும் அவரது வழிகாட்டியான, முன்னாள் ரோட்டரி சர்வதேசத் தலைவர் D K லீ அவர்களுக்கு, ஒரு மகனைப் போன்ற ஒரு சீடனை இழந்த உங்கள் துக்கத்தில் நானும் பங்கு கொள்கிறேன்.

விடைபெறுங்கள், என் அன்பான இளவரசே. ஆயிரமாயிரம் தேவதைகள் உங்களை நித்திய ஓய்வுக்கு அமைதியாகத் தாலாட்டட்டும். எஞ்சியிருக்கும் நாங்கள், உங்களை எங்களது வார்த்தைகளால் மட்டுமல்ல, நீங்கள் எங்களுக்குக் காட்டிய சேவை, பணிவு மற்றும் இரக்கத்தின் பாதையில் நடப்பதன் மூலம் உங்களைக் கௌரவிப்போமாக. ■



PRIP சேகர் மேத்தாவுடன் பானி பூரி சாப்பிடும் சங்கூ யுன்.

# சங்கூ யுனை நினைவுகூர்தல்

சேகர் மேத்தா

சங்கூவின் மறைவு ரோட்டரி உலகிற்கு மட்டுமல்ல, அவரை அறிந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கும் ஒரு பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. ராஷியும் நானும் அதற்கு விதிவிலக்கல்ல.

நான் வாரியத்தின் இயக்குநராக இருந்த போது எனக்கு கீழே பணி யாற்றினார். ஆனாலும் விரைவிலேயே நாங்கள் நல்ல நண்பர்களானோம். எங்களிடையே நட்பு வலுவடைந்தது. எங்கள் சங்கத்தின் பதவியேற்பு நாள் நிகழ்ச்சிக்கு அவரை அழைத்திருந்தேன். அவர் வந்திருந்து நிகழ்ச்சியில் பங்கேற்று அனைவரின் அன்பையும் பெற்றார். நாங்கள் அவருக்கு கொல்கத்தா நகரை சுற்றிக் காண்பித்தோம். அவர், தெருவோர கடைகளில் உணவு சாப்பிடுவதை விரும்பினார். குறிப்பாக தோசையை அவர் விரும்பி சாப்பிட்டார். அதன் பிறகு எப்போது நாங்கள் சந்தித்தாலும் அவர், அதை நினைவுபடுத்துவார். நான் கொரியாவில் சியோல் நகருக்குச் சென்றபோது, என்னை வெளியே அழைத்துச் சென்று தோசை வாங்கிக்கொடுத்து ஆச்சரியப் படுத்தினார்!

ரோட்டரி தலைவர்கள் மாநாட்டுக்கு தலைமைவகித்தவர் சங்கூ. கோவிட் தொற்று காலமாக இருந்த நிலையிலும் ஐந்து நாட்களுக்கு கொரியா முழுவதிலும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அவர் ஏற்பாடு செய்திருந்தார். திட்டச் செயல்பாடுகளை பார்வையிடவும், நகரை சுற்றிப்பார்க்கவும் ஏற்பாடு செய்தார். அவரது அழகான வீட்டுக்கு அழைத்துச் சென்றபோது மனைவி யூன் சன் எங்களை வரவேற்று உபசரித்து விருந்தளித்தார். கொரியாவில் முன்னாள் ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் மற்றும் இந்திய தூதர் அளித்த விருந்தின் போதும் ரோட்டேரியன்கள் மற்றும் இதர மக்களால் அவர் எவ்வாறு மதிக்கப்படுகிறார் என்பதை நாங்கள் நேரில் காணமுடிந்தது. கொரியாவில் ரோட்டரியில் அவர் எப்போதும் முன்னிலைப் பெற்றிருந்தார். அவர் RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை-கொரியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது நபர் என்பதைத் தவிர.

நான் நடத்திய சர்வதேச அசெம்பிளி கூட்டத்தில் அவர் நடுவராக இருந்தது எனக்கு கிடைத்த பாக்கியமாகும். மாநாட்டு ஏற்பாட்டுக்காக பல ஆலோசனைக் கூட்டங்கள் நடத்திய போதிலும் இறுதியில் எங்களால் மெய்நிகர் முறையில்தான் மாநாட்டை நடத்த முடிந்தது. அந்த நேரத்திலும் சங்கூ திட்டமிடலில் கவனமாக இருப்பதை உணர்ந்துகொண்டேன். தொலைநோக்குப் பார்வை, பொறுப்புணர்வுடன் செயல்பட்டு மற்றவர்களுக்கு உதவுவதில் அவர் ஆர்வமாக இருந்தார்.

எவன்ஸ்டனில், வாரிய அறையில், சியோல் மாநாட்டில், எங்கள் வீட்டில், கொல்கத்தா நகரத் தெருக்களில், கொரியாவின் பல்வேறு நகரங்களில், பல்வேறு மெய்நிகர் சந்திப்புகள் என எங்களுக்கு அவருடன் ஆயிரம் நினைவுகள் இருக்கின்றன. அவர் தலைமை பொறுப்பை ஏற்கும் நாட்களை எதிர்நோக்கி காத்திருந்தோம். ஆனால், துரதிருஷ்டவசமாக, விதி அவரை அழைத்துச் சென்றுவிட்டது.



PRIP மேத்தா மற்றும் ராஷியுடன் சங்கூ யூன் மற்றும் அவரது மனைவி யூன்சன்.

எழுத்தாளர் ஒரு முன்னாள் RI தலைவர்.

# கொல்கத்தாவில் பெண்களுக்கு தனி கழிப்பறை வளாகம்

V முத்துகுமரன்

கொல்கத்தா நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள மீர்ஸா காலிப் தெருவை கடந்து செல்பவர்கள் “பெண்கள் கழிப்பறை மற்றும் குழந்தைகள் பராமரிப்பு மையம்” உங்களை வரவேற்கிறது என்னும் விளம்பரப் பலகையை படிப்பதில் மகிழ்ச்சி அடைவார்கள். இந்த நகரத்தில், பேலூர் ரோட்டரி சங்கம் (RID 3291), கொல்கத்தா நகராட்சியுடன் கூட்டாகச் செயல்பட்டு முதன் முறையாக பெண்களுக்கு என பிரத்யேகமான கழிப்பறை வளாகம் மற்றும் குழந்தைகளுக்கு பாலூட்டும் மையத்தை திறந்துள்ளது.

உள்ளாட்சி அமைப்பால் கட்டப்பட்ட, சுமார் 700 சதுர அடி பரப்பளவு கொண்ட இந்த கழிப்பறை வளாகம் மற்றும் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கும் மையத்தை ரோட்டரி சங்கம் ஒப்பந்த அடிப்படையில் மூன்று ஆண்டுகள் பராமரிக்கும். திட்டத்தின் தலைவர் ராகேஷ் பாட்டியா, இந்த தாய்-சேய் நலத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த சங்கத்தின் 82 உறுப்பினர்களும் ஏதோ ஒருவழியில் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர் என்றார்.

வளாகத்தில் ஆண்களுக்கு அனுமதியில்லை. தாய்ப்பாலூட்டும் இரண்டு சிறிய அறைகளிலும் கட்டில் மற்றும் ஸ்டூல்கள் போடப்பட்டுள்ளன. இந்த அறை ஞாயிற்றுக்கிழமைகள் தவிர மற்ற நாட்களில் தினமும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும். இந்த வளாகத்தில் இரண்டு இந்திய மாடல் கழிப்பறை, மேற்கத்திய முறையிலான கழிப்பறை ஒன்று மற்றும் குளியல் அறை, உடைமாற்றும் அறைகளும் உள்ளன.

விரைவில் சானிடரி நாப்கின் வழங்கும் தானியங்கி இயந்திரமும் நிறுவப்பட உள்ளது. தற்போது இரண்டு பெண் ஊழியர்களை சங்கம் பணியில் அமர்த்தியுள்ளது. தினமும் குறைந்தபட்சம் 100 முதல் 120 பெண்கள் இந்த வசதியைப் பயன்படுத்துவர்.

தொடக்க விழாவில் பேசிய மாவட்ட ஆளுநர் ராமேந்து ஹம்சௌதுரி, மாநகராட்சி கழிப் பறையை நவீனமாகவும் சுகாதார மாகவும் மாற்றியமைத்துள்ளதன் மூலம் பேலூர் ரோட்டரி சங்கம் பொது சேவையில் புதிய முத்திரையை பதித்துள்ளது,” என்றார். இந்த திட்டம் பெண்களுக்கு தூய்மை, சௌகரியம் மற்றும் கண்ணியத்தை உறுதி செய்கிறது. மேலும் இந்த திட்டம் கொல்கத்தா மக்களின் வலுவான நன்மதிப்பையும் ரோட்டரிக்கு பெற்றுத் தந்துள்ளது” என்று அவர் கூறினார்.

தாய்-சேய் நல்வாழ்வின் ஒரு பகுதியான இந்த திட்டத்தை நீண்டகால கண்ணோட்டத்தில் ஒரு நிலையான திட்டமாக வைத்திருக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம் என்று சங்கத்தின் தலைவர் சரத் துகார் கூறினார். தொடர்ந்து வயதுவந்தோர் எழுத்தறிவு திட்டத்தின்கீழ் தாய்மார்களுக்கு மறுசுழற்சி செய்யப் பட்ட நோட்டுப் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருள்கள் வழங்கும் திட்டமும் உள்ளது. இது அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்க உதவும் என்றும் அவர் கூறினார்.■



*கழிப்பறை வளாகம் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு மையத்தின் முன், DG ராமேந்து ஹோம்சௌதுரி (வலது) மற்றும் (அவரது இடதுபுறம்) திட்டத்தலைவர் ராகேஷ் பாட்டியா, RC பேலூர் உறுப்பினர்களுடன்.*

ரோட்டரி நியூஸ்-ன் கட்டுரைகள் குறித்து தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நலத்திட்டங்கள் புகைப்படங்களுடன் **rushbhagat@gmail.com** அல்லது **rotarynewsmagazine@gmail.com** என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். **WHATSAPP** செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

Rotary PEOPLE OF ACTION

# புனேவுக்கு அருகிலுள்ள கிராமங்களுக்கு சூரிய ஆற்றல் பயன்

ரஷீதா பகத்



இடமிருந்து: திட்ட இயக்குநர் மீனா பொராட்டே, கிராம தன்னார்வலர் விகாஸ் ஜாதவ், எமர்சன் எலக்ட்ரிக் நிறுவனத்தின் மூத்த அதிகாரி அபய் பன்சோட், அஸ்வினி பன்சோட் மற்றும் திட்ட பொருளாளர் அதிதி ரஹானே ஆகியோர் சூரிய சக்தி பேனல்கள் நிறுவப்பட்ட ஒரு கிராம வீட்டின் மேல்.

புனேவில் (RID 3131) உள்ள இரண்டு ரோட்டரி சங்கங்கள் – புனே ஹில்சைட் மற்றும் புனே யுவா – கல்வி, சுகாதாரம் மற்றும் துப்புரவு, நீர் பாதுகாப்பு, விவசாயிகள் மற்றும் பொது சமூகத்தினருக்கான பல சமூக சேவை திட்டங்களை செயல்படுத்தி, இப்போது கிராமப்புற பள்ளிகள் மற்றும் வீடுகளுக்கு சூரிய ஆற்றலை வழங்குவதில் கவனம் செலுத்தி வருகின்றனர். CSR நிதியின் உதவியுடன், புனேவிலிருந்து சுமார் 60 கி.மீ சுற்றளவில் உள்ள 42 கிராமப்புற மற்றும் புறநகர் பள்ளிகளிலும், 300-க்கும் மேற்பட்ட ஏழை மற்றும் பின்தங்கிய குடும்பங்களிலும் சோலார் பேனல்களை நிறுவ இந்தத் திட்டம் உதவியுள்ளது.

ரூ.1.61 கோடிக்கும் அதிகமாக செலவாகும் இந்த திட்டத்திற்கான CSR நிதிகள் எமர்சன் எலக்ட்ரிக் கம்பெனி இந்தியா நிறுவனத்திடமிருந்து வந்துள்ளன. “கடந்த ஆண்டு எங்கள் சங்கங்கள் புனேவிலிருந்து சுமார் 42 கி.மீ தொலைவில் உள்ள ஹத்வே புத்ரூக் கிராமத்திற்காக ஒரு சூரிய ஆற்றல் திட்டத்தை நிறைவு செய்தன, அதன் வெற்றி மற்ற வீடுகளையும் இதேபோன்ற திட்டத்தை கோரத் தூண்டியது. எனவே, நாங்கள் முன்பு மற்ற திட்டங்களுக்காக எங்களுக்கு உதவிய அதே நிறுவனத்தை அணுகி, நாங்கள் மிகவும் லட்சியமான திட்டத்தைத் திட்டமிட்டுள்ளதால், அதிக நிதியை வழங்குமாறு கேட்டோம்,” என்று புனே ஹில்சைட் முன்னாள் தலைவரும், திட்ட இயக்குநருமான டாக்டர் மீனா போரடே கூறுகிறார்.

எமர்சன் நிறுவனத்தின் பெரிய நிதி உதவிக்கு, அந்த நிறுவனத்தின் மூத்த அதிகாரி அபய் பன்சோட் அளித்த ஊக்கமே காரணம் என்று அவர் கூறுகிறார், “அவரது வார்த்தை அந்த அமைப்பில் மிகவும் முக்கியமானது. ஆண்டுதோறும் அவர் ரோட்டரி சேவை திட்டங்களுக்கு பெரிய தொகையைக் கொண்டு வருகிறார், ஆனால் எப்போதும் கண்ணுக்கு தெரியாமல் இருக்கவே விரும்புகிறார்.”

நீர் பாதுகாப்பின் மீதான தனது ஆர்வத்திற்காக புனேயின் ஜல்பரி (நீர் தேவதை) என்ற புனைப்பெயரைப் பெற்ற மீனா, சுற்றுச்சூழல் மீதும் ஆர்வமாக உள்ளார், மேலும் “இந்தியாவின் ஆற்றல் தேவைகளில் கிட்டத்தட்ட 60 சதவீதம் நிலக்கரியை எரிப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது, இது சுற்றுச்சூழலுக்கு ஒரு பேரழிவு” என்ற புள்ளிவிவரத்தால் கவலைப்படுகிறார்.

கூடுதல் நிதிகள் கிடைப்பது கூரை சோலார் திட்டத்திற்கு ஒரு பெரிய ஊக்கத்தை அளித்தது, “இதை நமது நாட்டிற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகத்தின் சுற்றுச்சூழலுக்கு ஒரு பரிசாக நாங்கள் கருதுகிறோம். இந்த விவசாயம் சார்ந்த குடும்பங்களுக்கு மிகவும் உறுதியான மற்றும் தெளிவான நன்மை என்னவென்றால், அவர்களின் மாத மின் கட்டணம், இது சுமார் ரூ. 700 முதல் 800 வரை இருந்தது, இப்போது ரூ.0 ஆக குறைக்கப்பட்டுள்ளது,” என்று அவர் கூறுகிறார். ஆனால் குடும்பங்கள் இன்னும் மீட்டருக்கு மாதந்தோறும் ரூ.120 கட்டணம் செலுத்த வேண்டும்.

இந்த கிராமப்புற வீடுகளில் உள்ள நுகர்வு முறை பற்றி அவர் கூறுகிறார், இந்த கிராமங்களில் உள்ள பெரும்பாலான வீடுகளில் ஒரு சமையலறை மற்றும் ஒரு அறை உள்ளது, எனவே குறைந்தபட்சம் இரண்டு பல்புகள், ஒரு மின்விசிறி, ஒரு சிறிய டிவி, சமையலறைக்கு ஒரு மிக்ஸி, மற்றும் சில வசதியான வீடுகளில் ஒரு சிறிய குளிர்சாதன பெட்டி ஆகியவை இருக்கும். பெரும்பாலான வீடுகள் மாதத்திற்கு 1 கிலோவாட் (KW) பயன்படுத்துகின்றன, மேலும் ரோட்டரி உறுப்பினர்கள் அவர்களின் கூரைகளில் நிறுவியுள்ள சூரிய ஆற்றல் அமைப்பு அவர்களின் ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானது.

ரோட்டரி உறுப்பினர்கள் சோலார் பேனல்களை நிறுவியுள்ள ஜில்லா பரிஷத் பள்ளிகளைப் பற்றி மீனா பேசுகையில், அவர்களின் CSR கூட்டாளர் நிறுவனம் அமைந்துள்ள சாகன் – தலேகான் பகுதியில் உள்ள பள்ளிகளை பயனாளிகளாக தேர்ந்தெடுக்கும் நிபந்தனையின் பேரில் சூரிய ஆற்றல் தீர்வுகளுக்கு நிதி வழங்க ஒப்புக்கொண்டதாக கூறுகிறார்.

இதைச் சொல்வது எளிது, ஆனால் செய்வது கடினம், மேலும் இந்த பள்ளிகளில் சோலார் பேனல்களைப் பொருத்துவதில் ரோட்டரி உறுப்பினர்கள் ஒரு பெரிய சவாலை எதிர்கொண்டனர். “இந்த பள்ளிகளில் பெரும்பாலானவை மோசமான நிலையில் உள்ளன, மேலும் ஒன்று அல்லது இரண்டு வருடங்களாக தங்கள் மின்சார கட்டணங்களை செலுத்தவில்லை, பெரும்பாலும் மானியங்கள் தாமதமாக வருவதால். நாங்கள் இதை சரிசெய்ய, எப்படியாவது பணத்தை கண்டுபிடித்து உங்கள் நிலுவைத் தொகையை தீர்க்க வேண்டும் என்று அவர்களிடம் கூறினோம்.”

பேனல்களை நிறுவுவதற்கு முன்பே, ரோட்டரி உறுப்பினர்களும், விற்பனையாளர்களும் சவால்களை எதிர்கொண்டனர். தனிப்பட்ட மீட்டர்களுடன் MSEDCL (மகாராஷ்டிரா மாநில மின்சார விநியோக நிறுவனம் லிமிடெட்) இணைப்பு கொண்ட பள்ளிகள் மற்றும் வீடுகள் மட்டுமே இந்த திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டன. அவர்களின் சராசரி மின் தேவைகள் சூரிய அமைப்புகளால் உருவாக்கப்படுவதை விட குறைவாக உள்ளன. இந்த நிறுவல்களில் இருந்து, உருவாக்கப்பட்ட சூரிய ஆற்றல் MSEDCL கட்டத்தில் செலுத்தப்படும், மேலும் பள்ளிகளும் குடும்பங்களும் எந்த கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. இந்த சூரிய மின் உற்பத்தி நிலையங்களின் சராசரி ஆயுள் சுமார் 25 ஆண்டுகள், மேலும் ஏதேனும் பராமரிப்பு சிக்கல்கள் இருந்தால், ரோட்டரி உறுப்பினர்கள் உதவ தயாராக இருப்பார்கள்.

மேலும், ஒரு சோலார் நெட் மீட்டருக்கான விண்ணப்பத்தை ஏற்க MSEDCL-க்கு நுகர்வோரின் அனுமதிக்கப்பட்ட மின்சார அளவு – குறைந்தபட்சம் 1 கிலோவாட் (KW) தேவைப்படுகிறது. “பல சிறிய பள்ளிகளில் 0.2, 0.3, அல்லது 0.6 கிலோவாட் (KW) அனுமதிக்கப்பட்ட மின்சார அளவு இருந்தது. எனவே அவர்கள் முதலில் MSEDCL போர்ட்டலில் அதிகரித்த மின்சார அளவிற்காக விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. இது முடிந்ததும், மாற்றம் பிரதிபலிக்க 2–3 பில்லிங் சுழற்சிகள் ஆனது. ஆனால் இந்த கடினமான பணியில், எங்கள் ரோட்டரி

நண்பர்களின் தொடர்பு திறன்கள் உதவியது,” என்று திட்டத்தின் மற்றொரு தூணான அதிதி ரஹானே கூறுகிறார்.

பள்ளிகளின் மின்சார தேவைகள் குறித்து, மீனாட்சி கூறுகையில், ஜில்லா பரிஷத் பள்ளிகள் பெரியது முதல் சிறியது வரை அளவு வேறுபடுகின்றன. இதன் பொருள் சில பள்ளிகளுக்கு 14–15 கிலோவாட் வரை தேவைப்படுகிறது, அதேசமயம் சிறிய பள்ளிகளுக்கு 1–3 கிலோவாட் மட்டுமே தேவைப்பட்டது. தங்கள் நிதியை திறம்பட பயன்படுத்தி, அதிக பள்ளிகளுக்கு உதவ, ரோட்டரி உறுப்பினர்கள் தங்கள் அணுகுமுறையை கவனமாக சமநிலைப்படுத்த வேண்டியிருந்தது. அவர்கள் அதிக எண்ணிக்கையிலான சிறிய பள்ளிகளில் சூரிய அமைப்புகளை நிறுவ தேர்வு செய்தனர், இதன் மூலம் கிடைக்கும் பணம் மேலும் பலருக்கு சென்றடைந்தது.

கூரை மீது பொருத்தப்பட்ட சோலார் பேனல்கள் மற்றும் ஸ்டாண்டுகள் தவிர, உற்பத்தி மீட்டர்/நெட் மீட்டர்கள் மற்றும் மின்னல் பாதுகாப்பு கம்பிகள் பொருத்தப்பட்டன, மேலும் எர்திங் செய்யப்பட்டது.

இந்த திட்டத்தை மூன்று மாதங்களில் நிறைவு செய்ததில் ரோட்டரி உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைந்தனர். இப்போது வரும் ஆண்டிற்காக, திட்டத் தலைவர்கள் மேலும் 250 வீடுகளுக்கு சூரிய மின்மயமாக்கலை மேற்கொள்ள விரும்புகின்றனர், ஏனெனில் பிராந்தியத்தில் உள்ள கிராமப்புற குடியிருப்புகள் அவர்களுக்கும் சூரிய ஆற்றலை வழங்குமாறு கோருகின்றன.

இந்த கூடுதல் நிதி கடமையை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது குறித்தும் அவர்களிடம் ஒரு திட்டம் உள்ளது. வீடுகளுக்கான சூரிய அமைப்புகளுக்கு ஒவ்வொன்றிற்கும் சுமார் ரூ.70,000 செலவாகிறது, இதற்காக PM சூர்யாகர் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.30,000 மத்திய அரசு மானியம் கிடைக்கிறது. ஆனால் இந்த பணம், சூரிய அமைப்புகள் நிறுவப்பட்ட பிறகு தான் வழங்கப்படும். “எனவே நாங்கள் குடும்பங்களிடம், அனைத்து செலவுகளையும் நாங்கள் செய்வதால், மானியப் பணம் எங்களுக்கு சொந்தமானது, உங்களுக்கல்ல, மேலும் இது ஒரு நன்கொடையாக எங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், இதனால் மேலும் பல மக்கள் பயனடைய முடியும் என்று கூறினோம்.” அதை வாங்க முடிந்தவர்கள் முன் கூட்டியே செலுத்தினர், முடியாதவர்களுக்கு நம்பிக்கையின் பேரில் கடன் வழங்கப்பட்டது. “மானியத் தொகையை முன் கூட்டியே செலுத்த முடியாதவர்கள் உண்மையிலேயே எங்கள் உதவிக்கு தகுதியானவர்கள் என்பதை நாங்கள் உணர்ந்தோம், எனவே நாங்கள் உங்களை முழுமையாக நம்புகிறோம், சோலார் அமைப்புகளை நிறுவுவோம், ஆனால் நீங்கள் மானியத்தைப் பெற்றவுடன் தயவுசெய்து எங்கள் நம்பிக்கையை துரோகம் செய்து எங்களை ஏமாற்றாதீர்கள் என்று அவர்களிடம் கூறினோம்.”

‘கடன்’ பெற்றவர்கள், மானியத்தைப் பெற்றவுடன் செலுத்தினார்களா என்பதை அறிய நான் ஆர்வமாக இருந்தேன். ரோட்டரி உறுப்பினர் பிரகாசமாக கூறுகிறார்: “இந்த மக்கள் எவ்வளவு நேர்மையானவர்கள் என்பதை நீங்கள் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்; அவர்கள் அனைவரும் முழு தொகையையும் செலுத்திவிட்டனர். இந்த மக்கள் இந்த கிராமங்களில் நெருக்கமாக பிணைக்கப்பட்ட சமூகத்தில் வாழ்கின்றனர், இந்த கிராமங்கள் உண்மையில் சிறியவை, எனவே யாராவது பணம் செலுத்த தவறினால், கிராமம் முழுவதும் கிசுகிசுப்பு பரவிவிடும், மேலும் அவர்கள் நன்றியற்ற அல்லது நேர்மையற்ற நபர்களாக பார்க்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை.”

இந்த சேவை திட்டங்களை செயல்படுத்தும் ரோட்டரி அறக்கட்டளைக்கு மீண்டும் வரும் மானியப் பணத்துடன், கூடுதலாக 250 வீடுகளில் சூரிய அமைப்பு நிறுவப்படும். இது நிறுவனங்கள் ரோட்டரியுடன் இணைந்து பணியாற்ற முக்கிய காரணங்களில் ஒன்றாகும் என்று மீனா பெருமையுடன் விளக்குகிறார். ரோட்டரி ஒரு புகழ்பெற்ற உலகளாவிய அமைப்பு மட்டுமல்ல, அதன் உறுப்பினர்கள் வெவ்வேறு தொழில்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் பல்வேறு நிபுணத்துவத்தைக் கொண்டுள்ளனர், அதை அவர்கள் இலவசமாக வழங்க தயாராக உள்ளனர், ஏதேனும் பற்றாக்குறை இருந்தால் தங்கள் சொந்த பணத்தையும் செலவிடுகின்றனர்

நிர்வாக செலவுகள் எதுவும் இல்லை, மேலும் நிபுணத்துவ மற்றும் தன்னார்வ நேரங்கள் ரோட்டரி உறுப்பினர்களால் பங்களிக்கப்படுகின்றன, அவர்கள் சிறந்த விலைக்காக விற்பனையாளர்களுடன் ஒருங்கிணைக்கிறார்கள், நிறுவப்பட்ட




*மகாத்மா காந்தி பள்ளியில் சூரிய சக்தி தகடு நிறுவலில் RC ராஜ்குருநகர் தலைவர் ராஜன் ஜம்பலே மற்றும் அதன் உறுப்பினர்களுடன் பன்சோத் மற்றும் மீனா.*



*புனே அருகே உள்ள ஹட்வே புத்ருக் கிராமத்தில் ரோட்டேரியன்கள் மற்றும் கிராம மக்களுடன் மீனா.*

அமைப்புகளின் சரியான இறுதி பயன்பாட்டை உன்னிப்பாக கண் காணிக்கிறார்கள், அமைப்புகளால் உருவாக்கப்பட்ட மின்சாரம் குறித்த தகவல்களை சமர்ப்பிக்கிறார்கள், மேலும் பராமரிப்பு/சிறிய பழுதுபார்ப்பு களுக்கு உதவுகிறார்கள் என அதிதி ரஹானே விளக்குகிறார். CSR நிதிகளை வழங்குவதற்கு சரியான கணக்குகள் மற்றும் பிற விவரங்களை சரியான நேரத்தில் சமர்ப்பிக்க வேண்டும், மேலும் இது அரசாங்க அமைப்புகள் மற்றும் கிராமவாசிகளுடன் தொடர்புடையதால் சில சமயங்களில் கடினமாக இருந்தாலும், இது உன்னிப்பாக செய்யப்பட்டது. இல்லையெனில், நிறுவனங்களுடன் கூட்டாண்மை நீடிக்காது என்றார்.

பயனாளி பள்ளிகளை அடையாளம் காணுதல் மற்றும் பிற தொடர்பு பணிகளில், சாகன், ராஜகுருநகர் மற்றும் தலேகான் தபாடே போன்ற உள்ளூர் சங்கங்களைச் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர்களிடமிருந்து இந்த திட்டத்திற்கு உதவி கிடைத்தது. அவர்கள் அரசாங்கத்தால் அல்லது புகழ்பெற்ற அறக்கட்டளைகளால் நடத்தப்படும் அனைத்து பள்ளிகளுக்கும் நேரடியாக சென்று வகுப்புகள், மாணவர்கள், தரங்கள் போன்ற விவரங்கள் குறித்த விரிவான அறிக்கைகளை சமர்ப்பித்தனர். உடல் அல்லது மனநலம் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சேவை செய்யும், மற்றும் நர்சிங் போன்ற தொழில்முறை படிப்புகளை வழங்கும் சில பள்ளிகளும் இதில் சேர்க்கப்பட்டன.

50 வீடுகளுக்கான ஆரம்ப திட்டம், சமூக மற்றும் ஊடக கவனத்தால் மிகவும் பெரியதாக வளர்ந்து தொடர்ந்து விரிவடைந்து வருகிறது, மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பல வீடுகளில் பணி தொடர்கிறது என்பதில் மீனாட்சி மகிழ்ச்சியடைகிறார். “மின்சார கட்டணங்களை செலுத்துவதிலிருந்து சேமிக்கப்பட்ட பணத்தை, பயனாளி பள்ளிகள் சிறந்த கல்வி உள்கட்டமைப்பை வழங்க பயன்படுத்த முடியும், மேலும் குடும்பங்கள் சேமிக்கப் பட்ட பணத்தை தங்கள் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் கல்விக்காக பயன்படுத்த முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.”

இது மாநிலத்தின் மின் கட்டத்தின் மேம்பட்ட நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பு, ஆற்றல் உற்பத்தியிலிருந்து கார்பன் உமிழ்வு மற்றும் காற்று மாசுபாட்டை குறைத்தல், மற்றும் கிராமப்புற பள்ளிகளுக்கு சுத்தமான ஆற்றல் அணுகலை விரிவுபடுத்துதல் ஆகியவற்றிற்கும் வழிவகுக்கும் என்று அவர் மேலும் கூறுகிறார். அவர்களுக்கு வழங்கப்பட்ட பணம் “உண்மையான திட்டத்திற்காக முழுமையாக செல விடப்பட்டது, மேலும் தளங்களுக்குச் செல்ல எந்த மேல்நிலை செலவு களும் அல்லது போக்குவரத்து செலவுகளும் மானியத்திலிருந்து எடுக்கப்பட வில்லை என்பதில் CSR கூட்டாளர் மகிழ்ச்சியடைகிறார்கள்.”

அஸ்வினி பன்சோட் மற்றும் அபய் பன்சோட் ஆகியோர் இந்த திட்டத்தின் மற்ற இரண்டு தூண்கள், இத்திட்டம் தற்போது செயல்பாட்டில் உள்ளது மற்றும் FY25-26 இல் தொடரும், அதன் முடிவில் ஒரு தணிக்கை செய்யப்பட்ட பயன்பாட்டு அறிக்கை நிறுவனத்திடம் வழங்கப்படும்.

இந்த ரோட்டரி உறுப்பினர்கள் அடுத்து மேற்கொள்ள திட்டமிட்டுள்ள பெரிய திட்டம் “முறையான குப்பை அகற்றுதல்; நீங்கள் புனே நகரத்திற்கு ஒரு மைல் வெளியே சென்று, சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களுக்குள் சென்றால், எந்தவிதமான குப்பை அகற்றும் அமைப்பும் இல்லை என்பதை காணலாம். இதிலும் வரும் நாட்களில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த நாங்கள் நம்புகிறோம்,” என்று மீனா மேலும் கூறுகிறார். ■

# பில் கேட்ஸுடன் ஒரு நேர்காணல்

டயனா ஷோபெர்க்

*தனது அறக்கட்டளையை மூடத் தொடங்கும் முன் பில் கேட்ஸ், மிகப் பெரிய திட்டங்களை செய்கிறார்.*

மே மாதத்தில் பில்கேட்ஸ் தனக்குத்தானே புதிய சவால்களையும், கடுமையான கெடுவையும் விதித்துக்கொள்கிறார். அடுத்த 20 ஆண்டுகளில் தனது அனைத்து செல்வங்களையும் விட்டுக் கொடுப்பது மற்றும் நீண்டநாளாகச் செயல்பட்டுவந்த அறக்கட்டளையை மூடிவிடுவது எனவும் முடிவு செய்கிறார். உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சியில் ரோட்டரியின் முக்கிய கூட்டாளிகளில் ஒன்றான கேட்ஸ் அறக்கட்டளை அதன் முதல் 25 ஆண்டுகளில் 100 பில்லியன் டாலர்களை வழங்கியுள்ளது. ஆனால், அறக்கட்டளையை முழுமையாக மூடுவதற்கு முன், 2045 டிசம்பர் 31-க்குள் அதைவிட இரண்டு மடங்கு பணத்தைச் செலவிடவேண்டும்.

போலியோ ஒரு முன்னுரிமையாகவே உள்ளது. அல்பெர்டாவில், கால்கரியில் நடைபெற்ற ரோட்டரி சர்வதேச மாநாட்டில் (2025) ரோட்டரி மற்றும் கேட்ஸ் அறக்கட்டளை அடுத்த மூன்று ஆண்டுகளில் போலியோ ஒழிப்பை ஆதரிக்க 460 மில்லியன் டாலர் நிதி திரட்ட உறுதியேற்றன. இது அவர்களின் நீண்டகால கூட்டாண்மையின் புதுப்பிப்பாகும். ரோட்டரி தொடர்ந்து ஆண்டுக்கு 50 மில்லியன் டாலர் நிதி திரட்டும். ரோட்டரி ஒரு டாலர் நிதி திரட்டினால் கேட்ஸ் அறக்கட்டளை அதற்கு ஈடாக இரண்டு பங்கு டாலர்களை திரட்டும்.

அவரது முடிவைப் பற்றி மேலும் அறியவும், அறக்கட்டளையின் பாரம்பரியத்தை அவர் எப்படி மதிப்பிடுகிறார் மற்றும் எதிர்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதைத் தெரிந்துகொள்ளவும், இந்த மாதம் 70-வது வயதை எட்டும் கேட்ஸிடம், பத்திரிகை சில கேள்விகளை முன்வைத்தது. அதற்கு அவர் அனுப்பிய பதில்கள்:

**கேட்ஸ் அறக்கட்டளையின் 25-வது ஆண்டில் நீங்கள் எதைப் பற்றி அதிகம் பெருமைப்படுகிறீர்கள்?**

கடந்த 25 ஆண்டு களில் நாங்கள் நினைத்ததை விட அதிக பங்களிப்புச் செய்து அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை பார்த்துள்ளோம்.

உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சி மட்டுமல்ல, எய்ட்ஸ் நோய், காசநோய், மலேரியாவை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச நிதியம் மற்றும் தடுப்பூசி கூட்டாளியான GAVI ஆகியோருடன் இணைந்து பல உயிர்களைக் காப்பாற்ற பங்களிப்புச் செய்திருக்கிறோம் என்பதில் பெருமைப்படுகிறேன். உயிர்காக்கும் மருந்துகள், தடுப்பூசிகள், சிகிச்சைகள், கொசுவலைகள் மற்றும் நோயறிதலுக்கான விலைகள்-கட்டணங்கள் கணிசமாக குறைந்துள்ளன.




Illustration by Uli Knörzer

தாக்கங்கள் பிரமிக்கவைக்கின்றன: இதுவரை இந்த கூட்டாண்மை மூலம் பலன் 1.1 பில்லியன் குழந்தைகளைச் சென்றடைந்துள்ளது. உயிர்காக்கும் தடுப்பூசிகள் போடப்பட்டதால் குழந்தைகள் இறப்பு விகிதம் பாதியாக குறைந்துள்ளது. மேலும் 80 மில்லியன் குழந்தைகள் காப்பாற்றப்பட்டுள்ளன. லட்சக்கணக்கான மக்கள் வறுமையிலிருந்து மீண்டு சிறப்பான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

**அடுத்த 20 ஆண்டுகளில் கேட்ஸ் அறக்கட்டளை நிதி என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?**

நான் விவரித்த முன்னேறங்கள் இருக்கின்ற போதிலும் எங்கள் அறக்கட்டளையின் வரலாற்றில் சில கடினமான எதிர்ப்புகளைக் காண்கிறோம். சர்வதேச மேம்பாட்டு நிதிக்கான பங்களிப்பை நாடுகள் குறைத்துக் கொண்டு வருகின்றன. அதன் விளைவுகள் ஆபத்தானவை. இந்த நூற்றாண்டில் முதல் முறையாக இந்த ஆண்டு உலகெங்கிலும் உள்ள குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைவதற்கு பதிலாக அதிகரித்துள்ளது. இது நினைத்துப் பார்க்கமுடியாத துயரமாகும்.

இதுபோன்ற ஆபத்துகளை எதிர்த்துப் போராடவும் முன்னேற்றப் பாதைக்கு மீண்டும் திரும்பவும் ரோட்டேரியன்களைப் போன்ற முன்னேற்றத்தில் உறுதியாக இருப்பவர்கள்தான் நமக்குத் தேவை.

எங்கள் பகுதியில் நாங்கள் அடுத்த 20 ஆண்டுகளில் அவசர பிரச்னைகளுக்கு தீர்வுகாணவும், உயிர்களை காக்கவும், வாழ்க்கை தரத்தை உயர்த்தவுமான பணிகளை துரிதப்படுத்த விரும்புகிறோம். தாக்கத்தை ஏற்படுத்தும் விஷயங்களில் கவனம் செலுத்த விரும்புகிறோம். 1. குழந்தைகளின் இறப்பை குறைத்தல், தொற்றுநோய் வராமல் தடுத்தல் அல்லது ஒழித்தல், 3. லட்சக்கணக்கான மக்களை வறுமையிலிருந்து மீட்டு வளமாக வாழ வழிகாட்டுதல். அறிவியல் அறிஞர்கள், சுகாதார ஊழியர்கள், கல்வியாளர்கள் மற்றும் விவசாயிகளின் இடைவிடாத உழைப்பின் பலனாக பல நன்மைகளை நாம் அடைந்துள்ளோம். அவர்கள் ஒருபோதும் தங்கள் பணியை கைவிடமாட்டார்கள். அதுபோல் நாங்களும் கைவிடமாட்டோம்.

**நிலைத்தன்மையை எவ்வாறு உறுதிசெய்வது?**

கேட்ஸ் அறக்கட்டளையின் குறிக்கோள் எப்போதும் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதுதான், அவற்றை நிரந்தரமாக நிர்வகிப்பது அல்ல. அதாவது சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை அவர்களே எதிர்கொள்ளும் வகையில் திறனை வளர்த்துக் கொள்ள உதவுவதுதான். அடுத்த 20 ஆண்டுகளுக்கு அதுவே எங்களின் முன்னுரிமையாக இருக்கும்.

புதிய கண்டுபிடிப்புகள் தொடர்ந்து இந்த சமூகத்தினர் தங்கள் ஆரோக்கியத்திலும் செழிப்பிலும் முதலீடு செய்வதற்கு முன்பைவிட சிறந்த கருவியாக விளங்கும். எனவே சவால்கள் இருந்தபோதிலும் நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். கடந்துபோன 25 ஆண்டுகள் வரலாற்றில் மனித முன்னேற்றத்தின் மிகப்பெரிய காலக்கட்டங்களில் ஒன்றாகும். அடுத்த 20 ஆண்டுகள் அதைவிட மாற்றத்தை எங்களால் உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன்.

**போலியோவை முற்றிலுமாக ஒழிக்க முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்கள்?**

உலகளாவிய போலியோ ஒழிப்புத் திட்டம் போலியோவை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வரும் என்று எப்போதும் போலவே நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

சில சவால்கள் இருந்தபோதிலும், புதுமை, முன்னணி பணியாளர்கள் மற்றும் சர்வதேச உறுதிப்பாடு இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்கிறது. அடுத்த தலைமுறை போலியோ தடுப்பூசி, nOPV2, இது பரவாமல் தடுக்க உதவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள சமூகங்களில் உள்ள குழந்தைகளை பக்கவாதத்திலிருந்து பாதுகாக்கிறது. இந்த ஆண்டு ஜூலை வரை 1.6 பில்லியன் டோஸ் சொட்டு மருந்து போடப்பட்டுள்ளன. குழந்தைகளைப் பாதுகாக்கும் இந்த தடுப்பூசி எங்களிடம் போதுமான அளவு உள்ளது.

போலியோ நோயின் தாக்குதல் தீவிரமாக இருக்கும் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் உதவியுடன் தடைகள் சமாளிக்கப்பட்டு, எல்லை தாண்டிய ஒருங்கிணைப்பை மேம்படுத்தி, சமூகத்தினரிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

போலியோ நோய் தாக்குதல் சமீபத்தில் அதிகரித்தாலும், போலியோ தடுப்பில் ஏற்பட்டுள்ள பரந்த முனேற்றத்தை நாம் மறந்துவிடக்கூடாது. சர்வதேச போலியோ ஒழிப்புக்கான முன் முயற்சிகள் உலகில் உள்ள நாடுகளில் அதன் தீவிரமாக பரவுவதை தடுத்து நிறுத்திவிட்டது. போலியோ நோயாளிகளின் எண்ணிக்கை 99 சதவீதம் குறைந்துவிட்டது. தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் ரோட்டரி உள்ளிட்டோரின் ஒத்துழைப்புடன் போலியோவை முற்றிலும் ஒழித்துவிட முடியும் என்று நான் நம்புகிறேன்.

**தற்போதுள்ள அரசியல், பொருளாதார சூழலில் உங்கள் அறக்கட்டளையின் செயல்திட்டம் என்ன?**

உலகில் மிக சிக்கலான சூழல்களில் கூட போலியோ ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட வரலாறுகள் உண்டு. தடுப்பூசி போடுவதிலும், போலியோ ஒழிப்பில் கவனம் செலுத்து வதிலும் நாங்கள் அரசாங்கங்கள் மற்றும் சமூகத்தினரிடம் இணைந்து செயல்படுகிறோம்.

உதாரணமாக பாகிஸ்தானை எடுத்துக் கொள்ளுங்கள். மோதல்கள் நிறைந்த பகுதிகளில் பாதுகாப்பு படையினர் எங்களுக்கு சில நேரங்களில் ஆதரவளித்தனர். அதனால் தடுப்பூசி போடும் பணியை நாங்கள் பாதுகாப்பாக நிறைவேற்ற முடிந்தது. ஆனால், கைபர் பக்டூன்குவா மாகாணங்களில் மோதல்கள் அதிகரித்து இருந்ததால், பாதுகாப்பு படையினர் இருந்தாலும், பாதுகாப்பாக தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியுமா என்கிற அச்சம் குடும்பத்தினரிடம் இருந்தது. எனவே உள்ளூரில்

செல்வாக்கு பெற்றவர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்பவர்களை பாதுகாத்தனர். இந்த அணுகுமுறை சிறப்பாக வேலை செய்தது. இதன் மூலம் 80 சதவீத குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டதாக சொல்லப்பட்டாலும், தனிப்பட்ட முறையில் இதை கண்காணித்தால்தான் இந்த முடிவுகளை நம்பமுடியும்.

இன்று அரசியல் மற்றும் நிதி நெருக்கடிகளுக்கு இடையில் சுகாதார நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது பெரும் சவாலாகவே உள்ளது. சில பெரு நன்கொடையாளர்கள் சர்வதேச சுகாதாரத் திட்டங்களுக்கு வழங்கும் நிதியை குறைத்துவிட்டனர். அதேநேரத்தில், புதிய நன்கொடை யாளர்களும் பங்களிப்புச் செய்ய முன்வந்துள்ளனர். இந்த சமயத்தில் அவர்களின் உதவி தேவையானதுதான். எங்களால் முடிந்த அளவு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறோம். போலியோவை முற்றிலும் ஒழிக்க எந்தப் பகுதியில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்பதை அலசி ஆராய்ந்து அங்கு நிதி மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்துவோம்.



Gates Foundation

*ஜூன் மாதம், பில் கேட்ஸ் நைஜீரிய ஜனாதிபதியிடமிருந்து பெற்ற விருதை அயூபா குஃப்வானுக்கு அர்ப்பணித்தார். 5 வயதில் போலியோவால் முடங்கிப்போன குஃப்வான், நைஜீரியாவின் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய ஆணையத்தின் நிர்வாகச் செயலாளராகவும், நைஜீரியாவிற்கான சக்கர நாற்காலிகளின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றுகிறார்.*

### போலியோ ஒழிப்பு பணியில் நீங்கள் கற்றுக்கொண்ட மிகப் பெரிய பாடம் என்ன?

முன்னேற்றம் என்பது இடைவிடாத ஒத்துழைப்பை பொறுத்தது. போலியோ ஊழியர்கள், அரசு அதிகாரிகள், கூட்டாளிகள் மற்றும் நன்கொடையாளர்கள், ரோட்டரி உள்பட அனைவரும் ஒன்றிணைந்து உயிர்காக்கும் தடுப்பூசிகளுடன் குழந்தைகளைச் சென்றடையும்போது மட்டுமே வெற்றி சாத்தியமாகும்.

சமீபத்தில் மடகாஸ்கரில் மாறுபட்ட வகையிலான போலியோ நோய் பரவியபோது இந்த வகையான ஒத்துழைப்பின் சக்தியை நாங்கள் பார்த்தோம். நோய் பரவலைத் தடுக்க அரசாங்கம் வலுவான அரசியல் தலைமையுடன் வந்தது. சமூக கூட்டாளிகள் தடுப்பூசி பிரசாரத்தை வலுப்படுத்த செயலாற்றினர். மேலும் யுனிசெப் மற்றும் உலக சுகாதார அமைப்பும் எங்களது முயற்சிக்கு ஆதரவாக நின்றன. நாட்டின் தொலைதூரப் பகுதிகளிலும், தனித்துவிடப்பட்ட பகுதிகளிலும் உள்ள குழந்தைகளுக்கு தடுப்பூசி போட்டு பாதுகாக்க அனைவரும் ஒன்றாக உழைத்தனர். இவற்றின் மூலம் போலியோ நோய் பரவாமல் தடுப்பதில் வெற்றிபெற்றனர்.

எங்கெல்லாம் போலியோ நோய் பரவுகிறதோ அங்கெல்லாம் அதை ஒழிப்பதற்கு இதுபோன்ற கூட்டு முயற்சிகள் தேவை. முன்னுரிமை அடிப்படையில் போலியோவை ஒழிக்க ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சித் தலைவர்களின் பங்கு மிக முக்கியமானது.

### ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் இப்போதைய நிலை என்ன?

புதுமையான கண்டுபிடிப்புகளில் நிலையான முதலீடு எப்போதும் முக்கியமானது. நான் குறிப்பிட்டது போலவே, nOPV2 ஏற்கெனவே நோய் பரவலைத் தடுக்க உதவி வருகிறது. போலியோவில் மாறுப்பட்ட வகைகள் இருப்பதால் வருங்கால தலைமுறையினரைப் பாதுகாக்க மரபணு ரீதியாக நிலையான தடுப்பூசிகளை உருவாக்க நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்து வருகிறோம். இந்த முன்னேற்றங்கள் நோய் பரவலை வேகமாக தடுக்கவும் அதிக குழந்தைகளை துல்லியமாக பாதுகாக்கவும் உதவுகின்றன.

ஹெக்ஸாவலன்ட் தடுப்பூசி ஆறு நோய்களுக்கு எதிராக ஒரே தடுப்பூசியாக இணைந்து குழந்தைகளை பாதுகாக்கிறது. இந்த தடுப்பூசியை குழந்தைகளுக்கு போட்டால் தொண்டை அழற்சி நோய், கக்குவான் இருமல், ரண ஜன்னி, ஹெமோபிலஸ் இன்ஃப்ளூயன்சா டைப் B (ஒருவித மூளைக்காய்ச்சல் நோய்) மற்றும் ஹெபடைடிஸ் B மற்றும் போலியோ உள்ளிட்ட நோய் வராமல் தடுக்க முடியும். இது நோய்த்தடுப்பு அட்டவணைகளை எளிதாக்குகிறது.

மேலும் குழந்தைகளுக்கு ஆரம்பகால பாதுகாப்பை பலப்படுத்துகிறது. குறிப்பாக மருத்துவ வசதிகள் குறைவாக உள்ள இடங்களில் பயன்தரவல்லது. உண்மையில், ஜூலை மாதத்தில், தடுப்பூசி கூட்டாளர்களான Gavi ஆதரவுடன் இந்த தடுப்பூசியை செனகல் மற்றும் மார்தானியா ஆகிய நாடுகள் முதல் முறையாக அறிமுகப்படுத்தியுள்ளன.

**கேட்ஸ் அறக்கட்டளையின் கூட்டாளியாக ரோட்டரியை ஏன் நீங்கள் தேர்வு செய்தீர்கள்?**

போலியோ இல்லாத உலகத்தை கற்பனை செய்த முதல் அமைப்பு ரோட்டரிதான். மேலும் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இந்த உலகளாவிய முயற்சியை முன்னெடுப்பதில் உறுப்பினர்களின் தலைமை அவசியம்.

GPEI-ன் நிறுவனக் கூட்டாளியாக, 1985 முதல் நூற்றுக்கணக்கான நாடுகளில் கிட்டத்தட்ட 3 பில்லியன் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு ரோட்டரி உதவியுள்ளது. ரோட்டரி உறுப்பினர்கள் கணிசமாக நிதிப் பங்களிப்புச் செய்ததுடன், தங்களது நேரத்தையும் செலவிட்டுள்ளனர். மேலும் போலியோ ஒழிப்பு முயற்சிகளுக்கு அரசிடமிருந்து நிதி ஆதரவு பெறவும் அவர்கள் உதவியுள்ளனர். அவர்களின் உலகளாவிய தொடர்பு, இந்தியா முதல், பிலிப்பைன்ஸ் முதல் உக்ரைன் வரை கடினமான சூழல்களில் தடுப்பூசிகளை வழங்க சமூகங்களை ஈடுபடுத்தவும் அனுமதிக்கிறது.

ரோட்டரியின் தலைமை இருப்பதன் காரணமாகவே குடும்பங்கள் மீண்டும் இந்த நோயைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்பதாலேயே நாங்கள் முன்எப்போதையும்விட அதிக நெருக்கம் காட்டி வருகிறோம்.

**2:1 நிதி கொடுக்கும் திட்டத்தை ஏன் நீங்கள் நீட்டிக்கிறீர்கள்?**

நாங்கள் ஒன்றாக அடுத்த மூன்று ஆண்டுகளில் புதிதாக 450 மில்லியன் டாலர் நிதி திரட்ட முடியும் என்று நம்புகிறோம். இந்த நிதிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடுப்பூசி போடவும், நோய் பரவாமல் தடுக்கவும், சமூகத்தை ஈடுபடுத்தவும், போலியோ ஒழிப்புத் திட்டங்களை செயல்படுத்தவும் பராமரிக்கவும் பயன்படுத்தப்படும்.

இந்த நீட்டிப்பு முக்கியமான நேரத்தில் வந்துள்ளது. கடந்த ஆண்டு பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் போலியோ நோய் தாக்கம் அதிகரித்துவந்ததைக் கண்டோம். முன்னர் போலியோ இல்லாத இடங்களில் போலியோ கண்டறியப்பட்டது எங்கு வேண்டுமானாலும் போலியோவின் அச்சுறுத்தல் இருக்கலாம் என்பதை நினைவுபடுத்தியது. ஒட்டுமொத்தம் நோய் பரவல் குறைவாக இருந்தாலும் நமது கடின உழைப்பால் ஏற்பட்ட முன்னேற்றத்துக்கு ஆபத்து வந்துள்ளது. சர்வதேச நிதியுதவியில் தொய்வு, தடுப்பூசி பற்றிய தவறான தகவல்கள், பெருகிவரும் மோதல்கள் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலை ஆகியவை போலியோவின் தொடர்ச்சியான பரவலுக்கு பங்களிப்புச் செய்கின்றன.

ரோட்டரியுடன் எங்கள் கூட்டாண்மையைத் தொடர்வது, இந்த சவால்களை சந்திக்கவும், உலகில் உள்ள குழந்தைகளுக்கு உயிர்காக்கும் தடுப்பூசிகள் சென்று சேர்வதையும் அனுமதிக்கிறது.

போலியோ தொடர்பான பணிகளை முடிப்பது மிகவும் முக்கியமானது. இன்றைய குழந்தைகளுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் தொடர்ச்சியான ஆபத்தை ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கான ஒரே வழி போலியோவை ஒழிப்பதுதான்.

**உங்கள் தந்தையின் யோசனையில் உருவான மலேரியா ஒழிப்பு திட்டத்தின் நிலை என்ன?**

சமீபத்திய தசாப்தங்களில் மலேரியாவுக்கு எதிராக நாம் அடைந்த முன்னேற்றத்துக்கு ரோட்டேரியன்களுடனான நீண்டகால கூட்டாண்மை முக்கியமானது. இருந்தபோதிலும் செயல்திட்டங்களில் மாற்றம் மற்றும் நிதியுதவிகளின் நிச்சயமற்ற தன்மை காரணமாக முன்னேற்றத்தில் தடையேற்படுகிறது.

கடந்த 25 ஆண்டுகளில் 2.2 பில்லியன் பேர் மலேரியா நோய் பாதிக்காமலும், 12.7 மில்லியன் இறப்புகள் ஏற்படாமலும் தடுக்கப்பட்டுள்ளன. புதிய கண்டுபிடிப்புகள், தாராள நிதியுதவி மற்றும் அரசியல் உறுதிப்பாடு ஆகியவைதான் இதற்கு காரணம். மலேரியாவை ஒழிக்க வேண்டும் என்பது நமது கண்ணோட்டமாக இருந்தாலும், அதை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கான வழிகள் வலுவாக இல்லை.

சமூக சுகாதார ஊழியர்களின் வலைப்பின்னலை ஏற்படுத்த ரோட்டரியின் செயல்பாடுகள் அவசியமானது. அவர்களால்தான் இவற்றை மக்களிடம் கொண்டு செல்ல முடியும். ஆரோக்கியமான சமூகங்களின் சவால்கள் மூலம், ரோட்டரி, காங்கோ குடியரசு, மொஸாம்பிக், நைஜீரியா மற்றும் ஜாம்பியாவில் உள்ள ஆயிரக்கணக்கான சமூக சுகாதார ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க ரோட்டரி உதவுகிறது. அதன் மூலம் அவர்கள் தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மலேரியா, நிமோனியா மற்றும் வயிற்றுப்போக்கு நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கின்றனர். இந்த சமூக சுகாதார ஊழியர்கள், தங்கள் சமூகத்தினரை வேறு யாராலும் அறிய முடியாத வகையில் அறிவார்கள். கடினமான இடங்களில்கூட மலேரியாவை ஒழிப்பு நடவடிக்கையில் அவர்கள் வல்லவர்கள். சுகாதாரச் சவால்களை எதிர்கொள்ளும் திறன்பெற்றவர்கள்.

**AI (செயற்கை நுண்ணறிவு) வளர்ச்சியில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?**

உலகில் கடினமான சவால்களுக்கு தீர்வுகாணும் திறன் செயற்கை நுண்ணறிவுக்கு உள்ளது. சமூக சுகாதார ஊழியர்கள், விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட முன்களப் பணியாளர்களுக்கு AI உதவக்கூடும். அவர்கள் திறமையாகவும் வலுவாகவும் மக்களைச் சென்றடைய செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துகிறார்கள்.

சர்வதேச சுகாதார பாதுகாப்பில், AI பயன்பாடு சுகாதார பராமரிப்பு நடைமுறைகள் மீதான அழுத்தத்தை கணிசமாக குறைக்கும். முன்களப் பணியாளர்கள் பிரச்னைகளை கண்டறியவும், சரியான பராமரிப்பை வழங்கவும் உதவும். ஊரகப்



Getty Images

*இந்த செப்டம்பர் 2000 புகைப்படம், இந்தியாவில் ஒரு குழந்தைக்கு கேட்ஸ் போலியோ தடுப்பூசி போடுவதைப் படம்பிடித்துள்ளது.*

பகுதியில் உள்ள மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர், செயற்கை நுண்ணறிவு மூலம் நோயாளியின் நோய் அறிகுறியை பகுப்பாய்வு செய்ய முடியும். நோய் முற்றி ஆபத்தான நிலையில் இருப்பவர்களை கண்டறிய முடியும். மேலும் நோய் என்ன என்பதை துல்லியமாக கணித்து அதற்கான சிகிச்சை முறையை பரிந்துரைக்க முடியும். மேலும் சிகிச்சைக்கான இடைவெளியை குறைத்து ஒருவரை குறுகிய காலத்திலேயே காப்பாற்ற முடியும்.

இது ஒரு ஆரம்பம் மட்டுமே. விவசாயத்தில் உற்பத்தியை அதிகரிக்க சிறிய விவசாயிகளுக்கு AI ஆலோசனை வழங்குகிறது. வகுப்பறைகளில் செயற்கை நுண்ணறிவு கருவிகள் மூலம் ஆசிரியர்கள் பாடம் நடத்தவும், மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும் முடியும்.

உலகம் தொடர்ந்து சமத்துவம் மற்றும் அணுகலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தால் வளர்ச்சிக்கு AI சக்திவாய்ந்த கருவியாக இருக்க முடியும். – வாய்ப்பை விரிவுபடுத்துதல், சமத்துவமின்மையை குறைத்தல் மற்றும் லட்சக்கணக்கானவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல் ஆகியவை.

### தரவு சேகரிப்பில் ரோட்டரி உறுப்பினர்களுக்கு ஏதேனும் ஆலோசனை கூற முடியுமா?

தடுப்பூசி விநியோகம் முதல் அதை ஆதரிப்பது வரை AI பயன்பாடு பின்னணியில் இருந்தாலும் சரியான தகவல் சேகரிப்பும், தரமும் முக்கியமானது. உலகளாவிய சுகாதாரத் தரவுகளை ஆராய்ச்சியாளர்கள் சேகரித்து பகுப்பாய்வு செய்தாலும், குழந்தைகள் இறப்புக்கு காரணம் என்ன, எங்கு இது நடக்கிறது மற்றும் சில குழந்தைகள் மற்றவர்களைவிட ஏன் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி நாம் இப்போது அதிகம் அறிந்திருக்கிறோம். நமது நுண்ணறிவை பயன்படுத்தி செயல்பட்டதன் மூலம் கடந்த 25 ஆண்டுகளில் நம்பமுடியாத முன்னேற்றத்தின் பலனாக குழந்தைகள் இறப்பை கட்டுப்படுத்தி, பல உயிர்களை காப்பாற்ற முடிந்தது. காலப் போக்கில், சிறந்த தரவுகள், சுகாதாரச் சவால்கள், வளங்களை குறிவைப்பது மற்றும் தாக்கத்தை அளவிடுவதில் புரட்சியை ஏற்படுத்தியது. மேலும் எதிர்கால முன்னேற்றத்தை கருத்தில் கொள்ளும்போது AI முக்கிய சக்தி வாய்ந்த கருவியாக இருக்கும்.

தரவுகளில் முதலீடு செய்வது புத்திசாலித்தனமான, தாக்கத்தை ஏற்படுத்தும், செலவு குறைந்த வழியாகும். தரவு சேகரிப்பையும், முதலீட்டையும் மேம்படுத்தினால், திட்டத்தின் முழு தாக்கத்தையும் தெரிந்துகொள்ளலாம். உலகின் கடினமான சுகாதாரச் சவால்களுக்கு தீர்வுகாண முடியும். தாக்கத்தை அளவிடுவதும், தரமான தரவுகளுடன் தொடங்கி திட்டங்களை வடிவமைப்பதும் ரோட்டரி முன் முயற்சிகளை வலுவானதாக்கும்.

### ரோட்டரி உறுப்பினர்களுக்கு நீங்கள் சொல்லும் சேதி என்ன?

போலியோவை ஒழிப்பதில் உங்களின் அசைக்க முடியாத ஆதரவுக்கு நன்றி. ரோட்டரியின் தலைமைத்துவம், ஆதரவு மற்றும் நிலையாண அர்ப்பணிப்பு போலியோ ஒழிப்பு விளிம்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் இது சாத்தியமில்லை என்று கருதப்பட்டது.

அனைத்து ரோட்டேரியன்களுக்கும்: பல தசாப்தங்களாக உங்களின் அர்ப்பணிப்பு மற்றும் கூட்டாண்மைக்கு நன்றி. உங்களது முயற்சியால், உலகில் உள்ள அனைத்து குழந்தைகளும் இந்நோயால் பாதிக்கப்படாமல் பாதுகாப்பாக இருக்கும் நாள் வரும். அப்போது நாமும் வாழ்வோம். 2045-ம் ஆண்டு எங்கள் அறக்கட்டளையை மூடும் முன்னரே போலியோ முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட செய்தியை கேட்க ஆவலுடன் காத்திருக்கிறோம்.

ரோட்டரி பத்திரிகையிலிருந்து மறுபதிப்பு செய்யப்பட்டது.

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

### மொராதாபாதில் டிஜிட்டல் மாமோகிராஃபி இயந்திரம்

கந்த் சாலை, காஸ்மோஸ் மருத்துவமனையில், RC மொராதாபாத் அச்சீவர்ஸ், RC டேகு நார்த், RID 3700, கொரியா GG ஆதரவில், ஏழைப் பெண்களுக்கு மேம்பட்ட பரிசோதனைகளைக் கிடைக்கச்செய்யும் டிஜிட்டல் மாமோகிராஃபி இயந்திரத்தை நிறுவியது RC சன்ஸ்க்ருதி மொராதாபாத், RID 3100.




*திட்டத்தின் தொடக்க விழாவில் கொரியா மற்றும் மொராதாபாத்தைச் சேர்ந்த ரோட்டேரியன்களுடன் IPDG தீபா கன்னா (இடது).*

### வாரணாசியில் இரத்த தான வேன்

RC ருத்ரமதி காட்மாண்டு, நேபாளம் உடனான பன்னாட்டு நல்கையின்கீழ் பூர்வாஞ்சலில் ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனைக்கு இரத்த தான வேனை (ரூ 56 லட்சம்) வழங்கியது RC வாரணாசி டௌவுன்-டவுன், RID 3120. நவீன மருத்துவ வசதிகளைக் கொண்ட இந்த வண்டி பாதுகாப்பான, செயல்திறன் மிக்க இரத்தம் திரட்டலுக்கு உதவும், தொலைதூரப் பகுதிகளைச் சென்றடையும், புற்றுநோயாளிகளுக்கு உதவும்.




*இடமிருந்து நான்காவது: மொபைல் இரத்த சேகரிப்பு வசதிக்கு முன்னால் IPDG பரிதோஷ் பஜாஜ் மற்றும் DG அசுதோஷ் அகர்வால்.*

### மும்பையில் மேம்பட்ட கண் பராமரிப்பு

ஐஹோப் திட்டத்தின்கீழ் மும்பை லோகமான்ய திலக் நகராட்சிப் பொது மருத்துவமனைக்கு $108,561 மதிப்புள்ள மேம்பட்ட கண் அறுவைச் சிகிச்சைக் கருவிகளை வழங்கியது RC பாம்பே அப்டவுன், RID 3141. இந்தத் திட்டத்தை M K காந்தி, K காந்தி தொண்டு அறக்கட்டளை, Rtn ராஜேந்திர பர்வாலெ, RC-கள் பாம்பே மிட்-டவுன், மும்பை எலகன்ட், பன்னாட்டுக் கூட்டாளர் RC லிப்பெடல் (ஜெர்மனி) ஆதரித்தனர்.




*லோக்மான்யா திலக் மருத்துவமனையில் உபகரணங்களை திறந்து வைக்கும் விழாவில் IPDG சேதன் தேசாய் (வலமிருந்து மூன்றாவது) மற்றும் RC பம்பாய் அப்டவுன் IPP சுமன் அகர்வால் (வலது).*

### HPV தடுப்பு மருந்து முகாம்

நிராலி மருத்துவமனையுடனான திட்டத்தின்கீழ், 9 முதல் 14 வயதான 900 சிறுமிகளுக்கு HPV தடுப்பு மருந்துகளை (ரூ.26 லட்சம்) வழங்கியது RC கந்தேவி, RID 3060. இவர்களுடைய இலக்கு, 1000 பேரைச் சென்றடைவது. CSR கொடையாளர்கள் ஆதரவில் நடைபெறும் இந்தத் திட்டத்தின்கீழ் இரண்டு தடுப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன. இந்தச் சங்கம் அம்ருதம் மருத்துவமனைக்கு சோனோகிராஃபி இயந்திரத்தையும் (ரூ.16 லட்சம்) கொடையளித்துள்ளது. கிராமப்புற, பழங்குடியினச் சமூகங்களுக்குக் குறைந்த விலையில் நோய் கண்டறிதலை வழங்கும் இதற்கு CSR கொடையாளர்கள் நிதியளித்துள்ளார்கள்.



*பள்ளி மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்படுகிறது.*

# கழிவு மேலாண்மையில் ஒரு பாடம்

கிரண் ஜெஹரா



சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளின் குவியலில் அமர்ந்திருக்கும் சுனீத் டாப்கே.

வதோதராவில் இருந்து 30 கிமீ தொலைவில் உள்ள அசோஜ் கிராமத்தில், அவரது சங்கமான RC பரோடா கிரீன்ஸ், RID 3060 மற்றும் அவரது கச்சரே சே ஆசாதி அறக்கட்டளை மேற்கொண்டு வரும் திட்டம் பற்றி சுனில் டப்கேவிடம் கேட்டால், அவரது குரலில் ஒருவித அவசரமும் உற்சாகமும் தொனிக்கிறது.

கழிவு மேலாண்மையில் முனைவர் பட்டம் பெற்று, அரசுடன் இணைந்து பணியாற்றும் டப்கே, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான கொள்கைகள் கடுமையானதாகவோ விரிவானதாகவோ இல்லை, "இதுவே சமூக தலைமையிலான முயற்சிகளை மிகவும் முக்கியமானதாக மாற்றியது" என்று கண்டறிந்தார். அவரது அறக்கட்டளை, "கழிவுகளைப் பிரித்தல், மறுசுழற்சி செய்தல் மற்றும் நிலையான சமூக நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலம், கிராமங்களை நிர்வகிக்கப்படாத கழிவுகளின் சுமையிலிருந்து விடுவிக்க" செயல்படுகிறது.

"இது, நமது கிராமங்களின் தூய்மையான மண்ணைப் பாதுகாப்பதற்கும், சுற்றுச்சூழலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கும் செய்யப்படும் ஒரு திட்டத்தை விட அதிகமானது," என்று அவர் கூறுகிறார். " நகர்ப்புறங்கள் விவசாயத்திற்காக கிராமங்களை அதிகமாகச் சார்ந்துள்ளன. சமீபகாலமாக, மக்கள் எளிய வாழ்க்கை முறையையும் மன அமைதியையும் தேடி மீண்டும் கிராமங்களுக்கு இடம் பெயரத் தொடங்கியுள்ளனர். நகரங்களில், பூங்காக்கள் வடிவில் சிறிய பசுமைப் பகுதிகள் உள்ளன, ஆனால் கிராமத்தின் குணம் பசுமையே. காற்றின் தரம் சிறப்பாக உள்ளது மற்றும் உணவு புத்துணர்ச்சியுடன் உள்ளது. இந்த தூய்மையான சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது நமது பொறுப்பு," என்கிறார் அவர்.

பிளாஸ்டிக் கழிவுகள் (ஷாம்பு பாக்கெட்டுகள், சிப்ஸ் மற்றும் பிஸ்கட் உறைகள், தன்னீர் பாட்டில்கள்) கிராமப்புறங்களில் படிப்படியாக ஊடுருவியுள்ளன. " கிரீன்ஹவுஸ் வாயுக்களின் உமிழ்வுக்கு கழிவுகள் ஒரு முக்கிய காரணம், மேலும் நகர்ப்புற கழிவு மேலாண்மை சமாளிக்கப் போராடும் நிலையில், பெரும்பாலான கிராமங்களில் எந்த அமைப்பும் இல்லை. மக்கள் வீட்டின் பின்புறத்தில் குப்பைகளை வெறுமனே கொட்டுகிறார்கள், இது பல ஆண்டுகளாக குவிகிறது. இந்த பிளாஸ்டிக் குவியல்கள், அழைக்கப்படாத விருந்தாளியைப் போல, கிராமத்தின் ஒவ்வொரு மூலையையும் ஆக்கிரமித்துள்ளன," என்று டப்கே கூறுகிறார்.

இதை எதிர்கொள்ள, 2014ல் அவர் ஸ்வச் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் மன்ஜுசார் கிராமத்தில் பன்ஸ்வாரா சின்டெக்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் ஒரு முன்னோடி கழிவு மேலாண்மை திட்டத்தை தொடங்கினார். வீடு வீடாகச் சென்று கழிவுகளைச் சேகரித்தல், வீட்டில் எளிய கழிவுகளைப் பிரித்தல் மற்றும் உரம் தயாரித்தல் ஆகியவற்றுடன் தொடங்கிய இந்த முன்னோடித் திட்டம் குறைந்த செலவிலான சமூகத்திற்கு ஏற்ற மாதிரியை உருவாக்கியது.

2016-ல், இந்த அணுகுமுறையை விரிவுபடுத்துவதற்காக கச்சரே சே ஆசாதி அறக்கட்டளையை அவர் நிறுவினார். கூட்டாண்மைகள் மூலம், இந்த மாதிரி துமாட், சக்காரியா, நர்மதாபுரா மற்றும் குலாபுரா போன்ற கிராமங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 2019-ல், L&T டெக்னாலஜி சர்வீசஸ் நிறுவனத்தால், துமாட் கிராமத்தில், ஈர மற்றும் உலர்ந்த கழிவுகளைப் பிரிப்பதை ஊக்குவிப்பதற்காக, ஒரு ஊக்கத்தொகை அடிப்படையிலான திட்டம் தொடங்கப்பட்டதும், RID 3060-ன் ESRAG தொடர்ந்து அளித்த ஆதரவு, மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் அதன் குஜராத் சுத்திகரிப்பு நிலையத்தில் எஞ்சிய எண்ணெய் கசடு மற்றும் பாலிமர் கழிவுகளை அகற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் ஆகியவை, அந்த கிராமத்தை கழிவு மேலாண்மையில் குஜராத்தின்

முன்னணி கிராமமாக அங்கீகரிக்க வழிவகுத்தது.

RC பரோடா கிரீன்ஸ் விழிப்புணர்வு கூட்டாளராக இணைந்து, பள்ளிகளில் பிரச்சாரங்களை நடத்தினர், கிராமப் புறங்களில் விற்பனை நிலையங்களை அமைத்தனர், மற்றும் கழிவுகளைப் பிரிப்பது குறித்த உரையாடல்களில் குடியிருப்பாளர்களை ஈடுபடுத்தினர். பாலிகேப், NISOL மற்றும் அப்பல்லோ டயர்கள் போன்ற நிறுவனங்களின் CSR ஆதரவு முயற்சியை விரிவுபடுத்தியது. செயல்பாடுகளைத் தக்கவைக்க, அவரது அறக்கட்டளை, கழிவு சேகரிப்புக்காக ₹34 லட்சம் மதிப்புள்ள மின்சார வாகனத்தில் முதலீடு செய்தது.

இந்த முயற்சி கடந்த ஆண்டு, RC பரோடா கிரீன்ஸ் உடன் இணைந்து அசோஜ் கிராமத்தில் செயல்படுத்தப்பட்டது. கிராமவாசிகள் தாங்கள் பிரித்த பிளாஸ்டிக் கழிவுகளுக்கு மாற்றாக சோப்பு, டிடர்ஜென்ட் மற்றும் புத்தகங்களைப் பெற்றனர். சேகரிக்கப்பட்ட ஒவ்வொரு 500 கிலோ பிளாஸ்டிக்கும், நாற்காலிகள் மற்றும் மேசைகளாக மாற்றப்பட்டு, பள்ளிகள் மற்றும் சமூக இடங்களுக்காக கிராம பஞ்சாயத்திடம் தானமாக வழங்கப்பட்டது. தற்போது அசோஜ் கிராமம் பிளாஸ்டிக் இல்லாத கிராமமாக உள்ளது. சங்கம் இந்த முயற்சியை குன்பாட் கிராமத்திற்கும் விரிவுபடுத்துகிறது.

“கழிவுகள் இல்லாத சமூகங்களை உருவாக்குவதில் கிராமவாசிகள் இப்போது பங்குதாரர்களாக உள்ளனர். மேலும், பாரம்பரிய உரம் தயாரித்தல், உள்ளூர் பழுதுபார்க்கும் தீர்வுகள் மற்றும் ஊக்கத்தொகை அடிப்படையிலான பிரித்தல் போன்ற நடைமுறைகள் இந்த மாதிரியை நடைமுறைக்கு உகந்ததாகவும், விரிவுபடுத்தக்கூடியதாகவும் வைத்திருக்கின்றன” என்று டப்கே கூறுகிறார்.. தீர்வுகளை உள்ளூரில் மாற்றியமைக்கும் அவரது திறன், 2010-ல் வட கரோலினா மாநில பல்கலைக்கழகத்தில் புல்பிரைட் ஸ்காலர்ஷிப் பெறவும் அவருக்கு உதவியது. அங்கு, அவரது ஆய்வுக் கட்டுரை மண்புழு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தொழில் துறை கசடுகளை நச்சுத்தன்மையற்ற உரமாக மாற்றுவது பற்றி ஆராய்ந்தது.

அவரது ரோட்டரி பயணம் 2014-ல் RC பரோடா சயாஜினகரி நெதர்லாந்தில் பயிற்சித் திட்டத்திற்கு அவரை ஆதரித்தபோது தொடங்கியது.பின்னர், சுற்றுச்சூழல் சார்ந்த முயற்சிகளுக்காக அவர் RC பரோடா கிரீன்ஸ் சங்கத்தில் சேர்ந்தார். “எங்கள் சங்கத்தின் திட்டங்கள் மரம் நடுவதற்கு அப்பாற்பட்டவை. மரக்கன்றுகளை நடுவது முதல் படி மட்டுமே, ஆனால் உண்மையான நிலைத்தன்மை அவற்றின் உயிர்வாழ்வையும் சமூகத்தின் ஈடுபாட்டையும் பொறுத்தது. மரங்கள் கவனிக்கப்படாமல் விடப்பட்டாலோ, அல்லது உதிர்ந்த இலைகள் எரிக்கப்பட்டாலோ, நாம் மரம் நட்டதன் நோக்கத்தையே இழக்கிறோம். ஏனெனில், எரிப்பது மீத்தேன் மற்றும் கார்பன் டை ஆக்சைடை வெளியிடுகிறது. அதற்கு பதிலாக, அந்த இலைகளை உரம் தயாரிக்க பயன்படுத்தலாம். நட்டு விட்டு மறந்துவிடாதீர்கள்; மரங்களை கவனித்துக்கொள்வதற்கும், இந்த சுழற்சி முழுமையடைவதற்கும் மக்களை ஈடுபடுத்துங்கள்.”

“உங்கள் வீட்டிலிருந்தே தொடங்குங்கள். உங்கள் கழிவுகளை அகற்றுவதற்கு முன் தரம் பிரியுங்கள். அவ்வாறு செய்தால், எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுவதை நாம் என்கிராட் நிறுத்துகிறோம். உணவு கழிவுகள் உரமாகின்றன, மறுசுழற்சி செய்யக்கூடியவை புதிய தயாரிப்புகளாக மாறுகின்றன, மற்றும் ஒரு சிறிய பகுதி மட்டுமே குப்பைத் தொட்டிக்கு செல்கிறது. நமது நகரத்தை தூய்மையாகவும், பசுமையாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க ஒரு சாதாரண குடும்பம் எடுக்கக்கூடிய எளிதான படி இது,” என்று அவர் வலியுறுத்துகிறார்.

இந்த ஆகஸ்ட் மாதம் சென்னையில் நடைபெற்ற Lead 25 மாநாட்டில், அந்த சங்கம் அதன் திட்டத்தை காட்சிப்படுத்தியது.■




*சங்கத் தலைவர் ராஜேஷ் சௌபே (வலது), தப்கே மற்றும் சங்கச் செயலர் விவேக் ஸ்ரீவஸ்தவா ஆகியோர் குழந்தைக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் சோப்புகளை வழங்குகிறார்கள்.*

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## கிஷ்டுவாரில் ரோட்டரியின் நிவாரண உதவி

ஜம்மு-காஷ்மீர் மாநிலம், கிஷ்டுவாரில் மேகவெடிப்பு சம்பவம் நிகழ்ந்த சில நாட்களுக்குள் DG ரோஹித் ஓபராய் தலைமையிலான பேரிடர் நிர்வாகக்குழு சேதங்களையும் பாதிப்புகளையும் மதிப்பிட்டு ஓர் அறிக்கை வெளியிட்டது. இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டது பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டதால் பாதிக்கப்பட்ட உள்ளூர் வாசிகள். “பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியாக கட்ரா ரோட்டரி சங்கம் அடுத்த நாளே ரேஷன் பொருள்களை அனுப்பிவைத்தது. 8 பேர் அடங்கிய எங்கள் குழுவினர் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து வருகின்றனர்” என்று ஓபராய் கூறினார்.

ஜூலை 1 முதல் ‘ஆபரேஷன் ஹம் ஃபார் ஹிமாச்சல்’ குழுவினர் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவச் சென்றனர். இது மாநில அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள், பத்திரிகைகள் மற்றும் ஊடகங் களால் பாராட்டப்பட்ட ஒரு பெரிய நிவாரண முயற்சியாகும். ஒரு மாதத்தில் ரூ.20 லட்சம் மதிப்புள்ள நிவாரணப் பொருள்கள் அடங்கிய தொகுப்புகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன என்று ஓபராய் குறிப்பிட்டார். “முதல் 6 மாதங்களில் 25 புதிய சங்கங்களை உருவாக்கி மொத்த எண்ணிக்கையை 121 ஆக உயர்த்தவும் 500 உறுப்பினர்களைப் புதிதாக சேர்த்து மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையை 3,149-ஆக உயர்த்தவும் திட்டமிட்டுள்ளோம். ஏற்கெனவே நாங்கள் புதிதாக நூற்றுக்கும் மேலான உறுப்பினர்களைச் சேர்த்துள்ளோம்” என்றார்.



ரோஹித் ஓபராய்
கல்வி நிறுவனங்கள்
RC கபுர்தலா, RID 3070

பக்கவாதத்தால் பாதிக்கப் பட்ட 30–35 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க வசதியாக ரூ.1.7 கோடி சர்வதேச நிதியுதவியுடன் ரோட்டரி மறுவாழ்வு மையம் விரைவில் அமைக்கப்படும். மேலும் நடமாடும் மம்மோகிராபி கிளினிக் மூலம் 100 முகாம்கள் நடத்தப்படும். TRF-க்கு 2,50,000 டாலர் நிதிப்பங்களிப்பு செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளோம், என்றார் அவர்.



M K ரவீந்திரா
சிவில் என்ஜினீயர்
RC சித்ரதுர்கா-ஃபோர்ட்
RID 3160

## உலகளாவிய மானிய திட்டங்கள் வாழ்க்கையை மாற்றுகின்றன

RI கவனம் செலுத்தும் பகுதிகளில் சர்வதேச மானிய திட்டங்கள் (ஜி.ஜி.) வடக்கு கர்நாடகம் மற்றும் ஆந்திரத்தின் ரயாலசீமா பகுதிகளில் நீடித்த மாற்றத்தை கொண்டுவருகின்றன. “தற்போது எங்கள் மாவட்ட சங்கங்கள் ரூ.13–15 கோடி மதிப்பில் தாவண்கரேயில் 4 திட்டங்கள் உள்பட மொத்தம் 18 சேவைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன” என்று மாவட்ட ஆளுநர் ரவீந்திரா கூறினார். சித்ரதுர்காவில் உள்ள ரோட்டரி சேவை மையத்தில் சர்வதேச மானிய உதவி திட்டத்தின் கீழ் ரூ.1.16 கோடியில் பத்து டயாலிசிஸ் சிகிச்சை கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

அவர் சார்ந்த சங்கம் பிசியோதெரபி பிரிவுக்கு DDF நிதியிலிருந்து 5,000 டாலர் வழங்கியுள்ளது. ரவீந்திரா, 10 புதிய சங்கங்களை நிறுவி அதன் எண்ணிக்கையை 78 ஆகவும், 500 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து எண்ணிக்கையை 2,509 ஆக உயர்த்தவும் திட்டமிட்டுள்ளார். சமீபத்தில் சந்தூரில் ஒரு நோயறிதல் ஆய்வகம் (ஜி.ஜி. ரூ.60 லட்சம்); ராய்ச்சூரில் ரோட்டரி இரத்த வங்கி (ஜி.ஜி. ரூ.70 லட்சம்) ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவரது மாவட்டக் குழுவினர் CSR நிதியுதவியுடன் அரசுப் பள்ளிகளில் 15 ஸ்மார்ட் வகுப்புகளை நிறுவவும், இதயப் பரிசோதனை ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தவும், அனந்தபூரில் இரத்த வங்கி (ஜி.ஜி.ரூ.70 லட்சம்) ஏற்படுத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

ரவீந்திரா, TRF-க்கு 4 லட்சம் டாலர் நிதிப் பங்களிப்பு அளிக்க இலக்கு நிர்ணயித்துள்ளார். இவர் 1994-ல் ரோட்டரியில் சேர்ந்தார்.

# உடல் நலம் மற்றும் சுகாதாரத்தில் கவனம்

மூன்றாம் தலைமுறை ரோட்டேரியனான DG கார்த்திக், தனது தாத்தா நாராயணசாமி ரெட்டியார் மற்றும் தந்தை ஜெயராமன் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு 1999-ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார். “எங்கள் திட்டங்கள் சமூகத்தில் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தி வருவதால் நெகிழ்ச்சி அடைகிறேன். இதுதான் நான் சேவைகளைத் தொடர தூண்டுகிறது” என்கிறார்.

பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவிகளிடையே கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தடுப்பூசி போடும் திட்டத்துக்காக (ஜி.ஜி.: $ 150,000) மாவட்ட அளவில் குழுவை ஏற்படுத்தியுள்ளார். அரசுப் பள்ளிகளில் 100 கழிப்பறை தொகுதிகள் கட்டுதல் (ஜி.ஜி.: ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.7.5 லட்சம்); 100 பள்ளிகளுக்கு 200 கலந்துரையாடும் பலகைகள் (ஜி.ஜி.: ரூ.2.4 கோடி) மற்றும் அரசு மருத்துவமனையில் 50 டயாலிசிஸ் சிகிச்சை கருவிகள் (ஜி.ஜி.: ரூ.2.5 கோடி) நிறுவுவதற்கான பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. CSR நிதியுதவியுடன் பெரம்பலூரில் ஒரு சமூகக்கூடம் (ரூ.2.5 கோடி), உள் விளையாட்டு அரங்கம் ரூ.1.5 கோடி) மற்றும் கருத்தரங்குகள், கலைநிகழ்ச்சிகள் நடத்துவதற்கான கலையரங்கம் (ரூ.2.5 கோடி) அமைக்கவும் கார்த்திக் முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

ஐம்பது புதிய சங்கங்கள் உருவாக்கப்படும். 2,000 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள். இதுவரை 1,200 புதிய உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். அவர் பொறுப்பு ஏற்றபோது மாவட்டத்தில் 150 சங்கங்களும், 5,850 ரோட்டேரியன்களும் இருந்தனர். அவரது TRF நிதி பங்களிப்பு இலக்கு $1.5 மில்லியன். கொடைக்கானலில் விரைவில் நான்கு நாள் மெகா RYLA நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதில் நைஜீரியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து உள்பட 50-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் பங்கேற்க உள்ளனர். தலைமைத்துவ திறன் தவிர வாழ்க்கையில் வெற்றி பெற கையாள வேண்டிய நன்னெறிகள் விஷயத்திலும் நாங்கள் கவனம் செலுத்துவோம் என்கிறார் புன்னகையுடன்.



**J கார்த்திக்**
போக்குவரத்து
RC பெரம்பலூர், RID 3000



**G N ரமேஷ்**
இரப்பை, குடல்நோய் நிபுணர்
RC கொச்சின் மெட்ரோபோலிஸ், RID 3205

# உடல் பருமன், ஆட்டிஸத்தை எதிர்த்துப் போராடுதல்

புதிதாக உருவாக்கப்பட்ட இந்த மாவட்டத்தில் ரோட்டரி பற்றிய நன்மதிப்பை உயர்த்தும் வகையில் இரண்டு மருத்துவத் திட்டங்கள் வரைவு செய்யப்படும். எங்கள் மாவட்டத்தில் 103 ரோட்டரி சங்கங்களும் 3,600 உறுப்பினர்களும் உள்ளனர். புதிதாக 20 சங்கங்களை பட்டயப்படுத்தவும், உறுப்பினர்கள் எண்ணிக்கையை தமது பதவிக்காலத்தில் 20 சதவீதம் உயர்த்தவும் மாவட்ட ஆளுநர் ரமேஷ் திட்டமிட்டுள்ளார்.

ரோக்கோ திட்டம் (ROCCO- Rotary Combating Childhood Obesity): இது குழந்தைப் பருவத்திலான உடல் பருமனை எதிர்த்து ரோட்டரி போராடுவதாகும். நிகழ்ச்சிகள் மற்றும் பிரசாரங்கள் மூலம் வாழ்க்கை முறையிலான இந்த நோய் குறித்து 10,000 குழந்தை களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். “மருத்துவ சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு மருத்துவ ரீதியிலான ஆதரவு அளிக்கப்படும்” என்கிறார் அவர். மூளை வளர்ச்சி மற்றும் கற்றல் குறைபாடுள்ள குழந்தைகள் 50 பேருக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இந்த நேரடிப் பயிற்சி மூலம் சிறப்புக் குழந்தைகள் எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகளைப் பெறமுடியும்.

மற்றொரு திட்டம் நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் வழங்கும் திட்டம் (ஜி.ஜி.: $ 40,000) திருவல்லாவில் உள்ள நம்பிக்கை மருத்துவமனை மற்றும் கொச்சியில் உள்ள அம்ரிதா மருத்துவமனை ஆகியவற்றின் கூட்டுமுயற்சியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தொடக்கத்தில் 50 நோயாளி களுக்கு சிறப்பு விசையால் இயங்கும் குழாய், மருந்துகள் உள்ளிட்ட அனைத்து உதவிகளும் வழங்கப்படும். கொச்சியில் செல்லப் பிராணிகள் மற்றும் தெருநாய் களுக்கு ரூ.40 லட்சம் CSR நிதியுதவியில் தகன மையம் அமைக்கப்படும். TRF நிதி கொடுப்பதில் அவரது இலக்கு $ 1.5 மில்லியன். 2001-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். “தகவல் தொடர்பு- இணைந்து செயல்படுதல் மற்றும் சேவைகள் மூலம் ரோட்டரிக்கு இளைஞர்களை ஈர்க்க முடியும் என்று அவர் நம்புகிறார்.■

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## பாண்டிச்சேரிப் பள்ளிகளில் கண் பரிசோதனை முகாம்கள்

பள்ளிகளில் கண் பரிசோதனை முகாம்களை நடத்திவருகிறது RC புதுச்சேரி விஷன், RID 2981. இந்தச் சங்கம் கண் தானம் பற்றிய விழிப்புணர்வு உரைகளையும் பள்ளிகளில் வழங்கிவருகிறது. மாணவர்களுடைய அறிவை விரிவாக்க உதவும்வகையில் அரசுத் தொடக்கப் பள்ளி ஒன்றுக்கு ஓர் அறிவார்ந்த தொலைக்காட்சி கொடையளிக்கப்பட்டது.

முதன்மை நல மையங்களில், தாய்ப்பாலூட்டுவதன் முக்கியத்துவத்தைப்பற்றிய சிற்றேடுகள் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப் பட்டன. இந்தச் சங்கம் சிறப்புக் குழந்தைகளுக்குத் தொடர்ந்து உணவு வழங்கிவருகிறது.



*ஒரு பள்ளியில் கண் பரிசோதனை முகாம் நடந்து கொண்டிருக்கிறது.*

## சேலம் பள்ளிகளில் WASH திட்டங்கள்

சுமார் ஒன்பது ஆண்டுகளுக்குமுன் சேலத்தில் (RID 2982) 16 பள்ளிகளில் WASHக்கான GG திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அவற்றில் 11 பள்ளிகளைப் பார்வையிட்ட PDG கணேஷ் பட் கழிப்பறைகள், சிறுநீர் கழிக்குமிடங்கள், கை கழுவும் நிலையங்கள், தண்ணீர்க் குழாய்கள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் தூய்மையாகப் பராமரிக்கப்படுவதைக் கண்டறிந்தார்.

ஃபிலிப்பைன்ஸில் உள்ள மகாடியில் 20 ரோட்டரியன்களுக்கு வழங்கப்பட்ட TRF பயிற்சி நிகழ்வின்போது, இந்த WASH திட்டத்தைப் பார்வையிடும்படி அவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. PDG பட் பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மாவட்டக்கல்வி அலுவலர்கள், பெற்றோர், சமூகத்தலைவர்களுடன் உரையாடினார். இந்தக் கிராமங்களில் திறந்த வெளி மலம் கழித்தல் இல்லை.




*கபருத்தம்பட்டி பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியில், ஆசிரியர்கள், ரோட்டேரியன்கள் மற்றும் மாணவர்களுடன், PDG கணேஷ் பட் (இடமிருந்து 4வது).*

## புணே பள்ளிகளுக்கு டிஜிட்டல் தொடுதிரைக் கணினிகள்

இந்தக் கல்வி ஆண்டின் தொடக்கத்தில், டிஜிட்டல் இடைவெளியை நிரப்பும் நோக்கத்துடன், நான்கு கிராமப்புறப் பள்ளிகளில் 8ம், 9ம் வகுப்பு பயிலும் 250 மாணவர்களுக்குக் கல்வித் தொடுதிரைக் கணினிகளை வழங்கியுள்ளது RC புணே ஹெரிட்டேஜ், RID 3131.

கல்வி மென்பொருள், ஊக்கமளிக்கும் உள்ளடக்கம் நிரப்பப்பட்டுள்ள இந்தத் தொடுதிரைக் கணினிகள் இந்த மாணவர்கள் பள்ளியிலிருந்து தேர்ச்சி பெறும்வரை அவர்களிடம் இருக்கும். ரூ 50 லட்சம் மதிப்புள்ள இந்த டிஜிட்டல் கற்றல் திட்டம், குகா இந்தியா, டர்க் ஆட்டோமேஷன், ஃபெஸ்டோ இந்தியா, ஷகுன் இன்டஸ்ட்ரீஸ், சாக்ஷி மெட்-டெக் ஆகியோரின் கூட்டு CSR முன்னெடுப்பினால் நிறைவேறியுள்ளது. இதிலுள்ள Ask Didi செயலியின் மூலம் மாணவர்கள் பல்வேறு தலைப்புகளில் தெளிவான, துல்லியமான பதில்களைப் பெறலாம்.



*டிஜிட்டல் டேப்லெட்டுகளுடன் மாணவர்கள்.*

## ஈரோட்டின் தாய்ப்பால் வங்கி


RC ஈரோடு நெக்சஸ், RID 3203, தன் தாய், சேய் நல முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக லோட்டஸ் மருத்துவமனையில் வரம் என்ற பெயரில் தாய்ப்பால் வங்கி ஒன்றை அமைத்துள்ளது. சிகிச்சை பெறும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான தாய்ப்பாலை நம்பகமான முறையில் வழங்கி உதவும் இந்த வசதியை (ரூ.2 லட்சம்) DG B தனசேகர், AKS உறுப்பினர் K ஸ்ரீனிவாசன் தொடங்கிவைத்தார்கள்.


இந்தத் தொடக்க விழாவில் சங்கத் தலைவர் S பரணிதர், செயலாளர் R மதுமதி, திட்டத் தலைவர் சுருதி ராஜேந்திரன், PDG E K சகாதேவன், RRFC N தவமணி, AG K ராமலிங்கம் பங்கேற்றனர். இந்தச் சங்கம் ஈரோடு குழந்தை வளர்ப்பு மையம் என்கிற NGO உடன் இணைந்து, பாலூட்டுகிற தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்களுக்கான Mom Connect என்ற வாட்சாப் ஆதரவுக் குழுவைத் தொடங்கியுள்ளது.



*லோட்டஸ் மருத்துவமனையைச் சேர்ந்த உஷா சகாதேவன் ஒரு பயனாளிக்கு தாய்ப்பால் பாக்கெட்டை வழங்குகிறார். மேலும் (வலமிருந்து) RC ஈரோடு நெக்ஸஸ் செயலாளர் R மதுமதி மற்றும் திட்டத்தலைவர் ஸ்ருதி ராஜேந்திரன் ஆகியோரும் உள்ளனர்.*

# Membership & TRF contribution summary






*Membership figures as on September 1, 2025.
*TRF contribution figures as on August 31, 2025.

## Rotary worldwide

| | | | |
|---|---|---|---|
| Rotaract clubs : | 9,680 | Rotaract members : | 136,499 |
| Interact clubs : | 18,041 | Interact members : | 415,081 |
| RCCs : | 14,191 | | |
| | | As on September 23, 2025 | |



## RID 3030

**RC நாக்பூர் இஷான்யா**

நாக்பூரில் உள்ள இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 3 டயாலிசிஸ் சிகிச்சை இயந்திரங்கள், மும்பையில் உள்ள விக்கோ புராடெக்ட்ஸ் நிறுவனத்தின் CSR நிதியுதவியுடன் ரோட்டரி அறக்கட்டளை இந்தியா மூலம் நிறுவப்பட்டன.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3080

**RC அம்பாலா இன்டஸ்ட்ரியல் ஏரியா**

தங்களின் பசுமை இயக்க திட்டத்தின்கீழ் ரோட்டரி சங்கத்தினர் கன்டோன்மென்ட் பகுதியில் உள்ள செஞ்சிலுவை சங்க முதியோர் இல்லத்தில் மரக்கன்றுகளை நட்டனர்.

## RID 3090

**RC சமனா**

மர்தாஹெரியில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் குடிநீர் குளிர்விப்பான் கருவி நிறுவப்பட்டது. இதன் மூலம் அப்பள்ளியில் படிக்கும் 130 மாணவர்கள் பயன்பெறுவர்.






## RID 3131

**RC கோபோலி**

220 இன்டராக்டர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்ற மாவட்ட இன்டராக்ட் கூட்டத்தில் DG சந்தோஷ் மராத்தே தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டார். இன்டராக்ட் கூட்டத்தை எவ்வாறு நடத்துவது என்பது பற்றிய ஒரு குறுநாடகம் பார்வையாளர்களை கவரும் வகையில் நடத்திக்காட்டப்பட்டது.

## RID 3060

**RC அம்ரேலி கிர்**

அம்ரேலியில் காதுகேளாதோர் மற்றும் வாய்பேசாதோர் பள்ளியில் உள்ள தொழிற்பயிற்சி மையத்துக்கு ஐந்து தையல் இயந்திரங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இதன் மூலம் காது கேளாமல், வாய் பேச முடியாமல் இருக்கும் பெண்கள் தையல் திறன் வளர்ப்பு பயிற்சி மூலம் தங்களை மேம்படுத்திக் கொள்ள முடியும்.



## RID 3142

**RC நவி மும்பை மலைப்பகுதி**

மழைக்காலத்தில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள போலீசாரின் பணியை அங்கீகரிக்கும் வகையில் தலோஜாவில் பணியில் இருந்த போக்குவரத்து போலீசாருக்கு மழைக் கோட்டுகள் விநியோகிக்கப்பட்டன. விஜயராவ் ஷிண்டே தலைமையில் இத்திட்டத்திற்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.



## RID 3132

**RC சோலாப்பூர் ஸ்மார்ட் சிட்டி**

குல்வாஞ்சி கிராமத்தில் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 100 பெண்களுக்கு, தங்களது தயாரிப்புகளை எப்படி விளம்பரப்படுத்தி சந்தைப்படுத்துவது குறித்து சிறப்பு அமர்வு நடைபெற்றது. தையல் வேலை, அப்பளம் தயாரித்தல், சட்னி தயாரித்தல் மற்றும் கூம்பு வடிவ மெஹந்தி தயாரித்தல் உள்ளிட்ட வணிக வாய்ப்புகள் குறித்து அவர்களுக்கு விளக்கப்பட்டது.

# உங்கள் உள்ளங்கை என்ன சொல்கிறது?

கீதா மத்தாய்

கைரேகை பார்ப்பவர்கள் மீது மக்களுக்கு நீண்டகாலமாக ஆர்வம் இருந்து வருகிறது. அவர்களால் உண்மையிலேயே எதிர்காலத்தைக் கணிக்க முடியுமா? கைரேகை சாஸ்திரம் ஆர்வலர்கள், நிபுணர்கள் மற்றும் சுயமாக கற்றுக்கொண்டவர்கள் என பலரை ஈர்த்துள்ளது. இந்த தலைப்பில் எண்ணற்ற புத்தகங்களும், ஆன்லைன் கைரேகை வாசிப்புகளும் கூட உள்ளன.


உண்மை என்னவென்றால், நமது உள்ளங்கைகள் மற்றும் உள்ளங்கால்கள் அடையாளத்திற்கான மறுக்க முடியாத ஆதாரங்களைக் கொண்டுள்ளன. தனித்துவமான சுருள்கள், வளைவுகள் மற்றும் சுற்றுகளால் குறிக்கப்பட்ட கைரேகைகள் தனித்துவமானவை மற்றும் ஒருபோதும் ஒத்திருக்காது, இரட்டையர்களுக்கும் கூட ஒரே மாதிரியாக இருக்காது. DNA பகுப்பாய்வுக்கு நீண்டகாலத்திற்கு முன்பே, கைரேகைகள் அடையாளம் காணும் முறைகளில் நம்பகமான பயோமெட்ரிக் முறைகளில் ஒன்றாக இருந்தன.

ஜோதிடர்களும் குறி சொல்பவர்களும் உள்ளங் கைகளின் கோடுகள், கைகளின் வடிவம் மற்றும் விரல்களின் நீளம் ஒருவருக்கு ஒருவர் மாறுபடுவதைக் கவனித்தனர். கைரேகை சாஸ்திரம் விரைவில் ஜோதிடத்தைப் போலவே லாபகரமான தொழிலாக மாறியது. அனுபவம் வாய்ந்த கைரேகை நிபுணர்கள் பெரும்பாலும் நன்கு படித்தவர்களாகவும் உன்னிப்பாகக் கவனிப்பவர்களாகவும் இருப்பார்கள், உடல் மொழி மற்றும் தோற்றத்தை நுட்பமாக மதிப்பிடுவார்கள். உள்ளங்கையைப் பார்ப்பதற்கு முன்பே, ஒருவர் எப்படி நடக்கிறார், தன்னை எப்படி வெளிப்படுத்துகிறார் என்பதைக் கவனித்து அவரது மனநிலை, குணம் அல்லது ஆரோக்கியத்தை மதிப்பிடுவார்கள்.

உதாரணமாக, நாம் கைகளைப் பிடிக்கும் விதம் பெரும்பாலும் நமது உடல் நிறை குறியீட்டெண்ணை (BMI) பிரதிபலிக்கிறது. 30-க்கு மேல் BMI உள்ளவர்கள் தங்கள் கட்டை விரல்கள் பின்னோக்கி இருக்கும்படி நிற்பார்கள். அதிக எடை கொண்டவர்கள் (BMI 25–30) தங்கள் கைகளை கட்டை விரல்கள் பக்கவாட்டில் இருக்கும்படி பிடிப்பார்கள், அதே நேரத்தில் இயல்பான எடை கொண்டவர்கள் (BMI 20–25) இயல்பாக உள்ளங்கைகள் முன்னோக்கி இருக்கும்படி நிற்பார்கள். உடல் பருமன் கொண்ட, ஆரோக்கியமற்ற நபர் நீண்டகாலம் வாழ வாய்ப்பில்லை, அதே நேரத்தில் பதட்டமான, அமைதியற்ற உடல் நிலை மறைந்திருக்கும் உளவியல் சிக்கலை வெளிப்படுத்தலாம்.

சுவாரஸ்யமாக, நவீன மருத்துவம் இப்போது கைரேகை நிபுணர்கள் பல நூற்றாண்டுகளாக லாபம் ஈட்ட செய்ததை ஏற்றுக்கொள்கிறது, அதாவது உள்ளங்கைகளை கவனமாக ஆய்வு செய்வது மருத்துவ வரலாறு, நோயறிதல், வாழ்க்கை முறை மற்றும் ஆயுட்காலம் பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவுகளை அளிக்கும்.

கர்ப்பத்தின் 12-வது வாரத்தில், கருவில் உள்ள குழந்தை



தனது கைகளை கருப்பையில் இறுக்கமாக மூடிக்கொள்ளும்போது, உள்ளங்கையின் மடிப்புகள் உருவாகத் தொடங்குகின்றன. பொதுவாக, ஒவ்வொரு உள்ளங்கையிலும் மூன்று தனித்துவமான மடிப்புகள் உருவாகின்றன.

முதல் மூன்று மாதங்களில் கருவில் ஏற்படும் எந்தவொரு உடல், மருத்துவம், நோய் அல்லது மருந்து-தூண்டப்பட்ட காயம் இந்த மடிப்புகளின் உருவாக்கத்தை மாற்றி, நிரந்தர அடையாளத்தை விட்டுவிடும். இத்தகைய அசாதாரணங்கள் சில நேரங்களில் கர்ப்பத்தின் 12-வது வாரத்திற்குப் பிறகு அல்ட்ராசவுண்ட் ஸ்கேன்களில் கண்டறியப்படலாம். அசாதாரண உள்ளங்கை மடிப்புகள் காணப்பட்டால், சிறுநீரகம், இதயம் அல்லது பிற உறுப்புகளில் தொடர்புடைய வளர்ச்சி அசாதாரணங்கள் உள்ளதா என்பதை அறிய கருவை கவனமாக கண்காணிக்க வேண்டும். பிறந்த பிறகு, கருப்பையில் இறுக்கமாக மூடிய கைகளால் உருவான உள்ளங்கை மடிப்புகள், குழந்தையின் திறந்த உள்ளங்கைகளில் தெளிவாகத் தெரியும்.

சில நேரங்களில், இரண்டு மேல் உள்ளங்கை மடிப்புகளும் இணைந்து உள்ளங்கையில் ஒரே ஒரு மடிப்பாக உருவாகின்றன, இது சிமியன் கோடு என்று அழைக்கப்படுகிறது. இந்த அம்சம் பெரும்பாலும் குரோமோசோம் அசாதாரணங்களுடன் தொடர்புடையது. இதனுடன் இணைக்கப்பட்ட மிகவும் பொதுவான நிலை டவுன் சிண்ட்ரோம் (ட்ரைசோமி 21) ஆகும், இதில் குரோமோசோம் 21-ல் உள்ள கூடுதல் மரபணு பொருள் வளர்ச்சி மற்றும் உடல் வேறுபாடுகளுக்கு வழிவகுக்கிறது. குரோமோசோம்கள் 13 மற்றும் 8-ஐ உள்ளடக்கிய பிற ட்ரைசோமிகளும் அசாதாரண உள்ளங்கை மடிப்புகளுடன் இருக்கலாம்.

சுவாரஸ்யமாக, ஒவ்வொரு 30 சாதாரண நபர்களில் ஒருவருக்கும் ஒற்றை உள்ளங்கை மடிப்பு தோன்றலாம். இது ஆண்களுக்கு மிகவும் பொதுவானது மற்றும் பொதுவாக ஒரு கையை மட்டுமே பாதிக்கிறது, மற்றொன்றில் வழக்கமான மூன்று மடிப்புகள் இருக்கும். சில சந்தர்ப்பங்களில், ஒன்று அல்லது இரு பெற்றோருக்கும் ஒற்றை உள்ளங்கையில் இந்த மடிப்பு இருக்கலாம்.

பெரும்பாலும் பாதிப்பில்லாததாக இருந்தாலும், இந்த மாறுபாடு ஒரு சிறிய அசாதாரணமாகக் கருதப் படுகிறது, எனவே இது கவனமான கண்காணிக்கப்பட வேண்டும். சில குழந்தைகளுக்கு பின்னர் பிற உறுப்புகளில் நுட்பமான அசாதாரணங்கள் ஏற்படலாம், மேலும் ஆய்வுகள் லுகேமியா அல்லது பிற இரத்த புற்றுநோய்கள் உருவாகும் அபாயம் சுமார் 50 சதவீதம் அதிகமாக இருப்பதாகக் கூறுகின்றன.

மார்ஃபான்ஸ் சிண்ட்ரோம் என்பது அராக்னோடாக்டைலி எனப்படும் மரபணு கோளாறு ஆகும், இது சிலந்தியின் விரல்களைப் போல அசாதாரணமாக நீளமான, மெல்லிய விரல்களால் வகைப்படுத்தப்படுகிறது. அல்ட்ராசவுண்டில் நடுவிரல் மற்றும் கையின் நீளத்தை அளவிடுவதன் மூலம் இந்த நிலையை சில சமயங்களில் பிறப்பதற்கு முன்பே கண்டறியலாம். மார்ஃபான்ஸ் சிண்ட்ரோம் பெரும்பாலும் இதயம், கண்கள், இரத்த நாளங்கள் மற்றும் எலும்புக்கூட்டில் ஏற்படும் அசாதாரணங்களுடன் தொடர்புடையது.

ஆள்காட்டி, நடு மற்றும் மோதிர விரல்கள் ஏறக்குறைய சம நீளம் கொண்ட முப்பரிமாண கை, பிறவி தைராய்டு குறைபாடு, சில சிறுநீரக கோளாறுகள் மற்றும் சில வகையான குள்ளத்தன்மையுடன் தொடர்புடையது.

சில மனநல நோய்கள் உள்ளவர்கள், பொது மக்களைக் காட்டிலும் விரல் நுனிகளில் அதிக திறந்த சுற்றுகளும், குறைந்த சுழல் வடிவங்களும் கொண்டிருப்பார்கள் என ஆராய்ச்சி காட்டுகிறது. அசாதாரண உள்ளங்கை மடிப்புகள் பரம்பரை அல்லது மரபணு கோளாறுகளால் ஏற்பட வேண்டிய அவசியமில்லை. கர்ப்ப காலத்தில் மது அருந்தும் பெண்கள், ஒற்றை உள்ளங்கை மடிப்பைக் கொண்ட ஃபிடல் ஆல்கஹால் சிண்ட்ரோம் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பெற்றெடுக்கலாம்.

சிகரெட் புகைப்பவர்கள், நீண்டகால சுவாசப் பிரச்சனைகள் உள்ளவர்கள் அல்லது பிறவி இதய நோய் உள்ளவர்களுக்கு ஆக்ஸிஜன் பற்றாக்குறை ஏற்பட்டு, நீல நிற நகங்களை கொண்டிருக்கலாம்.

ப்ரோன்கைஎக்டாசிஸ் போன்ற சில நுரையீரல் நிலைமைகள் மற்றும் நீண்டகால குடல் நோய்கள் விரல்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டி இருப்பதற்கு வழிவகுக்கும். இந்த நிலையில், நகங்கள் வட்டமாகி, ஒரு குவிந்த, கிளி-அலகு தோற்றத்தைப் பெறுகின்றன. மகிழ்ச்சியான விஷயம் என்னவென்றால், அடிப்படை நோய் வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப் பட்டவுடன், நகக் குவியல் பெரும் பாலும் சரியாகிவிடும்.

விரல் நீள விகிதங்கள் கூட கருப்பையில் ஹார்மோன் வெளிப் பாட்டால் பாதிக்கப்படுகின்றன. பாலினம் எதுவாக இருந்தாலும், மோதிர விரலை விட ஆள்காட்டி விரல் குட்டையாக உள்ளவர்கள் பிறப்பதற்கு முன் அதிக அளவு டெஸ்டோஸ்டிரோன் ஹார்மோனுக்கு ஆளாகியுள்ளனர், அதே நேரத்தில் ஆள்காட்டி விரல் நீளமாக உள்ளவர்கள் ஈஸ்ட்ரோஜனுக்கு அதிக அளவில் ஆளாகியுள்ளனர். இந்த வித்தியாசம் 2–3 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கலாம், ஆனால் இது ஆளுமைப் பண்புகள் மற்றும் தொழில் நாட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தொழில்முறை பெண்கள் மற்றும் பெண் விஞ்ஞானிகள் பெரும் பாலும் பிரசவத்திற்கு முந்தைய டெஸ்டோஸ்டிரோன் வெளிப்பாட்டைக் கொண்டுள்ளனர், இது ஆண்களில் மிகவும் பொதுவான சில அறிவாற்றல் பண்புகளை பெண்களுக்கு அளிக்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக் கின்றன. இதற்கு நேர்மாறாக, அதிக ஈஸ்ட்ரோஜன் வெளிப்பாடு உள்ள ஆண்கள் நுண்கலை மற்றும் சமூக அறிவியல் போன்ற துறைகளில் அதிகம் காணப்படுகிறார்கள்.

சிறிய பயிற்சி மற்றும் கவனமான கவனிப்புடன், உள்ளங்கைகளின் கோடுகளில் மறைந்திருக்கும் ரகசியங் களை நீங்களும் அடையாளம் காண கற்றுக்கொள்ளலாம்.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவர் மற்றும் *Staying Healthy in Modern India* புத்தக ஆசிரியர்.

Rotary PEOPLE OF ACTION

# கிளிமஞ்சாரோவில் ரோட்டரி கொடியை ஏற்றிய ஜோத்பூர் ரோட்டேரியர்

**கிரண் ஜெஹரா**

நட்சத்திரங்கள் மின்னும் ஆப்பிரிக்க வானத்தின் கீழ் துங்கர் சிங் ரத்தோர் கிளிமஞ்சாரோவின் உச்சிப் பயணத்திற்காக தனது பூட்ஸ்களை இறுக்கிக் கட்டினார். “காற்றானது இருளைக் கிழித்தது, எனது சுவாசம் உறைந்த காற்றில் பனி மூட்டம் போலத் தெரிந்தது, ஒவ்வொரு அடியும் முந்தையதை விடக் கனமாக இருந்தது” என்று அவர் நினைவுகூர்ந்தார். இருந்தபோதிலும், தனது பையில் தேசியக் கொடியையும் ரோட்டரி கொடியையும் பத்திரமாக வைத்துக் கொண்டு, தன் இதயத்தில் தைரியத்துடன், தனது வழிகாட்டியுடனும் மேலும் நான்கு இந்தியர்களுடன் அவர் மேலே ஏறினார். பல மணி நேரத்திற்குப் பிறகு, ஆப்பிரிக்காவின் மிக உயரமான சிகரம் அவர் காலடியில் இருந்தது.

மலையேற்றம் என்பது RC ஜோத்பூர் மிட்டவுன், RID 3053-ன் செயலாளரான ரத்தோருக்கு ஒரு வாழ்நாள் லட்சியமாக இருந்துள்ளது. ஆனால் கிளிமஞ்சாரோ ஒரு சாகசத்தை விட மேலானது, “இதுவரை நான் சந்தித்த சவால்களில் இதுவே மிகவும் துணிச்சலானது” என்கிறார். உயர நோய், மரத்துப்போகச் செய்யும் குளிர் மற்றும் கடுமையான ஏற்றங்களை எதிர்த்துப் போராடி, அவர் “ரோட்டரி தாளம்” என கூறும், ஒழுக்கம், நிலைத்தன்மை மற்றும் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லும் தைரியம் ஆகியவற்றைக் கொண்டிருந்தார்.

2022-ல், 17,598 அடி உயரத்தில் உள்ள எவரெஸ்ட் அடிப்படை முகாமை அடைந்த ரத்தோர், இந்த ஆண்டு தன்னை மேலும் உயர்த்திக் கொண்டார். 19,341 அடி உயரத்தில் உள்ள கிளிமஞ்சாரோவின் உஹுரு சிகரத்தை வெற்றிகரமாக அடைந்தார். “கிளிமஞ்சாரோ வெறும் சகிப்புத்தன்மையைப் பற்றியது மட்டுமல்ல. அது என் தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சி, தோழமை, நேர்மறை போன்ற ரோட்டரி எனக்குக்



*துங்கர் சிங் ரத்தோர், மற்ற மலையேறுபவர்களுடன்.*







*மேலே: கிளிமஞ்சாரோ சிகரத்தில் ரோட்டரி கொடியுடன் ரத்தோர்.*

*இடது: தேசியக் கொடியுடன் ரத்தோர்.*



*சக மலையேற்ற வீரர் S S ஷெகாவத்துடன் ரத்தோர்.*

கற்றுக்கொடுத்த மதிப்புகள் மீதான நம்பிக்கை பற்றியது” என்றார்.

ஜோத்பூரில், ஒரு சிறிய ரோட்டரி நடைபயிற்சி குழுவுடன் நடப்பதன் மூலம் அவரது பொழுது புலர்கிறது. PDG பிரியேஷ் பண்டாரி, AG சௌரப் ரதி, சங்கத் தலைவர் ராஜேஷ் நருலா, சங்க உறுப்பினர்களான லலித் கார்க் மற்றும் சுஷில் நஹர் ஆகியோர் ஒவ்வொரு காலையிலும் ரத்தோருடன் வேகமாக நடக்கவும், சிரித்துப் பேசவும், நட்புறவைப் பேணவும் கூடுகின்றனர். மலையில், சோர்வு அவரைத் தடுக்க முயன்றபோது, “அவர்களின் கண்ணுக்குத் தெரியாத இருப்பே என்னை தொடர்ந்து முன்னேற வைத்தது,” என்று அவர் கூறுகிறார்.

மலையேற்றத்தின் மிகக் கடினமான பகுதி இறுதி ஏற்றத்தில், “நள்ளிரவில், கடுங்குளிரில், ஸ்டெல்லா பாயிண்ட் நோக்கி இருளில் மலையேற்றத்தைத் தொடங்கியதுதான். ஒவ்வொரு அடியும் சோர்வுடனும் மெல்லிய காற்றுடனும் ஒரு போராட்டமாக இருந்தது.” இருப்பினும், ரத்தோர் உஹூரு சிகரத்தில், “சோர்வு, நன்றி உணர்வு மற்றும் அமைதியான மகிழ்ச்சியின் கலவையால்” நிரம்பியவராக, முதலில் தேசியக் கொடியையும் பின்னர் ரோட்டரி கொடியையும் ஏற்றினார்.

அவரது சங்கத்தை பொறுத்த வரை, இந்த மலையேற்றம் ஒரு தனிப்பட்ட வெற்றியை விட மேலானது. “ரத்தோர் ஒரு அசாதாரணமான சாதனையைச் செய்துள்ளார், ஒரு மலையில் ஏறுவது மட்டுமல்லாமல், ரோட்டரியின் தாரக மந்திரமான சுயத்திற்கு மேல் சேவை என்பது சுயக்கட்டுப்பாட்டிற்கும் நீள்கிறது என்பதை நிரூபித்துள்ளார்,” என்று ராஜேஷ் நருலா கூறுகிறார். “அவர் நம் அனைவருக்கும் ஒரு உத்வேகமாக உள்ளார். அவரது சாதனை ஜோத்பூரில் உள்ள ரோட்டராக்டர்கள் மற்றும் இளம் உறுப்பினர்களிடையே உடற்தகுதி, நெகிழ்வுத்தன்மை மற்றும் எல்லைகளைத் தாண்டிச் செல்வது பற்றி உரையாடல்களைத் தூண்டியுள்ளது.”

பல மலையேறுபவர்களைப் போலவே, ரத்தோரின் பார்வையும் இப்போது எவரெஸ்ட் சிகரத்தின் மீது உள்ளது.■





# பயணக் கதைகள்

*ஒரு பயணக்கட்டுரை-மற்றும்-நினைவுப்புத்தகம் மற்றும் ஒரு நாவல்; இரண்டும் இந்த காலகட்டத்தில் அடையாளம் மற்றும் அன்னியத்தன்மை பற்றிய யோசனைகளை வெவ்வேறு வழிகளிலும், வெவ்வேறு இடங்களிலும் அனுபவித்து, வெளிப்படுத்துகின்றன.*

ஆதிஷ் தசீரின் சமீபத்தில் வெளியிடப்பட்ட பயணக்கட்டுரை-மற்றும்-நினைவுப்புத்தகமான, “எ ரிட்டர்ன் டு செல்ஃப்: எக்ஸ்கர்ஷன்ஸ் இன் எக்சைல்” என்பதில் பொலிவியாவில் உள்ள கோபகபானாவில் கன்னி மேரியின் திருவிழாவில் கலந்துகொள்ள அவர் பயணம் செய்ததை விவரிக்கிறார். பொலிவியா, மங்கோலியா மற்றும் ஈராக் ஆகிய மூன்று நாடுகளில் புனித யாத்திரையின் உணர்வையும் தன்மையையும் அவர் ஆராய்கிறார் –அதே நேரத்தில், ஒவ்வொன்றின் அரசியல் நிகழ்காலமும் கட்டமைக்கப்பட்ட கடந்த காலத்தைப் பற்றியும் சிந்திக்கிறார். லா பாஸ் தலைநகரை விட்டு வெளியேறி, ஆண்டிஸ் மலைகளை முதன்முதலாகப் பார்க்கும்போது, தென்னமெரிக்கா பற்றி அறிந்த ஒரு நண்பர் அவருக்கு அனுப்பிய செய்தியை அவர் நினைவுகூர்கிறார். “அவைகள் தான் உண்மையான இந்துக்கள்,” என்று அவரது நண்பர் எழுதுகிறார். “அவை அனைத்தையும் உள்வாங்கி தங்களாகவே இருக்கிறார்கள்.” இந்த குறிப்பு, திபெத்துக்கு அடுத்தபடியாக அளவில் பெரிய ஒரு உயர் பீடபூமியான அல்டிப்லானோவில் அவரது நண்பர் கண்ட கலப்புத்தன்மையை பற்றி குறிப்பிடுகிறது. அல்டிப்லானோவின் பெரும்பகுதி பொலிவியாவில் உள்ளது, மீதமுள்ளவை பெரு, சிலி மற்றும் அர்ஜென்டினாவில் உள்ளன. வடக்கே டிடிகாக்கா ஏரியும், தெற்கே சலார் டி உயுனி உப்புப் படுகைகளும் உள்ளன. இதைவிட முக்கியமாக, இது பல கலாச்சாரங்கள் இருந்த ஒரு பகுதி.



சந்தியா ராவ்

அனைத்தையும் உள்வாங்கி தங்களாகவே இருப்பது – இதுதானா ஒரு உண்மையான இந்துவின் வரையறை? இந்த குறிப்பிடத்தக்க எழுத்துக்களின் தொகுப்பில், வர்ணனை மற்றும் உவமைகளில் தெளிவாகவும், சிந்தனையில் தத்துவார்த்தமாகவும், மனித நிலைக்கு உணர்வுபூர்வமாகவும் இருக்கும் பல விஷயங்கள் வெளிப்படுகின்றன. அதனால்தான், இது வெறும் 200 பக்கங்கள் மட்டுமே இருந்தாலும், அதை வெறுமனே “படித்துவிட” முடியாது. இதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட கவனம் தேவை.




இந்த எழுத்துக்கள், ஆதிஷ் தசீரின் வாழ்க்கையில் தனித்துவமான ஒரு இடத்திலிருந்து தோன்றுகின்றன. பாகிஸ்தானில் உள்ள மதநிந்தனைச் சட்டங்களுக்கு எதிராக நிலைப்பாடு எடுத்ததற்காக அவரது பாதுகாவலரால் படுகொலை செய்யப்பட்ட அவரது தந்தை, பாகிஸ்தான் அரசியல் வாதி சல்மான் தசீரை, அவர் ஒரு அந்நியராகவே பார்த்தார்; அவர் இந்திய பத்திரிகையாளரான தனது தாய் தவ்லீன் சிங் மற்றும் அவரது பாட்டியால் இந்தியாவில் வளர்க்கப் பட்டார், தவ்லீன் சிங் போர்களைப் பற்றி எழுதிய முதல் இந்தியப் பெண்களில் ஒருவர்; அவர் இந்தியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் படித்தார்; 2019-ல் அவரது வெளிநாட்டு இந்திய குடியுரிமை (OCI) அந்தஸ்து அரசாங்கத்தால் ரத்து செய்யப்பட்டது, இதனால் அவரது சொந்த நாட்டிற்கு மீண்டும் வருவதற்கான தடை ஏற்பட்டது, இருப்பினும் அவர் அப்போது ஐந்து புத்தகங்களை எழுதியிருந்தார், அதில் நான்கு இந்தியாவில் அமைந்தவை. இது 40 வயதுக்கு குறைவான தசீருக்கு ஒரு பெரும் அடியாக இருந்தது. இதைப் பற்றி அவர் எழுதுகிறார்: “ஒருவர் தன் நாட்டை இழப்பது என்பது ஒரு அந்தரங்க அவமானத்தை அறிந்துகொள்வது போன்றது... உங்கள் நாடு உங்கள் சுய உணர்வுடன் மிகவும் பிணைந்துள்ளது, அது போய்விடும் வரை அது எவ்வளவு ஒரு சமநிலைப்படுத்தியாக இருந்தது என்பதை நீங்கள் உணருவதில்லை. நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்ட சில விஷயங்களில் இதுவும் ஒன்றாகும், மேலும் இதுதான் மற்ற இடங்களைப் பற்றிய நமது ஆர்வத்திற்கு அடிப்படையாகும்.”

இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சமீபத்திய பயணங்கள் முழுவதும் தன் வீட்டை இழந்த துயரத்தை அவர் சுமக்கிறார்; இருப்பினும், அவர் மற்ற நிலங்களையும், மற்ற மக்களையும் ஆராய்ந்து, அவர்களின் வரலாற்றை ஒன்றாக இணைக்கும்போது, அது ஒரு அமைதியான அழுகையாக மேற்பரப்பிற்குக் கீழே இருக்கிறது . புத்தகத்தின் பயணம் இஸ்தான்புல்லில் தொடங்குகிறது, அங்கு “ஒருவர்




தொடர்ச்சியான கலாச்சார மாறுபாட்டு நிலையில் வாழ்கிறார்". 15 ஆண்டுகளுக்கு முன்பு அந்த நகரத்திற்குச் சென்றபோது தனக்குள் இருந்த தீர்க்கப்படாத வேறுபாடுகளைப் பற்றி அவர் பேசுகிறார்.

இந்த தொகுப்பில் இஸ்தான்புல் அத்தியாயம் மிகவும் உள்ளுணர்வுடன் எழுதப்பட்ட பகுதி. அவர் உஸ்பெகிஸ்தான், மொராக்கோ, ஸ்பெயின், மெக்சிகோ, இலங்கை, பொலிவியா, மங்கோலியா மற்றும் ஈராக் வழியாகப் பயணிக்கும்போது, ஒவ்வொரு பயணத்தையும் ஒரு குறிப்பிட்ட கோணத்தின் வழியாக அனுபவிக்க முயற்சிக்கிறார், மேலும் ஒரு கவர்ச்சியான விவரிப்பில், வாசனை திரவியத்தின் மூலம் உணர்வுகளின் சமூக-அரசியல் பயணத்தையும் கூட மேற்கொள்கிறார். அவர் மெக்சிகோவிற்கு "ஸ்பானிஷ் காலனித்துவத்திற்கு பிந்தைய இன்றியமையாத மூலப்பொருளான - அரிசியைத் தேடி செல்கிறார். உடனே என்னுள் ஒரு கேள்வி எழுந்தது: ஏன் அரிசி? " இலங்கையில், அவர் தாமரையை பின்தொடர்கிறார், அந்த நாட்டின் தேசிய மலர் அல்லி என்றாலும், தாமரையை நீங்கள் அந்த நாட்டில் எல்லா இடங்களிலும் காணலாம். அல்ஜீரிய எல்லைக்கு அருகிலுள்ள மொராக்கோவின் கடைசி நகரமான எம்'ஹமிட்டில், அவர் ஒரு ஆலிவ் மற்றும் பேரீச்சம்பழ தோட்டத்தில் ஹோட்டல் உரிமையாளரான பருவுடன் அமர்ந்திருக்கிறார், அவர் ஒரு கதவை நோக்கி தசீரை வழிநடத்துகிறார்: "நான் அதைத் திறந்தேன், அங்கே, கரடுமுரடான கதவு சட்டகத்தில், கூர்மையான கருப்பு பிறை வடிவ மணல் மேடுகளின் எல்லையற்ற பரந்த வெளி இருந்தது. அது ஈர்க்கக்கூடியதாகவும், வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்கு அழகாகவும் இருந்தது, ஆனாலும் அமெரிக்காவின் அளவுள்ள இந்த வெறிச்சோடிய ஒரு எல்லையில் இந்த காலியான ஹோட்டலில் இருப்பதில் ஒரு விசித்திரமான பயத்தை நான் உணர்ந்தேன்."

பயணம், உங்களை நீங்களே நன்கு புரிந்துகொள்ள உதவுகிறது. ஆதிஷ் தசீரின் நேர்த்தியான, தெளிவான சிந்தனைகள் மற்றும் உணர்வுகளின் வெளிப்பாட்டின் மூலம், நாமும் நமக்கு வெளியேயும் உள்ளேயும் பயணிக்க உத்வேகம் பெறுகிறோம்.

சுபா சுந்தர் தனது முதல் புத்தகமான, சிறுகதைகளின் தொகுப்பான, பூம்டவுன் கேர்ல் (ரோட்டரி நியூஸ், மார்ச் 2024) உடன் இந்த பத்தியில் தோன்றிய பிறகு, தனது முதல் நாவலான, "ஆப்ஷனல் பிராக்டிக்கல் ட்ரெயினிங்" உடன் மீண்டும் வந்திருக்கிறார். தலைப்பு ஒரு சுய உதவி கையேடு போல் ஒலித்தால், அந்த எண்ணத்திற்கு எதுவும் நெருக்கமாக இருக்க முடியாது. OPT என்று அழைக்கப்படுவது, அமெரிக்காவில் சர்வதேச மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பை முடித்த பிறகு விண்ணப்பிக்கக்கூடிய ஒரு வருட தற்காலிக வேலையைக் குறிக்கிறது. எலக்ட்ரிக் லிட்-இல் சாரா அஞ்சும் பாரிக்கு அளித்த ஆன்லைன் நேர்காணலில், சுபா கூறுகிறார் "இது ஒரு புலம்பெயர்ந்தோரின் கதை, ஆனால் இது ஒரு புலம்பெயர்ந்தோர் தங்கள் கதையைச் சொல்வது போல் இல்லை, மாறாக அமெரிக்கர்கள் இந்த இளம் பெண்ணிடம் சொல்லும் விஷயங்களில் அமெரிக்காவை பிரதிபலிக்கும் ஒரு கதை. அவள் மிகவும் இளமையானவள்... மற்றும் மக்கள் அவளிடம் சொல்லும் விஷயங்கள் இந்த புதிய சூழலில் அவளது அடையாள உணர்வை உருவாக்கும். மேலும் அவை அமெரிக்கா என்ன என்பதையும் பிரதிபலிக்கின்றன." நேர்காணல் செய்பவர் அழைப்பது போல, இந்த குரல்களின் நாவலில், கதாநாயகி பவித்ரா, பாஸ்டனில் உள்ள ஒரு பள்ளியில் ஒரு வருடம் கற்பிக்கும் போது, தொடர்ந்து "சிறு கோபங்கள், கலாச்சார சார்புத் தன்மை மற்றும் தவறான புரிதல்களை" எதிர்கொள்கிறார்.

உண்மையில், சுபா தனது 25 ஆண்டுகளுக்கும் மேலான கற்பித்தல் அனுபவத்துடன் இந்த நாவலை எழுதியுள்ளார், மேலும் இது அவர் வழங்கும் கதாபாத்திரங்கள், அவர்களில் பலர் ஆசிரியர்கள், மற்றும் அவர்களின் கற்பித்தல் முறைகள் ஆகியவற்றை பற்றி தகவல்களைத் தருகிறது. இந்தியாவில் உள்ள நிலைமைக்கு மாறாக, அமெரிக்காவில் "கல்வி என்பது சமுதாயம் வழங்கும் உரிமை; அதன்மூலம் படித்த, விழிப்புணர்வுள்ள குடிமக்களை உருவாக்க வேண்டும்" என்று அவர் சுட்டிக்காட்டுகிறாள்.

நாவலில், பவித்ரா எழுதுகிறார், "...ஓல்காவை ஒரு நல்ல ஆசிரியராக்கியது அவரது திறமை மட்டுமல்ல, அவரது ஈர்ப்பு தன்மை, அவரது பிராண்ட் - அது அவருக்கு எவ்வளவு தனித்துவமானது, எனவே மற்றவர்களுக்கு எவ்வளவு கவர்ச்சியாக இருந்தது என்பதுதான். ஒருவரின் கற்பித்தல் என்பது ஒருவர் நுழையும் ஒரு பாத்திரம் என்பதை மரிசா எனக்கு உணர்த்தினார் - மேலும் அந்தப் பாத்திரம் ஒருவரின் குணத்தின் நீட்டிப்பாக இருக்கும்போது, நடிப்பு மிகவும் இயல்பாக இருக்கும்." பவித்ரா இதை நியாயப்படுத்துகிறார், "நீங்கள் ஒரு பார்வையாளர் கூட்டத்தின் முன் நிற்கிறீர்கள், அது பெரும்பாலும் விரோதமான கூட்டமாக இருக்கும்..." மேலும் அவர் "நடித்த பாத்திரம் - நான் தேர்ந்தெடுத்த பாத்திரம் அல்ல, ஆனால் என் வேலையைச் செய்ய நான் எடுத்த முயற்சிகளின் விளைவு - எனது பார்வையாளர்கள் ஏற்கத் தயங்கிய ஒன்றாக இருந்தது" என்பதைக் கண்டறிவதாக கூறுகிறார்.

இறுக்கமான, தெளிவான, குழப்பமில்லாத, அதிர்வலைகள் நிறைந்த - இவ்வாறான சொற்களே இந்தச் சீரான, நன்றாக அமைக்கப்பட்ட நாவலைச் சரியாக விவரிக்கின்றன.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



## RID 3150

**RC கிரேட்டர் ஹைதராபாத்**

உள்ளூர் ரோட்டேரியன்கள் மற்றும் லயன்ஸ் சங்கத்தின் கூட்டு முயற்சியில் விஜயவாடாவில் உள்ள பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. ஜகிஸா அப்பாரல்ஸ் என்னும் நிறுவனம் பள்ளி சீருடைகளை நன்கொடையாக வழங்கியது.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3203

**RC பொள்ளாச்சி**

மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு பெத்தநாயக்கனூர் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்கு ரூ.1.65 லட்சம் மதிப்பில் மருத்துவக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் அருகில் உள்ள கிராம மக்கள் உள்பட சுமார் 10,000 பேர் பயனடைவர்.

## RID 3211

**RC கிரேட்டர் ஆலப்புழா**

கடந்த ஜூலை மாதம் 26 ஆம் தேதி கார்கில் வெற்றி தினம் கொண்டாடப்பட்டது. ரோட்டரி பூங்காவில் நடைபெற்ற வண்ணமிகு விழாவில் முன்னாள் ராணுவத்தினர் 21 பேர் கௌரவிக்கப்பட்டனர்.






## RID 3212

**RC ராமநாதபுரம் ஈஸ்ட் கோஸ்ட்**

ரோட்டரி வீல்ஸ் ஆஃப் லவ் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனை, பொது சுகாதார மையங்கள், முதியோர் இல்லங்கள், ரயில்நிலையங்களில் மொத்தம் 125 சக்கர நாற்காலிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் 120 ரோட்டரி சங்கங்கள் பங்கேற்றன.

## RID 3170

**RC கர்சோரம் சான்வோர்டெம்**

அறுபதுக்கும் மேலான சிறப்பு குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளூர் திரையங்கில் “சிதாரே ஜமீன் பர்” என்னும் ஹிந்தி திரைப்படத்தை கண்டு ரசித்தனர். சங்கத்தின் தலைவர் பால்கிருஷ்ண ஹோதார்கர் ஆதரவில் இந்த திரைப்படம் திரையிடப்பட்டது.



## RID 3231

**RC குடியாத்தம்**

ரோட்டரி சங்கம் தனது சமூகப் படைகள் மூலம் குழந்தைகளுக்கு களிமண் பொம்மைகள் மற்றும் இதர பொருள்களை தயாரிக்க பயிற்சி அளித்துள்ளது.



## RID 3240

**RC துர்காபூர் எலைட்**

சுற்றுச்சூழல் திட்டங்களின் ஒரு பகுதியாக சங்கத்தால் தத்தெடுக்கப்பட்ட ஒரு பூங்காவில் பறவைகளுக்கான கூடுகள், உணவுக்கான தட்டுகள், தண்ணீர் குடுவைகள் நிறுவப்பட்டன. இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# சூழலுக்கு இதமான மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள்

ப்ரீதி மேஹரா

*இந்தப் பண்டிகைக் காலத்தில் பசுமையைக் கொண்டாடுவோம்.*



உலகெங்கும் பண்டிகைகள் கொண்டாட்டங்களாக அமைகின்றன. மக்கள் நன்கு உடுத்துகிறார்கள், விருப்பம்போல் ஆடுகிறார்கள், தங்கள் துன்பங்களை மறந்து நல்ல மகிழ்ச்சியைப் பரப்புகிறார்கள். இப்போது, நம்மெதிரில் மூன்று மிகப் பெரிய பண்டிகைகள் காத்திருக்கின்றன: தீபாவளி, கிறிஸ்துமஸ், புத்தாண்டு.

சுமார் 50 ஆண்டுகளுக்குமுன்னால் யாராவது பண்டிகைகளைச் சூழலுக்கு இதமாகக் கொண்டாடவேண்டும் என்று எழுதினால், அவர்களை எல்லாரும் திட்டித் தீர்த்திருப்பார்கள், மகிழ்ச்சியைக் கெடுக்காதே என்று விமர்சித்திருப்பார்கள். ஆனால் இன்றைக்கு, நல்ல நேரங்களை மகிழ்ந்து கொண்டாடும்போது இயற்கைத் தாயைப்பற்றியும் எண்ணவேண்டும், அவரைச் சிரமப் படுத்தாமல் கொண்டாடவேண்டும் என்று நாம் அறிவோம். அதனால், இன்னும் அறிவார்ந்த, பொறுப்பான குடிமக்களிடம் பேசுகிறேன் என்ற நம்பிக்கையுடன் நான் இந்தக் கட்டுரையைத் தொடங்குகிறேன், இன்னும் தூய்மையான, இன்னும் பசுமையான மகிழ்ச்சிக் கொண்டாட்டம்பற்றிய சில தகவல்களைப் பகிர்ந்துகொள்கிறேன்.

முதலில், ஒரு முன்குறிப்பு: எனக்குப் பண்டிகைகள் மிகவும் பிடிக்கும், அவை கொடுக்கிற கலப்படமில்லாத மகிழ்ச்சி, அன்பை நான் விரும்புகிறேன். சென்ற மாதம் விநாயகர் சதுர்த்திக் கொண்டாட்டம் நடைபெற்றது. சென்னையில் நான் வாழும் குடியிருப்பில் இந்த நிகழ்ச்சி மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. பல நாட்களாக விநாயகருக்கு வழிபாடுகள் செய்யப்பட்டன, ஒரு பந்தல் அமைக்கப்பட்டு அங்கு விநாயகர் சிலை ஒன்று நிறுவப்பட்டது. பின்னர் அந்தச் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டுக் கடலில் கரைக்கப்பட்டது.

இந்த வழிபாட்டைப் பார்க்கும்போது, தில்லியில் என் நண்பர் ஒருவர் விநாயகர் சதுர்த்தியை எப்படிக் கொண்டாடினார் என்று நான் எண்ணிப் பார்த்தேன். அவர்

ஒவ்வோர் ஆண்டும் தன் வீட்டில் ஒரு விநாயகர் சிலையை நிறுவுவார், சிலையைக் கரைக்கவேண்டிய நாளில் அவர் ஒரு வாளியில் கரைப்பார். சுமார் பத்து நிமிடங்களில் அந்தச் சிலை கரைந்துவிடும், அந்தத் தண்ணீர் செடிகளில் ஊற்றப்படும்.



இதுபோன்ற சிறிய, சிந்தித்துச் செய்யப்படுகிற நடவடிக்கைகள்தான் ஒரு பசுமைப் போராளியை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காண்பிக்கின்றன. நாம் சிறிது முயற்சி எடுத்தால், இந்த மாதம் ஒரு பசுமைத் தீபாவளியைக் கொண்டாடலாம். இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? முதலில், புகையை உமிழும் பட்டாசுகள் காற்றுத் தரம் குறைவதற்கான மிகப் பெரிய காரணமாக இருப்பதை அறியவேண்டும், அவை குழந்தைகள், சிறுவர்கள், உடல்நலம் குறைந்தோர், முதியவர்களுக்குப் பெரிய நல ஆபத்து என்பதை உணரவேண்டும். நாம் அப்படிப்பட்ட பட்டாசுகளை வாங்காமல் இருந்தால், அவை சுற்றுச்சூழல், நலத்தில் உண்டாக்கும் பாதிப்புகளை நம் குழந்தைகளுக்கு விளக்கினால், சுற்றுச்சூழல் போரில் பாதியை வென்றுவிடலாம்.

பெரிய ஒலியுடன் வெடிக்கிற பட்டாசுகளைப் பயன்படுத்தினால் நம் நகரங்களின் ஒலி மாசு கூடுகிறது. அவற்றைத் தவிர்ப்பது அல்லது குறைப்பது நல்லது.

இந்தத் திருவிழாவை வளங்குன்றாததாக ஆக்குவதற்கு நாம் செய்யக்கூடிய இன்னொரு செயல்பாடு, புதிய உடைகளை வாங்காமல், நம்மிடம் உள்ளவற்றுள் சிறந்த உடைகளை அணிந்துகொள்வது. இதன்மூலம் தீபாவளியின்போது நம் கார்பன் அடித்தடம் குறையும். பிரசாதம் கொடுக்க இலைத் தட்டுகள் அல்லது இன்னும் பெரிய, இலை அல்லது கரும்புச் சக்கையால் ஆன தட்டுகள், மரக் கரண்டிகளைப் பயன்படுத்துங்கள். இந்தியாவில் ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டிருந்தாலும், மலிவான பிளாஸ்டிக் கரண்டிகள் நாடுமுழுவதும் பரவலாகப் பயன் படுத்தப்படுகின்றன. இது ஒரு சோகமான உண்மை.

நீங்கள் ஒரு மிகப் பெரிய குடியிருப்பு அல்லது வளாகத்தில் வசிக்கிறீர்கள் என்றால், தண்ணீர் குடிப்பதற்கு PET புட்டிகளைப் பயன்படுத்தாமல் இருக்க முயல்வது நல்லது. அதே நேரம், அதை உங்களால் தவிர்க்க இயலவில்லை என்றால், அவற்றைப் பொறுப்பான முறையில் திரட்டி அகற்றுவதற்கான ஓர் அமைப்பை உருவாக்குவது நல்லது. வணிக வளாகங்கள், ரயில்வே நிலையங்கள், மற்ற பொது இடங்களில் நிறுவப்பட்டிருக்கிற, பயோக்ரக்ஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தானியங்கிப் புட்டித் தூளாக்கும் இயந்திரங்கள் மிகவும் பயனுள்ளவை. இந்த இயந்திரத்தில் நீங்கள் காலியான PET புட்டியை நுழைத்தால் போதும்; அது அந்தப் புட்டியைச் சிதைத்துவிடுகிறது, அதன் தூளை மறுசுழற்சி செய்து மற்ற பொருட்களை உருவாக்குகிறது.

கிறிஸ்துமஸையும் உண்மையான பசுமைத் திருவிழாவாக மாற்றலாம். ஒவ்வோர் ஆண்டும் உங்கள் கிறிஸ்துமஸ் மரத்தை அழகுபடுத்து வதற்கு அதே பொருட்களைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தலாம். இதன் மூலம் இளைய தலைமுறையினரின் சிந்தனை மற்றும் எதிர்பார்ப்புகளையும் பெருமளவு மாற்றலாம்.

கிறிஸ்துமஸின் மகிழ்ச்சிகளில் ஒன்று, அலுவலகங்கள் அல்லது வகுப்பறைகளில் இரகசியக் கிறிஸ்துமஸ் தாத்தா விளையாட்டு. இங்கு ஒவ்வொருவரும் இன்னொரு நண்பருக்குக் கிறிஸ்துமஸ் பரிசு உருவாக்குகிறார்கள். யார் யாருக்குப் பரிசளிப்பது என்று சீட்டுக் குலுக்கிப் போட்டுத் தீர்மானிக்கப்படுகிறது. நான் பங்கேற்ற ஓர் இரகசியக் கிறிஸ்துமஸ் தாத்தா விளையாட்டில், பரிசுகள் எளிமையாக இருக்கவேண்டும், ரூ.100க்குக் குறைவான மதிப்புள்ளவையாக இருக்கவேண்டும், அவற்றை நீங்களே உருவாக்கியிருக்கவேண்டும், அல்லது, அவை பசுமைப் பொருட்களாக இருக்கவேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் இருந்தன. இதன்மூலம் ஒவ்வொருவரும் சிந்திக்கத் தொடங்கினார்கள், சூழலுக்கு இதமான பல பரிசுகளைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள், அவற்றை நண்பர்களுக்குப் பரிசளித்தார்கள். மக்கள் மிகவும் புதுமையான பரிசுகளை உருவாக்கினார்கள்.

உங்கள் கொண்டாட்டங்களின் போது, கிளம்புவதற்கு முன்னால் அந்த இடத்தைத் தூய்மைப்படுத்துவது, குப்பைகளை ஈரக் குப்பை, உலர் குப்பைத் தொட்டிகளில் பிரித்துப் போடுவது போன்ற விதிமுறைகளைச் சேர்க்கலாம். இதன் மூலம் கொண்டாட்டங்களை நடத்து வோருடைய வேலைப்பளு குறையும், நமக்கு ஒரு நல்ல பழக்கம் கிடைக்கும்.

நிறைவாக, புத்தாண்டுக்கு ஏற்ற ஒரு சிறந்த விளையாட்டு, வரவிருக்கும் ஆண்டில் பசுமையான பழக்கங்களைப் பின்பற்ற உதவுகிற புத்தாண்டு வாக்குறுதிகளைப்பற்றிச் சிந்திக்கவேண்டும், அவற்றைப் பின்பற்றவேண்டும் என்று விருந்தினர் களைக் கேட்டுக்கொள்வது!

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதி வருகிறார்.

Rotary PEOPLE OF ACTION

# ஒருநாளைக்கு 50,000 மரக்கன்றுகள் நடுதல்

கௌதம் ஷ்ரேஷ்தா

ஜூலை மாதத்தின் ஒரு நாள் காலையில், மவுன்ட் எவரெஸ்ட் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்களான ரவி லாமிச்சானே, சந்த் ரானா, சுமன் ரத்னா துலாதர் ஆகியோருடன் நேபாளத்தின் மத்தியப் பகுதியில் மரக்கன்றுகளை நடும் பயணத்தில் நான் இணைந்தபோது என்னுள் உற்சாகம் துள்ளியது. லலித்பூர் மாவட்டத்தின் தெற்கு பகுதியில் உள்ள பதானிலிருந்து சுமார் 23 கி.மீ. (14.2 மைல்கள்) தொலைவில் உள்ள டால்சோகி கிராமத்துக்கு நாங்கள் சென்றோம். இது கடல் மட்டத்துக்கு மேலே 1,200 முதல் 2,300 மீட்டர் (3,900 முதல் 7,545 அடி) உயரத்தில் உள்ள மலைப்பகுதியாகும்.

மரங்களை பெருமளவில் நட்டு வளர்ப்பதில் பெருமை மிக்க வரலாற்றைக் கொண்டுள்ளது ரோட்டரி மாவட்டம் 3292. ஆனால், இந்த ஆண்டு ஒரே நாளில் 50,000 மரக்கன்றுகளை நடுவது எங்களது லட்சியமாக இருந்தது. நேபாளம் மற்றும் பூடான் முழுவதிலும் சமூகங்கள், சமூக சேவை அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அரசு அமைப்புகள் ஆகியவற்றை ஒன்றிணைப்பதன் மூலம் இந்த மரம் நடும் முயற்சியை வரலாற்றில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வாக மாற்றுவதே எங்கள் நோக்கமாக இருந்தது.

ஒரு மணிநேரம் வளைந்து, நெளிந்திருந்த சாலைகளில் பயணித்த பிறகு நாங்கள் டால்சோகியை சென்றடைந்தோம். பின் அங்குள்ள ரோட்டேரியன்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தினருக்காக சிறிது நேரம் காத்திருந்தோம். அதற்குள் பனி விலகி, வானம் தெளிவானது. சில்லென்ற காற்று எங்கள் கால்களைத் தழுவிச் சென்றது.

மாவட்ட ஆளுநர் வினோத் கொய்ராலாவின் கண்ணோட்டத்தில் தொலைநோக்குப் பார்வை: “நாம் ஒன்றாக இணைந்தால் நமது சமூகத்தினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் நீடித்த பசுமையான மரபை உருவாக்க முடியும். இது வெறும் மரம் நடுவது மட்டுமல்ல, இது நம்பிக்கையை விதைப்பது மற்றும் சமூக உறவுகளை பலப்படுத்துவதும் ஆகும்”.

இளைஞர்களும் முதியவர்களும் மரக்கன்றுகளை எடுத்துச் சென்று, ஒருவருக்கொருவர் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டனர். நாங்கள் பூங்காக்கள், மலைப்பகுதிகள், பள்ளிகளுக்கு அருகில், பொது இடங்களில், போலீஸ் நிலையங்களில் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் மரக்கன்றுகளை நட்டோம். நகரம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள நிலப்பரப்புகளை நம்பிக்கையுடன் மெல்ல மெல்ல பசுமையாக மாற்றினோம்.



மரங்களை நட்டு முடித்த பிறகு, மரங்கள் வாடிவிடாமல் செழித்து வளர்வதை உறுதி செய்வதற்காக ரோட்டரி சங்கங்கள், பங்குதாரர்களுடன் செடிக்கு வேலி அமைப்பது, தினமும் தண்ணீர் ஊற்றுவது அதை கண்காணிப்பது குறித்து ஆலோசனை நடத்தின. இந்த வழியில் எங்கள் திட்டத்தின் நிலைத்தன்மை கட்டமைக்கப் பட்டது.

“நன்மைக்காக ஒன்றுபடுவோம்” என்னும் ரோட்டரி தலைவரின் செய்தி எங்களை மிகவும் ஈர்த்தது. கூட்டு நடவடிக்கை எப்படி பிரகாசமான, பசுமையான எதிர்காலத்தை கட்டமைக்க முடியும் என்பதன் நிரூபணமாக எங்கள் முயற்சிகளை கருதுகிறோம். எங்களின் மரம் நடும் பிரசாரம் ஒரு நிகழ்வுக்கும் மேலாக ஓர் இயக்கமாக இருந்தது.

எழுத்தாளர் RID 3292, (நேபாள்) RC யாலாவின் முன்னாள் தலைவர்.



*ஒரே நாளில் 50,000 மரங்கள் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, நேபாள ரோட்டேரியன்கள் டால்சோகி கிராமத்தில் மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர்.*

## RI தெற்காசிய அலுவலகத்திலிருந்து செய்தி

**இந்திய ரோட்டரி அறக்கட்டளைக்கு CSR விருதுகள்**

புது தில்லியில் பிராண்ட்ஸ்குளோபல் மீடியா நடத்திய இந்திய CSR மாநாடு 2025ல், நாட்டளவிலான சிறந்த CSR செயல்படுத்தல் விருதை வென்றது ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா). இந்த விருது RF(I)ன் இந்தியா முழுக்கச் செயல்படுத்தப்பட்ட, பரவலான, தாக்கமுள்ள, பலவிதமான சமூகங்கள், முன்னேற்றப் பிரிவுகளில் நீடித்த மாற்றத்தை உருவாக்கிய CSR முன்னெடுப்புகளைக் கொண்டாடுகிறது.

பொதுத் துறை நிறுவனங்கள் (PSUகள்), அரசு அமைப்புகள், பெருநிறுவனங்கள், பொதுக் கொள்கை மற்றும் CSRக்காக அர்ப்பணிக்கப்பட்ட டிஜிட்டல் தளமான இந்திய PSU CSR தாக்க விருதுகள் 2025ல், ஆண்டின் மிகச் சிறந்த NGO விருதை வென்றது RF(I).

**2025–26 ஆண்டு நிதிச் சிறப்பு விருது**

ஆகஸ்ட் 31, 2025 அன்று நிறைவடைந்த ஆண்டு நிதி முன்கூட்டிய சாதனையாளர் விருதில் பங்கேற்றதற்கு நன்றி. இப்போது, நாங்கள் ஒரு புதிய வாய்ப்பை அறிமுகப்படுத்துகிறோம்: 4, 5, 6, மற்றும் 7 பகுதி மாவட்டங்களுக்கு மட்டுமான ஆண்டு நிதிச் சிறப்பு விருது. இதற்குத் தகுதி பெற, மாவட்டங்கள் ஆண்டு நிதிக்குக் குறைந்தது $250,000 திரட்டவேண்டும், அல்லது அக்டோபர் 31க்குள் (Dishaன் போது அமைக்கப்பட்ட) தங்கள் AF இலக்கில் 50%ஐ எட்டவேண்டும். வெற்றியாளர்கள் நவம்பர் 2025ல் தில்லி சந்திப்பின் போது பெருமைப்படுத்தப்படுவார்கள்.


**நன்கொடை நிறுவல் நிதிச்சவால் விருதுகள்**

TRF அறங்காவலர் பரத் பான்ட்யா வழிகாட்டுதலின் கீழ், 4,5,6 & 7 பகுதிகளுக்கான நன்கொடை நிறுவல்/மிகப் பெரிய பரிசுகள் அறிவுறுத்துநர்கள் ரோட்டரி ஆண்டு 2025–26ல் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மாவட்டங்களுக்கான நன்கொடை நிறுவல் நிதி விருதை அமைத்துள்ளார்கள்.

2025 ஜூலை 1 முதல் அக்டோபர் 31க்குள் குறைந்தது $50,000 பங்களிக்கும் மாவட்டங்கள் சுழற்கோப்பைகள், ஒவ்வொரு பகுதிக்குமான விருதுகளுக்குத் தகுதிபெறும். நன்கொடை நிறுவல் நிதிக்கான பங்களிப்புகள் உலகெங்குமுள்ள ஏழைச் சமூகங்களுக்கான தொடர்ந்த ஆதரவை உறுதிசெய்கின்றன. மேலும் விவரங்களுக்கு, உங்கள் பகுதி நன்கொடை நிறுவல்/மிகப் பெரிய பரிசுகள் அறிவுறுத்துநரைத் தொடர்புகொள்ளுங்கள்.■



LBW



# சாலைகளில் உள்ள ஆபத்துகள்

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

உங்களை எப்போதாவது ஒரு பசுமாடு துரத்தி இருக்கிறதா? எனக்கு நடந்திருக்கிறது. என்னை நம்புங்கள். அது உங்களுக்கும் ஏற்படக்கூடிய மிக பயங்கரமான அனுபவமாக இருக்கும். 1976-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். ஒருநாள் நான், அரசு குடியிருப்பில் வசிக்கும் எனது சகோதரியை சந்திக்க சென்றுகொண்டிருந்தேன். அது அரசாங்க குடியிருப்பு என்பதால் பொதுவாக விலங்குகள் சாலையில் சுற்றித் திரியவோ, படுத்து பதுங்கியிருக்கவோ அல்லது உணவுக்காக இரைதேடவோ வாய்ப்பில்லை.

எனது மோட்டார் சைக்கிள் குடியிருப்புக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்தது. எனது சகோதரியிடம் பேசிவிட்டு விடைபெற்று வெளியே வந்தபோது, குண்டும் குழியுமாக இருந்த 30 அடி சாலையின் மறுபக்கத்தில் ஒரு பசுமாடு நின்றுகொண்டிருந்தது. எதையோ மென்று கொண்டிருந்த அந்த மாடு, அமைதியாக என்னை பார்த்துக் கொண்டிருந்தது. அப்போது எந்த அச்சுறுத்தலும் இல்லை. நான் பைக்கில் அமர்ந்து வண்டியை ஸ்டார்ட் செய்தபோது, எந்த காரணமும் இல்லாமல் மாடு என்னை நோக்கி ஓடிவந்தது. மற்றவர்களைப் போலவே நானும் இதை எதிர்பார்க்கவில்லை. எனவே பீதியில் நான் பைக்கை ஸ்டார்ட் செய்து கியரை போட்டேன். ஆனால், பெட்ரோல் வரும் குழாயை திறக்க மறந்துவிட்டேன்.

அடுத்த சில நிமிடங்களில் பைக் நின்றுவிட்டது. அந்த மாடு என்னை நோக்கி ஓடி வந்தது. சுயமரியாதையுள்ள எவரும் செய்யும் காரியத்தை நானும் செய்தேன். மோட்டார் சைக்கிளை அப்படியே கீழே போட்டுவிட்டு 5 அடி உயர வேலியைத் தாண்டி மற்றொருவர் வீட்டுத் தோட்டத்தில் குதித்தேன். அதன்பின் வேகமாக வந்த அந்த மாடு, அந்த இடத்திலிருந்து வேறு எங்கோ சென்றுவிட்டது. ஆனால், நான் முட்டாள்தனமாக அதிர்ச்சியில் நடுங்கிக் கொண்டிருந்தேன். என்னால் நிற்கமுடியவில்லை. கை, கால்கள் நடுங்கின. நான் மீண்டும் இயல்பு நிலைக்கு வருவதற்கு சில நிமிடங்களானது. பின்னர் ஒருவழியாக பைக்கை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினேன். இது நடந்தது 49 ஆண்டுகளுக்கு முன்னால். அதை நினைத்தால் இன்றும் எனக்கு உடம்பு சிலிர்க்கிறது.

அடுத்த சம்பவம் 2012-ல். அப்போது நான் ஒருவருடம் சென்னையில் இருந்தேன். வழக்கம்போல் ஒருநாள் காலை 5 மணிக்கு நடைபயிற்சிக்குச் சென்றேன். அப்போது வானம் இருள்சூழ்ந்திருந்தது. போக்குவரத்து நடமாட்டமும் இல்லை என்றுதான் நினைக்கிறேன். அந்தப் பகுதியில் உள்ள ஒரு தெருவில் நான் சென்றுகொண்டிருந்தபோது, திடீரென வீட்டினுள்ளிருந்து ஒரு இருசக்கர வாகனம் சீறிக்கொண்டு வெளியே வந்தது. நான் மட்டும் சுதாரித்திருக்காவிட்டால் அந்த வாகனம் என் மீது மோதியிருக்கும். எனது கணுக்காலில் ஏற்பட்ட காயத்தை நினைத்தால் இப்போதும் மனது வலிக்கிறது. அப்போதிலிருந்தே நான் பசுமாடு மற்றும் இரண்டு சக்கர வாகனம் என்றால் பயப்படுகிறேன். இப்போது புதிதாக அறிமுகமாகியுள்ள மின்சார வாகனங்கள் எந்த சத்தமும் எழுப்புவதில்லை. அவை பாம்புகளைப் போல அமைதியாக கடந்து செல்கின்றன. ஓட்டுநர் செல்போன் பார்ப்பதையோ அல்லது பேசுவதையோ நிறுத்தாவிட்டால் நிச்சயம் உங்கள் மீது மோதுவார்.

சில வாரங்களுக்கு முன்புவரை சாலைகளில் ஏற்படும் ஆபத்துகளுக்கு சத்தமில்லாமல் அமைதியாகச் செல்லும் பசுமாடுகளும், சத்திமில்லாமல் செல்லும் மின்சார வாகனங்களும்தான் காரணம் என நினைத்திருந்தேன். பின்னர்தான் புதிய அச்சுறுத்தல் ஒன்று இருப்பது தெரியவந்தது. அது முதுகில் சுமக்கும் பைகள். எனக்கு இது நடந்தது. அது ஒரு பெரிய அலுவலக கட்டிடம். அங்கிருந்த மின்தூக்கியில் மூன்றுபேர் மட்டுமே இருந்ததால் நானும் உள்ளே செல்ல முற்பட்டேன். அந்த மின்தூக்கியில் இடவசதி அதிகம் இருந்தும் என்னால் உள்ளே செல்ல முடியவில்லை. நான் தொடர்ந்து உள்ளே செல்ல முயற்சித்தேன். மின்தூக்கியின் கதவுகள் மூடிக்கொண்டன. கீழ்நோக்கி அது செல்லத் தொடங்கியது. ஆனால், என் தோளை யாரோ அழுத்துவது போல இருந்தது. நான் கிட்டத்தட்ட நிலைகுலைந்து போனேன். மின்தூக்கியினுள் மூன்றுபேர் இருந்தனர். அவர்களில் இருவர் ஆண்கள். ஒருவர் பெண். மூவரும் முதுகில் சுமந்திருந்தனர். ஒவ்வொரு பையிலும் சுமார் 2 அடி நீளத்திற்கு பொருள்கள் நிரப்பப்பட்டிருந்தன. அதாவது மின்தூக்கியில் மேலும் மூன்றுபேர் நிற்கலாம் போல இருந்தது. அந்த மூன்றுபேர் மற்றும் அவர்கள் முதுகில் வைத்திருந்த பை இவற்றை மொத்தமாக கணக்கிட்டால் 9 பேர் உள்ளே ஆக்கிரமிப்பது போல் இருந்தது. என்னை சேர்த்து கணக்கிட்டால் நான் பத்தாவது நபர். அதனால்தான் என்னால் எளிதில் உள்ளே நுழைய முடியவில்லை.

எனவே நீங்கள் வெளியே செல்லும்போது பசுக்கள், மின்சார ஸ்கூட்டர்கள் மற்றும் முதுகில் சுமந்து செல்லும் பைகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். அவற்றால் நிஜமாக உங்களுக்கு காயங்கள் ஏற்படலாம். ■

# கான்க்ளேவ் தருணங்கள்



PRIP கல்யாண் பானர்ஜி (வலது)
மற்றும் PRID P T பிரபாகர்.





மேலே: PRID அசோக் மகாஜன் மற்றும்
RI இயக்குனர் M முருகானந்தம்.

இடப்புறம்: RI இயக்குநர் K P நாகேஷ் மற்றும்
PRID அனிருதா ராய்சௌத்ரி.

கீழே: RI இயக்குனர் நாகேஷ் மற்றும்
PRID ராஜு சுப்பிரமணியன்.





இடமிருந்து: RI இயக்குனர் நாகேஷ், PRIP K R
ரவீந்திரன் மற்றும் RI இயக்குனர் முருகானந்தம்.

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40

